உ

மீனாக்ஷி துணை.

கமலப்ரதாபன்.

இஃது

செருணாங்கூர் எம். கிருஷ்ணமூர்த்தி ஐயர் அவர்களால்

இயற்றப்பெற்றது.

இதற்குமுன் இந்நூலாசிரியர் இயற்றிய நாடகங்கள்

மத்தாப்பு சுந்தரம், சுகுணசுந்தரீயம்.

கும்பகோணம்

லக்ஷ்மீவிலாஸ அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை அணா 8.

முகவுரை.

நமது இந்தியநாடு பாலசூரியன் போன்று நாளுக்குநாள் முன்னேற்றமடைந்து வருகிறதற்கு, அனேகநாடகங்களும் நாவல்களும் பற்பலவிதமாய் பிரகாசித்து விளங்குகின்ற காரணமுமொன்றே. தன்கடமையறியாது தன்மட்டில் சௌக்கியத்தோடிருக்கும் ஒருவர் முதன்முதலில்பொழுதுபோக்குக்கென்று சிற்சிலநாடகங்களையும் நாவல்களையும் வாங்கிப்படிக்கிறார், படிக்க படிக்க இவைகளிலோர் உற்சாகமேற்பட்டு பின்னுமனேக புஸ்தகங்களையும் வாங்கிப்படிக்கிறார், படிப்பதின் காரணமாக தன்மறுப்பும், ஜாதியபிமானமும் தேசாபிமானமுமுள்ளவராகின்றார்கள். இத்தகைய நல்விஷயங்களை போதிக்கத்தக்கவல்ல நாடகங்கள் நாவல்களின் பெருமையை நவிலவுங்கூடுமோ? அறிவில் முதிர்ந்த ஆன்றோர்களின் முன்னிலையில் யானும் நாடகமெழுதத்துணிந்ததானது அன்னோர்களின் அபிமானமும், ஆதரிப்புவிசேஷமும், சகோதரபாவமுமேயன்றி வேறில்லை.

இந்நாடகத்திலடங்கப்பெற்றிருக்கும் விஷயங்களாவன:—

நம்பிக்கையாலடையும் நன்மையும், காதலாலடையும் கெடுதியும், கற்பாலடையும் புகழையும், பேராசையால் அடையும் துன்பமும், கர்வத்தாலடையும் பங்கமும், களவுத்தொழிலாலடையும் கேடையும், ஏதோ என் சிற்றறிவுக்கெட்டியவரை எழுதியிருப்பதால், அறிவு ஆற்றல்களின் மிக்கோர் இதனுட்காணப்பெறுங்குற்றங்குறைகளை தயவுசெய்து தெரிவிப்பின் அவற்றை வந்தனத்துடன் ஏற்று இரண்டாம்பதிப்பில் அவற்றை முறையே நீக்கி உரியவிடங்களிற் சேற்கவுஞ்செய்வேன்.

கும்பகோணம்
12—4—18.

இங்ஙனம்,
M. கிருஷ்ணமூர்த்தி ஐயன்.

நாடகபாத்திரங்கள்.

குடிலன்	குந்தளதேசத்தரசன்.
சாந்துலர்	முதல் மந்திரி.
காளமேகர்	இரண்டாவது மந்திரி, காளமேகரின் சகோதரர், யந்தமதி.
ப்ரதாபர்	இளவரசன்.
கோரபத்மன்	சைன்யாதிபதி.
மஹேசர்	ஓர் ரிஷி
பெத்தான் பெரியான்	சிறை காவலர்கள்.
நந்தகுமார்	ஓர் வீரன்.
விமலன் பானுமதி	காட்டுத்திருடர்கள்
விட்டல்தாஸ்	ஓர் பைத்தியக்காரன்.
கமலா	சாந்துலரின் மகள்.
சரஸா	கமலாவின் தோழி.
சுகா	ஓர் செம்படப்பெண்.

பிரபுக்கள் சேவகர்கள் முதலானவர்களுமுண்டு.

உ

மீனாக்ஷி துணை.

கமலப்ரதாபன்.

அங்கம் 1. களம் 1.

இடம் குடிலன் தர்பார்.

காலம் நடுப்பகல்.

பாத்திரம் குடிலன், சாந்துலர், ப்ரபுக்கள், மற்ற பரிவாரங்கள்.

சா:—அரசே! எப்பொழுதும் களக்கமற்றிருக்குந் தங்கள் வதனமேன் இன்று களக்கமுற்றிருக்கிறது?

குடி:—சாந்துலரே! சகல வளப்பமுமமபொருந்திய இக்குந்தள நாட்டிற்கே அரசனாகி அறிவில் முதிர்ந்த உம்மையும் அமைச்சராய்க்கொண்ட எனக்கென்ன குறைவிருக்கின்றது? ஒன்றுமில்லையே.

ப்ரபு:—ராஜேந்திரா! சாந்துலருரைப்பது தவறன்று. தங்களுடைய முகம் இன்று களக்கத்தோடுதானிருக்கின்றது.

குடி:—ப்ரபுக்காள்! ஒருவனுடைய யவ்வனமானது நீரிற்பிறக்குங் குமிழியையொக்கும், ஆக்கையோ அந்நீர்மேலெழுதியவெழுத்தாகும், செல்வமோ அந்நீரிலுண்டாகும் அலையை நிகர்க்கும்; இவ்வளவுடைய தேகத்தைக்குறித்துப்பலவிதமாக யோஜிக்கவேண்டுவதென்ன? ஏதோ சரீரக்கூறன்றி வேறில்லை.

சா:—மன்னவா! தாங்கள எச்சமாதானங் கூறினும் எங்களால் நம்பக்கூடவில்லை. தாங்களுக்கேதோ மனப்பிணி

யுண்டாயிருக்கும்போற்றேற்றுகிறது. அதனைக்கூறி ருல் நாங்கள் நிவர்த்திக்குமார்க்கத்தைத் தேடமாட் டோமா?

குடி:—அமைச்சரே! நீர் கூறுவதையுமொப்புக்கொள்கிறேன். கூடுமானதைத்தான் கூடியமட்டிற்பார்க்கலாம், கூடா ததை நினைத்து வருந்திப்பயனென்ன?

சா:—தன்னுயிர்போல் மன்னுயிரைக்காக்குந் தன்மையையு டையப தங்களுக்கு, கூடாததெனவுமொன்றிருக்கிறதா? வேந்தே! தங்களுக்குற்ற மனப்பிணியை அறிவித்தால் நங்களால் கூடுமானவரை அதை ஆற்ற முயலுகின் ரேம். தாங்கள் மனதிற்குள்ளேயே வைத்திருப்பதிற் பயனென்ன?

குடி:—சாந்துலரே!

மாணிக்கமுத்து வயிரப்பணிபூண்டு
ஆணிப்பொன் சிங்காதனத்திலிருந்தாலும்
காணித்துடலை நமன்கட்டியே கைப்பிடித்தால்
காணிப்பொன் கூடவரக்காணகிலமே நெஞ்சமே!

என்றார் மேலோர். இக்கட்டைக்குக் காபந்து நாம் எவ்வளவு செய்யினும் என்றைக்கேனுமொரு நாள் எமன் கரத்திடஞ் சேர்வதுதான். அப்பொழுது அவன் தேடிய பாவபுண்ணிய நீங்க மற்ற பாக்கியங்களொன் றும் பற்றிவரப்போவதில்லை. ஏதோ என் கன்மாவுக் குரிய ஜன்மாவை எடுத்து யான் அனுபவிக்கவேண்டி யதையு மனுபவித்தாய்விட்டது என்றே எண்ணிவிட் டேன்.

சா:—மன்னவா! தாங்கள் கூறுவதுமுண்மையே ஆயினும் மானிடர்க்குச் சதாயசு என்பருமமன் விதித்திருக்க. இதற்குள் தாங்கள் இம்மண்ணுசையை வெறுத்துக் கூறினுல், என்போன்ற இன்னம் மற்றபிரஜைகளையும் தம்போல ஆதரிப்பாரெவர்?

குடி:—சாந்துலரே! என்னுயுள்மீது யானே வெறுப்புக்கொள்ளவில்லை. நம் யாவரையும் படைத்த ப்ரும்மனே அவ்வாறு விதித்துவிட்டான். ஆகையால் நாமனுபவித்தவரை திருப்தியடையவேண்டுவதுதானே!

சா:—வேந்தே! என்ன காரணம்பற்றித் தாங்கள் அவ்விதங் கூறுகின்றீர்? அதை எங்களிடமுங் கூறவேண்டுகிறேன்.

குடி:—ஆயின் உம் வற்புறுத்தலுக்காகவேனுங் கூறுகின்றேன். இன்றைக்கெட்டாவது தினம் என் ஜன்மதினமல்லவா?

சா:—ஆம்.

குடி:—அன்று என் நக்ஷத்திரத்திற்குரிய கிரகத்திற்கு தோஷமேற்பட்டிருப்பதால், அன்றோடு என்னுயுளுமுடிகிறது.

சா:—அரசே! அத்தோஷத்தைப்போக்கத்தக்க சாந்தியைச் செய்தால் போகிறது. இதற்காகவா தாங்களிவ்விதங் கூறுகின்றீர்!

குடி:—நம் குலகுருவிடம் அதற்குரிய சாந்தியை விஜாரித்தறிந்தமட்டில் நம்மால் கூடாததென்றே தோற்றுகிறது.

சா:—மன்னவா! கூடாதகாரியத்தைச் சாந்தியென்றுரைக்க சாஸ்திரங்களிடங்கொடாதே. ஆகையாலது கூடுமானதாகத்தானிருக்கவேண்டும். எப்படிக்கிருப்பினும் தாங்கள் என்னிடந்தெரிவியுங்கள் அதை.

குடி:—நாகத்தினிடமிருந்து ஒரு வாரத்திற்குள் வெளிப்பட்ட ரத்னம் ஒன்றும், தன்னவயவத்தில் ஒரு ரோமத்திற்கும் சேதமில்லாத உயிருடைய சிம்மமொன்றும் அச்சாந்திக்கு முக்கியமாம். இந்த அசாத்தியமான காரியத்தை யாவரால் நிறவேற்றக்கூடும்?

சா:—ஐயனே! ஈதென்னப் புதுமையான சமாசாரமாகவிருக்கின்றது. இப்படியுமா தம் குலகுரு கூறியுள்ளார்?

குடி:—சாந்துலரே! இவ்விஷயம் யாவருக்கும் புதுமையாகத்தான் தோற்றும். நானுமிதுவரை கேள்விப்படாத விஷயமே. க்ரஹதோஷம் அவ்வளவு கடுமையெனக் கூறுகின்றார் நம்குலகுரு. அதனாற்றான் நானுமிதுவரைப்பிறரிடம் வெளியிடாதிருந்தேன். இந்தராஜ்யத்தை என்னிலும் எண்மடங்கதிகமாய் கவனிக்கக் கூடிய என் மைந்தன் ப்ரதாபனுக்கு மகுடஞ்சூட்டி நீங்கள் யாபேரும் சௌக்கியமாகவிருங்கள். என்காலமிவ்வளவுதான்.

சா:—வேந்தே! தங்களின் ஆபத்துக்குதவாத என் ஜன்மா இருந்தென்ன இறந்தென்ன? ஏதோ எனக்கு விடையளியுங்கள். என்னாற்கூடுமானவரை பார்த்துவருகின்றேன்.

குடி:—சாந்துலரே! அமைச்சரென்றாலுந் தாமேதான். என் பூர்வபுண்ணியத்தாலன்றிதாமெனக்குக்கிடைத்திருக்க மாட்டீரென்றே எண்ணுகிறேன். என்மீதிவ்வளவன்பு வாய்ந்த உம்மையா நான் கடுந்தொல்லைக்காளாக்குவது? பாவம், பாவம், வேண்டாம்; என்றைக்கிருப்பினும் நான் ஒரு நாளிறக்கவேண்டுபவன்தானே!

சா:—(செவிபுதைத்து) அரசே! இவ்வார்த்தை இனி என் செவிக்கெட்டவேண்டாம். இக்ஷணமே எனக்கு விடையளியுங்கள்.

ப்ரபு:—ராஜேந்திரா! தங்களுடைய வார்த்தையால் எங்கள் யாவருடைய மனமும் துயருறநேர்ந்தது; தங்களமைச்சரால்க்காரியம் கூடாததாயினும் யாங்களேசென்று கொண்டுவருகின்றோம், எங்களுக்கேனும் விடையளியுங்கள்.

குடி:—ப்ரபுக்காள்! நாகரெத்னமும் உயிருள்ள சிம்மமுங் கொண்டுவருவதென்றால் சாமான்யமா! சுயநன்மை, தேகாபிமானம் யாவையும் வெறுத்த ஒருவராற்செய்ய வேண்டியதல்லவா இது. உங்களுக்கிருக்கும் அன்பைப்போல கடவுளுக்கென்மீது கருணையிருந்தால் இப்படிக்கும் நேரப்போவதுண்டோ? வீணில் உங்களைத் துன்பத்திற்காளாக்க எனக்கிஷ்டமில்லை.

சா:—அரசே! உண்மையான ராஜபக்தியையுடைய ஒருவனுக்கு இதுவொரு பெருங்காரியமோ?

குடி:—சாந்துலரே! தூயமனதுடைய உம்மாலிது ஆகவுங் கூடும். ஆயினும் உம்மைப்போல என் மைந்தனும் என்மீது அத்யந்த ஆவலுள்ளவனல்லவா? நீங்களிருவரும் இருபுறமாகச்சென்றால் இந்த எட்டுதினத்திற்குள் அனேகமாய்க்கொண்டுவரவுங்கூடும். நீங்களிருவருமே சென்றுவாருங்கள்.

சா:—இப்பொழுதே இளவரசரிடந்தெரிவித்து அவரையுமனுப்பி நானும் சென்றுவருகின்றேன்.

(போகிறார்.)

ப்ரபு:—நாஜேந்திரா! ஒரு சமயம் அவர்கள் கொண்டுவரத்தவறினும் நாங்களேனுங்கொண்டுவருகிறோம். எங்களுக்கும் விடையளியுங்கள்.

குடி:—ப்ரபுக்காள்! நீங்களோ சுகவாசிகள். நாட்டின்பாதையைக்கடந்தறியீர்கள். வேட்டையின் காரணமாய் அடிக்கடி என்னுடன் அவ்விருவரும் வந்திருப்பதால் அவர்களையே அனுப்பினேன்.

ப்ரபு:—அரசே! தங்களது இரண்டாவது மந்திரியாகிய சாந்துலரின் சகோதர் இச்சமயமிருந்தால் இக்காரியத்தை வெகு சுலபத்தில் முடிப்பாரல்லவா?

குடி:—குலேபாதன் துஷ்டன் அவனை ஏன் இப்பொழுது ஞாபகப்படுத்துகிறீர்? என்றைக்கிருப்பினும் அக்கொடிய

வன் என் கரத்திலகப்படாதிருக்கப்போவதில்லை. அப்பொழுதே என் பகையைத்தீர்த்துக்கொள்கிறேன். நல்லது! நீங்கள் யாவரும் விடைபெற்றுக்கொள்ளலாம்.

(குடிலன் சென்றதும்)

ப்ரபு:—என் ஐயா! மகாராஜா எதற்காக காளமேகர்மீது இவ்வளவு கோபமாயிருக்கிறார்? உமக்குத்தெரியுமோ?

மற்றப்ர:—எனக்கொன்றும் உண்மை தெரியவில்லை ஆனால் ஒன்று மட்டிதமெ தெரியும். ராணியம்மாளுடைய மரணம் விஷத்தினால்தான். அதற்கொன்றும் ஆக்ஷேபணையில்லை. காளமேகரின் தன் கருத்திற்கிசையாததால் ராணிக்கு அவரே விஷமிட்டதாக பிரஸ்தாபம்.

ப்ரபு:—குணத்திற்சிறந்து சத்திய நெறியுடைய அவருமிக்காரியஞ்செய்வாரா? இதை நீரே யோஜித்துப்பாரும்.

மற்றப்ர:—எல்லாம் கடவுளுக்குத்தான் தெரியும் வாரும் போகலாம்.

காக்ஷி முடிவு.

அங்கம் 1. களம் 2.

இடம்—கமலாவின் உல்லாஸ மண்டபம்.

காலம்—மாலை.

பாத்திரங்கள்—கமலாவும் சரசாவும் வருகிறார்கள்.

கம:—சகி! இன்று நீ ஏதேனுமோர் புதியவிஷயங் கேள்விப்பட்டதுண்டோ?

சர:—கமலா! நேற்று இளவரசரும் நீயுமேதோ பேசிக்கொண்டிருந்தீர்களே! அஃதென்ன விஷயம்?

கம:—நானொன்று கேட்டால் பதில் நீ யொன்று கேட்கின்றாயே என்னை, சரஸா! நான் கேட்டதற்கென்ன சொல்கிறாய்?

சர:—உனக்கும் ப்ரதாபருக்கும் நடக்கப்போகும் மணவிஷயந்தானே கேட்கிறாய்?

கம:—போடி பைத்தியமே! அதுவல்லடி நான் கேட்டது. இன்று ஏதேனும் புதியவிஷயமாகக் கேள்விப்பட்டாயோவென்று கேட்டேன்.

சர:—என்ன! என்ன!! புதியவிஷயமா? எனக்கொன்றுந்தெரியாதே! அஃதென்ன கமலா?

கம:—(சந்தோஷமுகத்துடன்) நம்மரசரிருக்கின்றாரல்லவா! அவர் இன்றைக்கெட்டாவது நாள்......

சர:—அதற்குள் மறைக்கின்றாயே! சொல்லு முழுவதையும்.

கம:—போடி! நான் அதைச்சொல்லமாட்டேன்.

சர:—கமலா! என்னிடஞ் சொல்லக்கூடாதா அதை?

கம:—சொல்லுகிறேன் நீ வேறுயாரிடமுஞ்சொல்லக்கூடாது.

சர:—நான் சொல்வேனு? ஏகமலா! என்னிடத்தில் உனக்கென்ன அவ்வளவு அவநம்பிக்கை?

கம:—அப்படியெல்லாமொன்றுமில்லை. சொல்லட்டுமா?

சர:—சரிதான் இதற்கு வேறு நாள் நக்ஷத்திரம் பார்க்கவேண்டும்போலிருக்கிறது.

கம:—பாவம், எனக்குக்கூட விசனமாகத்தானம்மாயிருக்கிறது. நான் விசனப்பட்டு என்ன ஆகும்.

சர:—கமலா! நான் இவ்வளவு நேரமாகமன்றாடுகிறேனே, இன்னமும் உனக்கு மனம் வரவில்லையா? நீ விசனப்படக்கூடிய அவ்விஷயந்தானென்ன?

கம:—ஊருக்குப் பெரிய சனி ஒன்றிருக்கிறதல்லவா! அது ஒழியப்போகிறதாம்.

சர:—என்ன, என்ன, ஊருக்குப் பெரிய சனியா? கமலா! ஈதென்ன பரிகாசம். உண்மையைச்சொல்லமாட்டாயா? பிறகு உன்னிஷ்டம்.

கம:—நீ தெரிந்துகொள்ளாவிட்டால் அதுவும் என்குற்றமா? சரஸா! குடிலமகாராஜா இருக்கின்றாரல்லவா இந்நாட்டுக்கதிபதி, அந்தப் பெரிய சனியன் இன்றைக்கெட்டாவது தினத்தில் ஒழியப்போகிறதாம்.

சர:—கமலா! நீ என்ன இப்படியும் பேசத்துணிந்தாய். உனக்கு மாமனல்லவா? தவிரவும் இக்குந்தளதேசத்திறகே இறைவனல்லவா? இச்சமயம் நீ கூறியதைப்பிறரறிந்தால் என்னவாகும்?

கம:—அடி! அவனா இறைவன்? சரஸா! உன்மீது குற்றமில்லை, அவனைப்பிடித்திருக்கிற பைத்தியம் உன்னையும் பிடித்துக்கொண்டதுபோலும்,

சர:—ஆம், எனக்குத்தான் பிடித்திருக்கிறது, சற்றுமுன்பு நீ என்ன கூறினாய்? கொஞ்சம் ஞாபகப்படுத்திப்பார்.

கம:—என்ன கூறினேன்? நீயே தெரிவி!

சர:—'எனக்குக்கூட விசனமாயிருக்கிறதென்று நீ கூறவில்லையா? இதற்குள் அவர்மீதுனக்கு எவ்விதமாய் வெறுப்பேர்ப்பட்டது?

கம:—அதிலென்ன தவறு? அவன் இக்ஷணமே ஒழியாமல் இன்னமும் எட்டு தினங்களிருக்கப்போகிறானே என்ற விசனந்தானெனக்கு.

சர:—கமலா! இவ்வுலகமேபோற்றும் அம்மன்னனை, நீமட்டில் தூஷிக்க உனக்கென்ன கெடுதிசெய்தாரவர்?

கம:—அப்பப்பா! அவன் பேச்சையே பேசாதேயம்மா இனி. அவனை நினைக்குந்தோறும் என் உடல் நடுங்குகிறது.

சர:—ஏ கமலா! உன் தூஷணைக்குரிய அம்மன்னனது மைந்தரன்றோ ப்ரதாபர்? ஆனால் இனி நீ ப்ரதாபரையும நேசிக்கமாட்டாயல்லவா?

கம:—ஹிரணியனைத்தந்தையாகக்கொண்டு பிறந்தவரன்றோ ப்ரகலாதர்? தந்தையின் குணமென்ன தனயனது குணமென்ன அதை நாம் கதைகளிற் படித்தறியவில்லையா? அவ்விதமே என் ப்ராணநாதரும் ஜனித்திருக்கிறார். தவிரவும், குணமென்னும் குன்றே அவர், அவரை நான் எவ்விதம் நேசிக்காதிருக்கக்கூடும்?

சர:—அஃதெல்லாமிருக்கட்டும், கமலா, நேற்று இளவரசருன்னிடம் மிகுந்த நேரம் வார்த்தையாடிக்கொண்டிருந்தாரே! என்ன விஷயமாக?

கம:—அதற்கு நான் ஏதாவது பதிலுரைத்தேனோ?

சர:—அதை நான் கவனிக்கவில்லையே! கவனித்திருந்தால் இப்பொழுதெதற்காகக்கேட்கின்றேன்?

கம:—அக்கிழட்டு வெறியன் செய்கையை நினைத்து என்மனம் நொந்திருக்கும் அச்சமயத்தில், திடீரென என் ப்ராணநாதர் வந்துவிட்டார். இதை அவர் அறியாவண்ணம் நான் எவ்வளவு ஜாக்கிரதை யுடனிருந்தும் என் முகத்தைப்பார்த்த மாத்திரத்தில் எப்படியோ அறிந்துகொண்டார். பிறகு நான் என்ன செய்வேன்?

சர:—என்னதான் செய்தாய்?

கம:—உண்மையைக்கூறினால் எவ்வாறாகுமோ? அதற்காக நான் வேறொரு போக்காகக் கூறிவிட்டேன்.

சர:—கமலா! நகமுஞ்சதையும் போல் நாமிருவரும் இணைபிரியாதிருக்க, என்னையுமறியாமல் அவ்வரசன் உன்னிடம் நடந்துகொண்டதவறென்ன?

கம:—சகி! இதோபார் அவன் வரைந்தலிகிதத்தை;

(அந்த லிகிதத்தை வாங்கி சரஸா படிக்கிறாள்.)

சாந்துலரின் செல்வக்கமலியே!

மறுமொழிகூறாது மன்னனென்னை மணந்திடில் சினமது பொறுத்திடுவேனுன் சிற்றப்பன்மீதுள்ள; தவ

றெண்ணங்கொண்டிதை உன் தந்தைக்கறிவிக்கில் தப்பாமற் செல்குவீரிருவரும் எமனுலகு;

இப்படிக்கு,

குடிலமகாராஜன்.

சர:—ஆஹா! ஈதென்ன காலவேற்றுமை; இப்படியுமா அச்சண்டாளன் வரைந்தான். ஒரு பாவமுமறியாத காளமேகனை முன்னம் கொல்லப்பார்த்தான், பின்னும் உங்களுயிருக்கே உலைதேடிவிட்டானே பாதகன். ஐயோ! கமலா! இனி நீ என்ன செய்யப்போகிறாய்? இவ்விஷயத்தை நம் இளவரசருக்கேனுமறிவிக்கலாமா?

கம:—சரஸா! பொறு; என் தந்தை வருகின்றார். இச்சமயம் நாம்தைப்பற்றி ஒருவரிடமு மறி விக்கலாகாது

(சாந்துலர் வருகிறார்)

கம:—தந்தையே! நமஸ்கரிக்கின்றேன்.

சாந்:—குழந்தாய்! நம் மன்னரின் மனப்பிணியை ஆற்ற மருந்திற்காக நான் செல்லல்வேண்டும்; எனக்கு விடையளிப்பாய்!

கம:—என்னைத் தனிவிட்டுத் தாங்களெங்குச்செல்லப்போகுகிறீர்கள்? அப்பா! மன்னருக்குற்ற அம்மனப்பிணியாது?

சாந்:—கமலா! அவ்விஷபத்தைக் கூற இப்பொழுதெனக்கு நேரமில்லை. இன்று முதல் இன்னம் எட்டுதினத்திற்குள் நான் திரும்ப வந்து சேருகிறேன். கவலையுறாதே, எனக்கு விடையளிப்பாய் சீக்கிரம்.

கம:—அப்பா! மனப்பிணிக்கு மருந்துண்டா? அம்மருந்தின் விபரத்தை என்னிடங் கூறக் கூடாதா?

சாந்:—பெண்ணே! நீயோ சின்னஞ் சிறியவள், இவ்விஷயம் நீ அறிவையேல் உன்மனங் கலங்கும். பிறகு நான்வந்து சவிஸ்தாரமாய்த்தெரிவிக்கின்றேன். எனக்கு விடையளிப்பாய்.

கம:—அப்பா! அவ்விஷயத்தைத் தாங்கள் என்னிடம் கூறுத்திலுல் என் மனக்கலக்க மதிகமாகின்றது. அரசர், தங்களை மோசஞ் செய்யவே ஏதோ சூழ்ச்சி செய்திருப்பாரென்றே எண்ணுகிறேன்

சாங்:—என்ன! என்ன! கமலா! பொழியுமழைக்கும், செழித்த தர்மத்திற்கும் காரணம் அக்குடிலமன்னனல்லவா? அவரிடத்திலா நீ இச்சந்தேகங்கொண்டாய்? குழந்தாய்! கொஞ்சமும் அதைரியப்படாதே, உன் தோழியுடன் நீ விளையாடிக்கொண்டிரு, நான் சீக்கிரம் வந்து வந்துவிடுகிறேன். (போகிருர்.)

கம:—(தனிமொழி) ஈசனே! யான் மீண்டும் என் தந்தையைப் பார்க்கப்போகிறேனே? அப்பாதகனின் மோசக்கருத்தை அறிந்தால் இவருமிவ்விதஞ்செல்வாரா? ஐயோ! என் மடமைக்கு நான் யாரை நோவது? அப்பொழுதே இந்த விகிதத்தை நானவரிடங்காண்பித்திருக்கக்கூடாதா?

சர:—கமலா! ஏன் துயரப்படுகிருய், அவனன்றி ஓரணுவுமசையாது. வீணில் நீ வருந்தி என்ன ஆகப்போகிறது. அன்றியும் நம்மிளவரசரிருக்கும்வரை நமக்கு யாதொரு பயமுமில்லை.

கம:—அடி! இளவரசரின் மனப்பான்மையை நீயறியாய்; தன் வல்லமை முழுவதும் தந்தை பாலடைக்கப்பெற்றவர்; தந்தையின் தவறை தானறியினும் தெய்வமே கதியென்றுந்தான் கவனியார். இனி யான் அக்கொடியவன் கரத்தினின்றும் எவ்வழியிற் தப்புவேன்?

சர:—கமலா! கமலா! அதோ வந்துவிட்டார் இளவரசரும்.

கம:—சகி! இவ்விஷயமாய் நீ அவரிடமொன்றுங்கூறுதே, தெரிந்ததா; சந்தர்ப்பம் நேர்ந்தால் நானே தெவித்துக்கொள்ளுகிறேன். (ப்ரதாபன் வருகிருர்.)

ப்ர:—(தனிமொழி) என் காதலியை யான் நேற்றுக்கண்டது போல் ஒரு நாளுங்கண்டதில்லையே! அன்னவள் துயருக்குக் காரணம் யாதாயிருக்கலாம், என்னுற்கூடியவரைக்கேட்டும் உண்மையைக்கூறுகின்ருளில்லை, என் மனமும் ஒருவழியில் நின்றபாட்டைக்காணேம், இச்சமயத்திலா நான் என் தேவியைப்பிரிந்து செல்வது? ஆ! நாமொப்புக்கொண்டதை முடிக்காதவரை என் தந்தையின் நிந்தைக்காளாக நேரும். நாமினி ஒரு க்ஷணமுந்தாமதிக்கலாகாது. சீக்கிரம் கமலாவின் விடையைப்பெற்றுச்செல்லவேண்டும். கண்ணே! இன்றைக்குமேன் ஒருவாறுயிருக்கிருய்? நீ வருந்தமுற உனக்காரிடர்செய்தவர்? அல்லது நானே எதாகிலுந்தவறிச்செய்துவிட்டேனே? கமலா! என்னை நிமிர்ந்து பார்க்க மனமில்லையோ? அடி! என்னை எனிவ்விதம் வதைக்காமல் வதைக்கின்ருய்? இல்லாவிடில் என்னை மணப்பதற்கிஷ்டமில்லையோவுனக்கு? அதையேனும் ஒரு வழியாகக்கூறிவிடு.

கம:—ப்ராணநாதா! என்னவார்த்தை கூறினீர்? சந்திர சூர்யாள் திசைமாறி யுதிக்கினும், தங்கள்மீதுள்ள காதல் எனக்குச் சிறிதளவுங்குன்றுமோ? தெய்வசங்கற்பத்தால் தாங்கள் மற்றொருவளை மணக்கநேரினும் என் காதலழிவது இக்கட்டையழிந்தாலுமில்லை.

ப்ர:—கண்ணே! உன் வாயாலுமா கூறவேண்டும்—யான் மற்றொருவளை மணப்பேனென்று? அதனிலுமென்பிராணனே போனுல்தானென்ன, அப்மாதிரி ஒருபொழுதும் நினையாதே. கமலா! நான் ஒரு அவசரக்காரியமாக உன்னிடம் வந்தேன்.

கம:—என்ன! அவசரக்காரியமா? ப்ராணநாதா! அஃதென்ன?

ப்ர:—எட்டு தினங்களுக்குன்னைப்பிரிந்திருக்க எனக்கு நீ விடையளிக்கவேண்டும்.

கம:—ப்ராணநாதா! ஈதென்ன பரிகாசம்? நான் சற்றுங்கவலையற்றிருப்பதில் தங்களுக்கு மனமில்லையோ?

ப்ர:—கமலா! உன் கவலையிலும் சந்தோஷத்திலும் யான் பங்குக்குடையவனாயிருக்க, நானே உன் கவலைக்குக் காரணந்தேடுவேனா?

கம:—பிறகு எதற்காகத்தாங்களென்னைப் பிரிந்திருக்கவேண்டுமென்னுங்கூறினீர்?

ப்ர:—கண்ணே! என் தந்தையாருக்கு இன்றை எட்டாவது தினத்தில் கெண்டமொன்றிருக்கிறதாம்; அதற்குற்ற சாந்தியைச் செய்தால் அக்கண்டம் நிவர்த்தியாகுமாம், அச்சாந்திக்கு அவசியமான பொருளை நான் கொண்டுவருவதாக ஒப்புக்கொண்டேன்; அதன்பொருட்டு எனக்குச்செல்ல விடையளிக்கவேண்டும்.

கம:—ப்ராணநாதா! தாங்கள் தேடிப்போகும் அப்பொருள் யாது?

ப்ர:—தன் ஒரு உரோமத்திற்கும் பங்கமில்லாத உயிருடைய சிம்மமொன்றைக் கொண்டுவருவதற்கே!

கம:—ஆ, ஆ, ப்ராணநாதா! என்னைப் பரிக்ஷிக்கின்றீரா என்ன?

ப்ர:—உன்னிடத்திலுமா ஒளிப்பேன்? கமலா! முன்னம் உன் தந்தை இதை உன்னிடங்கூறவில்லையோ?

கம:—நமதரசரின் மனப்பிணி தீர்க்கும் மருந்தொன்றிற்குத் தாம் செல்வதாகக்கூறிச் சென்றார் என் தந்தை;

ப்ர:—அவரும் இவ்விஷயத்தை முன்னிட்டு நாகரத்னங்கொண்டுவருவதாக ஒப்புக்கொண்டே சென்றிருக்கிறார்.

கம:—ப்ராணநாதா! கதையிலுங்கேட்டறியாத இவ்விஷயத்தைத் தாங்களும் நம்பினீர்களா?

ப்ர:—கமலா! உண்மை எவ்வாறிருக்கினும் நான் ஒப்புக்கொண்டதை முடிக்காது நிறுத்தினால் உலகோர் என்னை ஏளனஞ்செய்வார்கள். தவிரவும் என் வல்லமையை அறியும்பொருட்டு ஒரு சமயம் என் தந்தையே என்னை பரீக்ஷை செய்திருக்கினுமிருக்கலாம், ஆகையால் இந்த எட்டு தினங்களுள் என் காரியத்தை முடித்துக்கொண்டே யான் திரும்புகிறேன். எனக்குச்செல்ல விடையளிப்பாய்.

கம:—ப்ராணநாதா! தாங்கள் அவசியஞ்செல்லத்தான்வேண்டுமோ?

ப்ர:—ஆம், கண்ணே! எட்டு தினங்களுள் வந்துசேருகிறேன்.

கம:—ஆயின், தாங்களுமெனக்கு விடையளிக்க வேண்டுவது தான்.

ப்ர:—எதற்காக! நீ எங்குச்செல்லப்போகின்றாய்?

கம:—ஆம், நானென்னசெய்கிறது? எனக்கு வேறு கதியில்லை.

ப்ர:—கமலா! நான் சிம்மத்தால் கொல்லப்படுவேனென்ற பயத்தினாலோ இம்மாதிரி கூறுகின்றனை? கொஞ்சமும் அச்சம்வேண்டாம். எனக்கு விடையளிப்பாய்.

கம:—ப்ராணநாதா! உங்கள் தந்தையின் உட்கருத்தை நீங்களறிந்திருந்தால் இச்சமயமென்னைத் தனிவிட்டுச்செல்வீரா?

ப்ர:—உன் பேதைமைத்தனத்தை நானென்னென்றுரைப்பேன்? கமலா! வீணில் எதற்காக என் தந்தையின்மீது தவறெண்ணங்கொள்கிறாய்?

கம:—ப்ராணநாதா! பேதைப்பெண்ணென்று என் வார்த்தையை அவமதிக்கவேண்டாம். பிறகு நம்மிருவர் மனமும் தீராத்துயரை அடைய நேரும்.

ப்ர:--சத்யமே உருக்கொண்ட என் தந்தையால் ஏற்பட்ட உன் சந்தேகத்திற்கு உன் அறியாமையே காரணம்.

கம:—பசுவின் தோல் போர்த்தபுலியை என்போன்றவர்கள் தான் அறிவார்கள்.

ப்ர:—கமலா! நானுன்மீதுகொண்ட காதலின் வலுவினாலன்றோ நீ இவ்விதமுங்கூறலானாய்?

கம:—ப்ராணநாதா! என்மீது கோபம்வேண்டாம், யாவருக்கும் விதியின் வழிதான் மதியுஞ்செல்லும்.

ப்ர:—நானுமுன்னை ஒருபொருட்டாய் எண்ணினேனல்லவா?

(ப்ரதாபன் அவ்விடத்தைவிட்டகலுஞ்சமயத்தில்)

கம:—பொறுங்கள், பொறுங்கள், ப்ராணநாதா! ஒரு வார்த்தை.

ப்ர:—(கோபக்குறியுடன்) என்ன?

கம:--மருமகளை மாமனிச்சிப்பது முறையோ?

ப்ர:—ஏன் கட்டுரை கூறுகின்றனை?

கம:—முறையோ, தவறோ? அதைமட்டிற் கூறுங்கள்.

ப்ர:—அது தவறுதான்.

கம:—அத்தவற்றிற்குத் தண்டனை உண்டல்லவா?

ப்ர:—கடுந்தண்டனை.

கம:—யார் விதிப்பது?

ப்ர;—விதிக்கத்தக்கவர்கள்தான்.

கம:—அவர்களே தவறி நடந்தால்?

ப்ர:—கடவுள்தான் தண்டிக்கவேண்டும்—அப்பாதகனை.

கம:—பாவம், பாவம், தந்தையைப்பாதகனென்றுங்கூறுதீர்கள்.

ப்ர:—ஆ, ஆ, என்ன? சண்டாளி.

கம:—ஆம், நான் சண்டாளிதான். இதோ பாருங்கள். (குடிலன் வரைந்தனுப்பிய லிகிதத்தைக்கொடுத்து கண்ணீருதிர்க்கின்ருள்.)

ப்ர:—(தனிமொழி) ஹா! ஈசனே! இதுவுங்காலத்தின்கொடுமையோ, இந்த அவமானத்தையான் யாரிடங்கூறுவேன்? இதற்காகவோ சிம்மமும் நாகரத்னமும் வேண்டுமென்ருன்? என்ன பாபம்செய்து யான் இப்பாவிக்குப் பாலனுகப்பிறந்தேன்? யான் கமலாவை நேசித்திருப்பது இப்பாதகனறியாத ரகஸ்யமோ? ஆம்! இதுவே அவனது ஆக்ஞைபோலும், இதற்காக நாம் யாரை நோவது? கமலா! நம்மிருவருடைய நேசமுமிவ்வளவுதான்.

கம:—ஐயோ! ப்ராண நாதா, ப்ராண..........

ப்ர:—கமலா! நீ என்னை இனி ஒருபொழுதுமவ்விதமழைக்கத்தகாது.

கம:—ப்ராணநாதா! தங்களுமிவ்வாறு கூறலாமா?

ப்ர:—உத்தம ஸ்திரீகளுக்கு கணவனே தெய்வம், அறிந்த புத்திரர்களுக்குத் தந்தைதாய் தெய்வம், முழுதுந்துறந்த முனிவருக்கு ஆசிரியன் தெய்வம், மற்றவர்களுக்கெல்லாம் அரசனே தெய்வமென நூல்கள் முறையிடுகின்றது. கமலா! நீ எப்பொழுது என் தந்தையால் விரும்பப்பட்டனையோ அப்பொழுதே எனக்கு..........

கம:—(திடீரென ஓர் கட்கத்தை எடுத்துக்கொண்டு) நானுங்களுக்கு..........

ப்ர:—(கரத்தைப்பிடித்து) அடாடா! என்ன இது? கமலா! இது யார் செய்துகொள்ளக்கூடிய காரியம்? கமலா! விடு இக்கட்கத்தை; கேவலம், அறிவில்லாத மூடர்களன்றோ இத்துறையிலிறங்குவார்கள். இதைவிட என்

சிரத்தையே உன் கரத்தாற் சேதித்துவிடுகிறது தானே!

கம:—ப்ராணநாதா! வாய்நிரம்பத் தங்களை ப்ராணநாதா என்றழைத்த நாவால் இனி மற்றொருவரை அழைப்பதைக்காட்டிலும் என் ப்ராணனே போய்விட்டால்தானென்ன. ப்ராணநாதா! என் உள்ளத்துள் உருவாகியத் தங்களை விடுத்தன்றோ யான் மற்றொருவரை மணக்க வேண்டும்? அவ்வுருக்குலைந்தால் பின் இவ்வுயிரும் நில்லுமோ? என்னை என் வீணுப் பரீக்ஷைசெய்கின்றீர்?

ப்ர:—கமலா! என் தந்தை உன்மீது முறை தவறிக்காதல் கொள்ளவில்லை, இச்சமயமவருக்கும் பட்டமகிஷி கிடையாது, நீயோ இன்னமும் விவாஹமாகாத கன்னிகை, நீ அன்னவரை மணங்கொள்வதால் உடனே பட்டமகிஷியாவதுந்தவிர சகலபோக பாக்கியங்களையுமனுபவிக்கலாம்.

கம:—ப்ராணநாதா! என்னை மணங்கொள்வதில் தங்களுக்கிஷ்டமில்லையென்று ஒரே வார்த்தையாய் கூறிவிடுகிறதுதானே! இதற்காகத்தாங்களேன் சிரமப்பட்டுங்கள் தந்தைக்கு சிபார்சு செய்கின்றீர்?

ப்ர:—உன் நன்மையைக்கோரி அவ்வாறு கூறினேனேயொழிய வேறில்லை.

கம:—ஆ, ஆ, என்ன! தாங்கள் கூறியது என் நன்மைக்கா? அல்ல, அல்ல, இகத்தில் என்றும் மாறாத்துயருக்கும் பரத்தில் மீளாநரகிற்குமல்லவோ தாங்கள் கூறியது. ப்ராணநாதா! இந்த ஜன்மாவில் தங்களையின்றி எனக்கு வேறு பதியில்லை என்பதை தங்கள் பாதசாக்ஷியாகக்கூறிவிட்டேன்.

ப்ர:—கண்ணே! உன் பிடிவாதமிவ்விதமிருந்தால் பிறகு நானென்ன செய்வது? உன் கருத்திற்கிசைய உன்னை

நானே மணம்புரிகின்றேன், கவலைவேண்டாம்; கமலா! என் தந்தைமுன் நான் ஒப்புக்கொண்டுவந்த காரியத்தை முடிக்காவிட்டால் எனக்கு நேருமவமானமுன்னுடையதல்லவா; இக்ஷணமே எனக்கு விடையளிப்பாய்.

கம:—தாங்கள் அவசியம் செல்லத்தான்வேண்டுமோ?

ப்ர:—ஆம் கண்ணே!

கம:—ப்ராணநாதா! இச்சமயம் தங்களைப் பிரிந்திருக்க எனக்கு மிகவும் அச்சமுண்டாகின்றதே.

ப்ர:—கமலா! உனக்கவ்விதமொன்றும் நேராது. இதுவே னுனக்கு வீண் குழப்பம்?

கம:—திடீரென ஏதாவது நேர்ந்தால் நான் யாவரிடங்கூறுவது? வ ப்ராணநாதா!

ப்ர:—இந்த எட்டுதினங்களுக்குள் உனக்கு ஒன்றும் நேரப்போவதில்லை. கமலா! ஸ்தூலமுன்னை விட்டுப்பிரிகிறதேயொழிய என் சூக்ஷமமுன்னைக் காத்திருக்குமென்பதை நம்பு. நான் சீக்கிரம் வந்துசேருகிறேன்.

கம:—ப்ராணநாதா! தாங்கள் சீக்கிரத்தில் வந்துவிடவேண்டும்.

ப்ர:—இதைமேவேறு நீ எனக்குக்கூறவேண்டுமோ? கண்ணே! நான் ஒரு க்ஷணத்தையுமங்கு வீணாகப்போக்கேன்.

கம:—சரஸாவை எப்பொழுதும் என்னைவிட்டுப்பிரியாதிருக்கும்படித் தாங்களவளிடங் கூறுங்கள்.

ப்ர:—சரஸா! கமலாவிடத்தில் நீ என்னிலுமெண்மடங்கு வாஞ்சை நிறைந்தவள். நீ அறியாததற்கு வேறுனக்கென்ன கூறுவேன்? நான்வரும்வரை கமலாவைக் காப்பதுன்கடமை.

சர:—இளவரசே! தாங்களுத்திரவுப்படி நடக்கின்றேன்.

ப்ர:—கமலா! எனக்கு நேரமாகிவிட்டது, சீக்கிரம் விடையளிக்கவேண்டும்.

கம:—ப்ராணநாதா! சீக்கிரம் வந்துவிடுங்கள்.

(ப்ரதாபர் கமலாவின் கரத்தில் முத்தமிட்டுச் செல்கிறார். கமலாவும் சரஸாவும் அவ்விடத்தைவிட்டுச் செல்லல்.)

காக்ஷி முடிவு.

அங்கம் 1. களம் 3.

இடம் கமலாவின் சிங்காரத்தோட்டம்.

காலம் மாலை.

பாத்திரங்கள்—கமலாவும் சரஸாவும் வருகிறார்கள்.

கம:—சகி! என் ப்ராணநாதர் ஏனின்னம் வரவில்லை?

சர:—கமலா! அவர் சென்று இரண்டு தினங்கள்கூட முடியவில்லையே இன்னமும; இதற்குள்ளாகவா உன் ப்ராணநாதர் வந்துவிடுவார்? அவர் உன்னிடம் தவணை கூறிச் சென்றது எட்டு தினங்களுக்கல்லவா?

கம:—ஆம் சரஸா! அவர் என்னைப்பிரிந்து நீண்டகாலமானதுபோற்றோற்றுகின்றதே! பாக்கி ஆறு தினங்களையும் இனி நானெவ்விதங் கழிக்கப்போகின்றேன்?

ரச:—எப்பொழுதும் அதே ஞாபகத்தோடிருந்தால் அப்படித்தான் தோற்றும். கமலா! உன் இனிய கானத்தை நான் கேட்டு எவ்வளவுகாலமானது?

கம:—இச்சமயத்தில் நான் எதையம்மா பாடப்போகிறேன், நீவேணால் ஏதாகிலும்பாடு, நான் கேட்கின்றேன்.

சர:—குயில் கூட்டத்தில் காகமும் வாய்திறக்குமா? கமலா! என்னை ஏன் பரிகசிக்கின்றாய்? தாமரை புஷ்பத்துள்ளிருக்கும் மதுவின் ருசியறியாத மண்டுகம்போல் நினைத்தோ என்முன் பாடுவதற்கஞ்சுகின்றாய்?

கம:—சரஸா! நீ இவ்விதமுங்கூறலாமா? உன்னையாணறியா தவளோ? இப்பொழுதே உன்னிஷ்டம்போல் பாடுகின்றேன், வீணாக நீயொன்றும் நொந்துகொள்ளாதே.

(பாடுகிறாள்.)

சர:—கமலா! சங்கீதத்திற்கு சிசுவும் பசுவும் கொடிய சர்ப்பமும் செவிகொடுக்குமாம், தெரியாமலா சொல்லிவிட்டார்கள் பெரியோர்கள்; சுஸ்ஸ்வரத்தோடுகூடிய சங்கீதத்தைக்காட்டிலும் மேலான இன்பம் வேறொன்றிருக்கின்றதோ? சர்வஞ்யரான ஈச்வரனே இதற்கீடுபட்டிருக்கிறாரென்றால் இச்சங்கீதத்தின் பெருமையை யாவராலுரைக்கக்கூடும்?

கம:—நீ கூறுவது யாவுமுண்மைதான், ஆயினும் என் பாடலைக்கேட்ட இச்சமயத்தில் நீ சங்கீதத்தின்பெருமையைப்பற்றிப் பேசுவது எவ்விதமிருக்கிறதென்றால், குருடனைப்பார்த்து கமலக்கண்ணா என்றழைப்பதைப் போலிருக்கிறது.

சர:—கமலா! தன்னைத்தான் மதிக்காத ஒருவரிடம் அன்னவர் புகழையே நேரிற் கூறுங்கால் முகஸ்துதி என்றுதான் எண்ணுவார்கள். ஆயினும் யானவ்விதமெண்ணிக்கூறவில்லை. உன் கான ரஸத்தை அனுபவித்த ஆனந்தத்தில் என்னையுமீறிக் கூறிவிட்டேனம்மா.

(ஓர் புறமாக கோரபத்மன் வருகிறான்.)

கோர:—(தனிமொழி) நம்மரசன் தனக்கெனவெண்ணிச்செய்த காரியம் நமக்கே அனுகூலமாக முடிந்தது. இக்கமலாவை யானடையச்சனிபோன்றிருந்தார்கள் அவர்களிருவரும். சென்ற அவ்விருவரும் இனி ஒரு பொழுதும் மீண்டுவரப்போவதில்லை; இக்கிழட்டரசனுக்குவந்த ஆசைதானென்ன, தேவமங்கையுங் கண்டுத்தியங்கக்கூடிய கமலாவை இவனு அடையவிரும்பு

வது? கமலாவும் தன் மனமொப்பி இவனைக்கருதுவா ளா? வீசை நரைத்தும் ஆசை நரைக்கவில்லை. என்ன செய்வான் பாபம்; (உற்றுநோக்கி) ஓ! அதோ நிற்கின்றாளே என் காதலி, நான் நினைத்துவந்தபடியே அவளுமிங்கிருக்கிறது என் நற்காலந்தான், இனி என் காரியமுடிவதில் யாதொரு தடையுமிராது, இப்பொழுதே செல்கின்றேனவள் முன்பாக. சரஸா! உன் எஜமானியம்மாளுக்கு என் வருகையைக்கூறு.

கம:—சரஸா! ஒரு நாளுமிங்குவராதவர் இன்று நூதனமாக வந்த விஷயத்தைக்கேள்.

கோர:—(தனிமொழி) நானிங்குவரவேண்டுமென்று உத்தேசித்துப்புறப்பட்டபொழுதே சில நற்சகுனங்களெல்லாங்காணப்பட்டது; அதன் பலனை இப்பொழுதுதானறிந்தேன்; நானிவ்வளவு நாட்களாக இங்குவராமலிருந்ததற்குகமலா என்மீது வருத்தமாகவிருக்கிறாள், அவ்வருத்தத்தையானே மாற்றவேண்டுவது தான். சரஸா! உன் எஜமானிக்கு என் மீதுள்ள அன்பையான் முன்பே தெரிந்து கொண்டிருந்தால் இங்குவராமலுமிருப்பேனோ?

கம:—சரஸா! அவருக்குயானிப்பொழுதனுப்பிய சமாசாரம் முன்னமனுப்பாதது என்னுடைய தவறுதான். அவரிப்பொழுதுவந்த காரியத்தைக்கேள்.

கோர:—சரஸா! மணமாகாத ஒரு ஸ்திரீ இருக்குமிடந்தேடி ஒரு புமான் எதற்காகத்தான் வருவான்?

கம:—சரஸா! பெருமைவாய்ந்த பதவியிலிருக்குமவருக்கு இத்தன்மையான புத்திவந்ததுவும் அன்னவர் தலைவிதிபோலும்.

கோர:—ஏகமலா! என்னிலும் பெருமைவாய்ந்த உன்னைக்கோரியான் வந்திருக்கும்பொழுது என் புத்தி எத்தன்மையதாகத்தானிருக்கும்?

கம:—சரஸா! அவர் கூறுவதை கவனித்தால் எட்டாததை எட்டிப்பார்க்கும் முட்டாளாகிறார். அவருக்கிங்கொன்றும் காரியமில்லை, வந்தவழியேநாடிச்செல்லலாமே.

கோர:—கமலா! உன் விருப்பை வெறுப்பு மொழியாகக்கூறினால் அதை யான் அறியக்கூடாதவனோ?

கம:—ஐயா! ஸ்திரீ ஜாதிகள் தனித்திருக்குமிடத்தில் நீர் வந்ததே பெருந்தவறு, வந்துமிம்மாதிரி தகாத வார்த்தைகளைக்கூறுவதுமக்கு தர்மமா?

கோர:—நானிங்கு வந்ததுவுந்தவறல்ல, உன்னிடம் வார்த்தையாடுவதுந்தவறல்ல, இந்தச்சமயம் தவறாகவிருந்தால் மறுசமயத்தைக்கூறு, அப்பொழுது வந்து சேருகிறேன்.

கம:—அதுவும் ஞாயந்தான், இன்றைக் கெட்டாவது நாள் அவசியம் வந்து சேரும், அப்பொழுது உம்மிஷ்டம் பூர்த்தியாகும்,

கோர:—கமலா! அறிந்தேன் உன் எண்ணத்தை; எட்டுதினங்களுள் உன் தந்தையும், ப்ரதாபநும் வந்து விடுவார்களென்ற எண்ணத்தினாலோ இவ்விதங்கூறுகின்றனை? அதற்குள் உனக்கு நேரவிருக்கும் விபத்தைச்சற்று மறியவில்லையே நீ.

கம:—எனக்கா விபத்து நேரப்போகிறது? அவ்விதம் நேர்ந்தால் உன்னாலன்றி மற்றெவராலும் நேராதெனக்கு.

கோர:—என்னாலொருபொழுதும் நேரப்போவதில்லை, கமலா! மற்றொருவரால் உனக்கு நேரப்போகும் விபத்தை என்னாற்றடுக்கக்கூடுமென்பதை மட்டில் நம்பு.

கம:—ஆனால் அதைப்பற்றி எனக்கொன்றும் கவலையே இல்லை.

கோர:—கவலையற்றே இருக்கலாம்—என்னிஷ்டத்தை பூர்த்தி செய்தால்.

கம:—அதற்குத்தான் முன்பே கூறியிருக்கின்றேனே.

கோர:—அதைநான் ஒப்பேன்; இன்று அல்லது நாளைக்குள் பூர்த்தியாகவேண்டும். அதற்கென்ன சொல்லுகின்ருய்?

கம:—அவசரப்பட்டால் இக்காரியம் நடவாது.

கோர:—ஆனல் நீயே அனுபவிக்கின்ருய், எனக்கென்ன. (உற்றுநோக்கி) ஓ! அதோ வந்துவிட்டான் குடில மன்னன். கமலா! வீணுகக்கெடுவாய், இப்பொழுதே னுங்கூறு. கூறமாட்டாயோ? வேண்டாம் இதோ போகிறேன் யான். (போகிருன்.)

(குடிலமன்னன் வருகிருர்.)

குடி:—கமலா! இப்பொழுதுதான் எனக்குச் சந்தோஷமானது.

கம:—(தனிமொழி) ஈசனே! இதற்கோயானிப்பெண் ஜன்மத்தை எடுத்தேன்? தலைவலிபோய் திருவலிவந்ததையொப்ப அவன் தொலைந்தானென்றெண்ணுவதற்குள் இப்பாதகன் வந்துவிட்டானே. இவனைப்பார்க்குந்தோறும் எமனைப்பார்த்தாற்போல் நடுங்குகின்றதே என் மனம். இவன் கரத்தினின்றும் யானெவ்விதந்தப்பப்போகின்றேன்? ஈசனே நீதான் காப்பாற்ற வேண்டும்.

குடி:—கமலா! என்ன யோஜிக்கின்ருய், இனிமேலெதற்காக லஜ்ஜை? வா என்னருகில், கமலா! உன்மீது அளவிலாவாஞ்சை நிறைந்தவனன்ருேயான். என் தலை குனிந்திருக்கின்ருய்?

கம:—மகராஜா! தாமோ சகல நீதிகளையுமறிந்து தர்மபரிபாலனஞ்செய்கின்ற தயாகுணர், தாமறியாத ஞாயமெ

ன்னவிருக்கிறது இவ்வுலகில்? தமக்குமுன்யான் வேறென்றும் கூறுவதாகாது.

குடி:—கமலா! உன்னை மணக்கவெண்ணிய என் மனமும் உன்னை நினைந்து நினைந்து புண்ணாகிவிட்டது. இனி நீ யாதொரு தகவலுமுரைக்கக்கூடாது.

கம:—மஹாராஜா! மனமில்லாப்பெண்டிரை மணந்துமக்கென்ன சுகம்? இந்த எண்ணம் வேண்டாமுங்களுக்கு, விட்டொழியுங்கள்.

குடி:—கமலா! என் கௌரவமென்ன, என் புகழென்ன, என் பதவியென்ன, இதை யெல்லாம் நீ யோஜித்தாலிவ்விதமுங்கூறத்துணிவாயா?

கம:—அவைகளுக்கெல்லாம் ஆசையுடைய எவ்வளவோ ராஜகுமாரத்திகளிருக்க, கேவலம் உமக்குள் ஊழியம்பார்க்கும் ஒரு மந்திரியின் மகளை இச்சிப்பது உமது அந்தஸ்துக்குத்தான் பொருந்துமா? வேண்டாம், என்னை ஏன் நிர்ப்பந்தம் செய்கின்றீர்?

குடி:—கமலா! என் மனம் நாடிய பெண்ணே எனக்கு ரம்பை; நீண்ட காலமாய் என் மனத்தை விட்டகலாத உன்னை விடுத்து மற்றெவளிடமென் மனம் நாடும்?

கம:—ஐயா! யான் உம்மிஷ்டம்போல் நடக்கத்தகாதவளாகி விட்டேன், என் மனதினால் வரித்த கணவனை விடுத்து பின்னும் மற்றொருவரை நேசித்தால் விபசாரதோஷமென்னை பாதிக்கும்; அன்றியும் உமது புதல்வரையே யான் கணவனெனக் கொண்டதால் இனி நீரென்னை இச்சிக்கத்தகாது. இச்சித்தால் இப்பாபமும்மை என்றும் மீளாநரகிலாழ்த்துமென்பதை நான் வேறு கூற வேண்டுமா?

குடி:—கமலா! உன் காதலைப்பெற்ற ப்ரதாபன் சிம்மத்தாற் கொல்லப்பட்டான். இனி நீ அவனாசையை ஒழி.

கம:—என்ன! என்ன! மகனிறந்தனென்று மனம்பதைக்காமற் கூறுகின்றீரே! மகராஜா! கேவலம் ஓர் பெண்ணாசையால் பெற்றமைந்தனையுமாமறந்தீர்? இனியேனுமிம்மாதிரி உம் நாவாற் கூறுதீரும். நிமிஷத்தில் தோன்றி மறையும் அல்பசுகத்தைப் பெரிதாக நினைக்கலாமா தாங்களும்?

குடி:—அடி! உன்னாசையால் யான் மைந்தனைமட்டிலா மறந்தேன்? சர்வத்தையும் மறந்துவிட்டேனே.

கம:—தவறுவழியிற் சென்றவர்களை தாமே நல்வழிப்படுத்த வேண்டியவராகவிருக்க, தாமுமிச்செய்கைக்குடன் படடால் வேலிபயிரையழிப்பது போலாகாதா? இவ்விஷயத்தை மற்றவர்களறிந்தால் உலகாதிபனாகிய உம்மை யாவரும் நிந்திப்பார்களே. மகராஜா! வேண்டாமுங்களுக்கிந்த வீணபவாதம்.

குடி:—கமலா! உன்னை எவ்வளவோ வருந்திக்கேட்டும் இன்னமும் உன்மனமிளகவில்லையே. முடிவாக என்ன கூறுகின்றாய் நீ?

கம:—ப்ரதாபனையன்றி மற்றெவனையும் மணக்கேன்.

குடி:—அவனிறந்துவிட்டான்—பிறகு?

கம:—அஃதுண்மையானால் யானுமிறக்கவேண்டியவளே.

குடி:—கமலா! மீண்டுமுரைக்கின்றேன் கேள்; வீணாக உன் வாழ்வைக் கெடுத்துக் கொள்ளாதே, இந்நாடோர் பணியும் யானே உன்னைப்பணிவேன், என் சகல சம்பத்து முன்னுடையதே, முன்னம் யானுனக்கு லிகிதம் வரைந்தபடியே உன் சிற்றப்பனையுமன்னிப்பேன்; இவ்வளவையுங் கெடுத்துக்கொள்ளாமல் என்னை மணந்துகொள்.

கம:—சந்திர சூரியன் திசைமாறினும் என் மனநிலை மாறாது. இதுவேனுமக்கு வீண் எண்ணம்.

குடி:—ஆ, ஆ, என்ன சொன்னாய் மகாகர்வி? இப்பொழுதே உன்னை அடக்கும் விதமடக்கி என் எண்ணத்தையும் பூர்த்திசெய்துகொள்கிறேன். ஆரடாவன் சேவக! (இருசேவகர் ப்ராப்தம்) இத்துஷ்டையை இப்பொழுதே காராக்ரஹத்திலடைத்துவாருங்கள்.

(குடிலமன்னன் போகிறார்.)

சேவ:—ஏனம்மா நிற்கின்றீர்கள்? உ, உ, வாருங்கள் வாய்திறவாமல்.

கம:—சரஸா! நீ ஏன் கண் கலங்குகின்றாய்? என் விதி இப்படி. இல்லாதவரை என் தந்தையையும் என் ப்ராணநாதரையும் பிரிந்து தனித்திருப்பேனோ? ஈசனே! உன் சோதனை இன்னமெதுவரையிலோ.

சேவ:—சாவகாசமாய் வியசனப்படலாம், வாருங்கள், வாருங்கள், சீக்கிரம்.

சர:—கமலா! நீ முன்னம் பயந்தவிதமே உன்னைச்சூழ்ந்து கொண்டது விபத்தும். இதற்கு நாம் யாரை நோவது? என்னிடங்கூறிச்சென்ற ப்ரதாபரின் வார்த்தைக்கு நேர்விபரீதமாக நேர்ந்ததுவும் என் காலவேற்றுமைதான்; கமலா! நானிப்பொழுதே சென்று உன் தந்தைக்கேனும், ப்ரதாபருக்கேனும் விஷயத்தையறிவிக்கின்றேன். (போகிறாள்.)

(சேவகர்கள் கமலாவை அழைத்துச்செல்லல்.)

காக்ஷி முடிவு.

அங்கம் 1. களம் 4.

இடம்	சிறைச்சாலை.
காலம்	இரவு.
பாத்திரங்கள்	பெத்தான் பெரியான் இருவரும் காவல் புரிகின்றனர்.

பெத்:—எண்டா! நம்மராசா பண்ணினது அக்ரமந்தானேடா?

பெரி:—ஆமண்டா! நானு அப்பமுதலே ரோசிச்சு ரோசிச்சுப்பார்க்கறேன் ஒண்ணும் புரியலயே; எண்டா! மந்திப்பாமவுளே என்னாத்துக்கி இங்கே கொண்டாந்து வச்சிருக்காரு?

பெத்:—எல, அது தெரியாதாடா நோக்கு; பூ! இம்படத்தானு!

பெரி:—அதென்னடா விசயம்? எனக்குத் தெரியாதடா.

பெத்:—அவுங்களே கண்ணாளம் பண்ணிக்கமாட்டேனுங்களாம்; அதுக்காவ கண்டபடி திட்டி இங்கே கொண்டாந்துவச்சிட்டாரு.

பெரி:—சோக்கு, எண்டா! இந்த களத்துக்கு இன்னுமா கண்ணாளம் வேணுமா? எ பெத்தான்! இந்த மாதிரித்தாண்டா ஊரே கெட்டுப்போச்சி.

பெத்:—இத்தக்கேளுடா, இன்னொணல்ல இர்க்குது அதுலே; நம்மசின்ன மௌராசா இருக்காங்களல்லடா........

பெரி:—நெருந்தடா! சின்னமௌராசா எங்கடா இர்க்காரு? அவரெத்தா சிங்கமுளிங்கிடுச்சேடா.

பெத்:—நா சொல்ரத்தெக்கேளுடா. சிங்கம் முளிங்கினசேதி இப்பல்லடா தெரிஞ்சுது, இதுக்குமுன்னாலே இந்தம்மா சின்னமௌராசாவே கண்ணாளம் பண்ணிக்கப்போரேனுங்க.........

பெரி:—அதுயாருக்கடா தெரியாது.........

பெத்:—அடக்கேளுடாசித்தே, அது இந்த களராசாவுக்குந் தெரியும், தெரிஞ்சிருந்தும் அந்தம்மாக்கிட்டப்போயி நீ என்னத்தா கண்ணாளம் பண்ணிக்கணுனு கேட்டாரு; நாசின்னமௌராசாவெத்தா கண்ணாளம்பண்ணிக்குவே, ஒன்னே மாட்டேனு சொன்னுங்க

அந்த அம்மா. ஒடனே இந்த களராசா என்ன பண்ணிருரு! தந்தரமா மவங்கிட்டபோயி, நீ உசுரோடே கிங்கமொண்ணு புடிச்சாந்தாத்தா நாபொயப்பே இல்லாட்டா பொயக்கமாட்டேன்ருரு, அத்தெநெசனு நம்பிக்கிட்டு இவரும் போருரு, சிங்கம் முளிங்கிடுச்சு.

பேரி:—ஏண்டா! இந்த களராசா மவனே கொல்லணுனுத் தானே சிங்கத்துக்கிட்ட அனுப்பிச்சாரு?

பேத்:—அதுக்கென்னடா சந்தேகம், மவன் செத்தாத்தா இந்தம்மா தன்னே கண்ணாலம் பண்ணிக்குவாளுனெனச்சே அனுப்புச்சிருக்காரு.

பேரி:—பாவம், அந்தம்மா சோரு தண்ணி ஒண்ணுமல்ல தின்னயாட்டேங்கராங்க.

பேத்:—வெஷனமாயிர்க்காதாடா?

பேரி:—மௌராசி அந்தம்மா நல்லவேளயா முன்னேயே செத்துப்பூட்டாங்க, இருந்தாங்களு இந்த அக்ரமத்தெல்லாம் பார்த்து சயிப்பாங்களா.........

பேத்:—ஏ, அதோப்பாருடா சேனதிய்பா வர்ருரு;

பேரி:—ஆமண்டா, ஆமண்டா; இங்கென்னத் துக்கடாவர்ருரு?

பேத்:—ஏ, ஒண்ணும்பேசாதே, அவுரு காதிலே எண்ணுனு உளுந்துச்சுனு நம்மெ கொன்னுப்போடுவாரு.

பேரி:—ஆமண்டாப்பா, அவுரு சொக்காவுந்தலப்பாவும் கத்தியுஞ் சுப்பாக்கியு ஏப்பா! பாத்தாலே பயமாருக்குடா:

பேத்:—ஏ, ஏ, பேசாதே வந்துட்டாரு, வந்துட்டாரு.

(கோரபத்மன் வருகிருன்.)

கோர:—அடே காவலர்காள்! ஜாக்கிரதையுடனிருக்கின்றீர்களா?

இருவ:—(நடுக்கத்துடன்) ஆமங்க.

கோர:—அடே! இச்சிறைச்சாலையின் சாவி எங்கே?

இருவ:—மவுராசாக்கிட்ட இருக்குதுங்க.

கோர:—உங்களிடமில்லை?

இருவ:—இல்லீங்க.

கோர:—அடே நீங்கள் இவ்விடமே நில்லுங்கள்.
(கோரபத்மன் சிறையின் கதவோரமாகவந்து)

கோர:—கமலா! சௌக்கியந்தானே?

கம:—கோரபத்மா! இந்த ஸ்திதியிலிருக்குமென்னை 'சௌக்கியமா' என்று நீயாகிலுங்கேட்டனையே, இஃதொன்றேபோதும்.

கோர:—கமலா! உன் நிலைமையைக்காண எனக்கே பரிதாபமாகவிருக்கிறது. என் சொற்படி நடந்திருந்தால் உனக்கிவ்விதத்துன்பமும் நேருமோ? இப்பொழுதுமுன்னை என்னால் தப்புவிக்கக்கூடும்.

கம;—கீழிருப்பதோ புலி, மேலிருப்பதோ கரடி, மத்தியிலகப்பட்டுக்கொண்ட எனக்கு இனி தப்பும்வழி எது?

கோர:—கமலா! நீ என்னை எவ்விதமாக நினைக்கினுஞ்சரி, உனக்குயான் உபகாரமே செய்கின்றேன். பிறகேனும் ஒரு சமயத்திலென்னை நினைப்பாயல்லவா, அதுவே போதும். அடே காவலர்காள்!

இருவ:—ஐயா!

கோர:—நம்முடைய வீட்டில் இன்று விசேஷமாச்சுதே—தெரியாதா உங்களுக்கு?

இருவ:—ஆமங்க.

கோர:—என்னடா ஆமங்க என்கிறாய்? தெரியுமா தெரியாதா உங்களுக்கு?

இருவ:—தெரியுதுங்க—ஆமங்க.

சோர:—தெரியாதல்லவா?

இருவ:—ஆமங்க.

கோர:—அடே! உங்கள்பாடு இன்று வேட்டைதான், நரிமுகத்தில் விழித்திருக்கின்றீர்கள் அல்லவா?

இருவ:—ஒண்ணும் புரிலீங்களே!

கோர:—இன்றைக்கு நம்முடைய வீட்டில் ஒரு பெரிய விருந்தடா;

இருவ:—அப்படீனுக்கே என்னங்க?

கோர:—முட்டாள்களா! விருந்தென்றால் தெரியாது? கொழுத்த சாப்பாடடா;

இருவ:—(பரபரப்புடன்) ஆ, ஆ, என்னங்க, சாப்பாடா?

கோர:—ஆம், அனேக பண்டங்களும் பதார்த்தங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. உங்களுக்கதில் விருப்பமுண்டோ?

இருவ:—எங்களுக்காரு போடப்போராவ?

கோர:—அடே! அனேக நாட்களாய் உங்கள் கஷ்டதிசையை யானறிந்தவன்; உங்களுக்கிம்மாதிரி ஆகாரம் ஒருபொழுதுங் கிடைத்திராது. உங்களிருவருக்கும் எதேஷ்டமாக வைக்கச்சொல்லி வந்திருக்கிறேன்; சீக்கிரஞ் சென்று உங்களிஷ்டம்போல் சாப்பிட்டுவாருங்கள்.

பேத்:—எண்டா! இங்கபாராவுலே யார்ரு இர்க்கறது? ஒண்ணு சொல்ரே கேக்றையா? நீஇரு, முதல்லே நா போய் தின்னிட்டு ஓட்டியாந்துடரே, அப்ற நீ போவலாம்.

பேரி:—ஏ, எனக்குத்தாண்டா லொம்ப பசியாருக்குது. முதல்லே நா பூட்டொடியாந்துடரே நீ இர்ரு கொஞ்சம்.

பேத்:—போடா போ, நீ முன்னாடிபோனா அப்றம் எனக்கென்னுவப்பே? எல்லாத்தையு முளிங்கிடமாட்டயா; நாந்தா முன்ன போவணு.

பெரி:—மௌராசன் சேருதிய்யாதா நொம்ப நொம்ப இர்க்கு துன்னுங்களே, எல்லாத்தையுமா நா முளிங்கிடுவே, ஏப்பா!

கோர:—அடே! என்னடா யோஜிக்கின்றீர்கள்?

பெரி:—இல்லீங்க, எனக்குப்பசி நொம்ப இர்க்குதுங்க. அதுக்காவ நா போயி தின்னிட்டு ஒட்டியாந்துடரே, நீ பாராவ்லே இர்டாஞ, அவந்தா முன்னுடி பொவனுங்கராங்க.

பெத்:—அதுக்கில்லீங்க, அவனுங்க ஒட்டவயத்துக்காப, என க்கில்லாமெ எல்லாத்தயுமுளிங்கிடுவானுங்க. அதுக்காவத்தா அவா ஊட்டுலேகூட பெரியானு பேருவச்சிர்க்கிறுங்க.

கோர:—இதற்காகவா கவலைப்படுகின்றீர்கள் மடையர்களா; இருவருமாகச்சென்று வாருங்களடா, நீங்கள் திரும்ப வரும்வரை நான் பார்த்துக்கொண்டிருக்கிறேனுங்கள் பாராவை.

இருவ:—ஆனு சரீங்க, இதொப் போரங்க.

(இருவரும் சென்றவுடன் கோரபத்மன் சிறைச்சாலையின் பூட்டை உடைத்து கமலாவை அழைத்துச்சென்றதும், பெத்தான் பெரியான் இருவரும் வருகிறுர்கள்.)

பெத்:—நல்லவேளையாப் போச்சு, ஒனக்கப்ற நாபோனேனே ஒண்ணுப்படுமா நேக்கு; ஏப்பா, எம்மாத்தஞ்சோருடா தின்னிட்டே நீ!

பெரி:—மௌராசன் ஊட்ளே நல்லா போட்டாங்க நாதின்னே. ஒனக்கென்னடா இம்மாத்தம் பொருமே. ஏ பெத்தான், எனக்கு நொம்ப களையாஇருக்கு, நா கொஞ்ச உளுந்து பொரண்டாத்தா பொயப்பே.

(படுத்துக்கொள்ளுகிறுன்)

பேத்:—ஏண்டா! நீ என்னுடா படுத்துட்டே; யாரு ஒன்னெ அம்மாத்தஞ்சொத்த முளுங்கச்சொன்னு? ஏ! எளுந் திரு; மூணுநாளா நா முளிச்சமுளி எனக்கல்ல தெரியு.

பேரி:—ஏண்டா, நா படுத்துட்டாக்கெ தூங்கிடுவேன்னு நெனெச்சுப்பேசரே?

பேத்:—ஏ, எளுந்திருச்சயோ சோக்கா நண்டுகதெ சொல்லுவே, இல்லாட்டி நானு படுத்துடுவே; என்னுசொல்ரே?

பேரி:—அட என்னுடா ஒன்னயவு பெரிய எயவாருக்குது. இரு கொஞ்சநேரங்களிச்சு எளுந்துடரே.

பேத்:—சரி, சரி, நானுபடுத்துடரே கொஞ்சம். அப்றமெழுந் திருக்கலா. (படுத்துவிடுகிறான்)

(இருவரும் அயர்ந்து நித்திரை செய்யும்பொழுது, குடிலமன்னன் வருகிறான்)

குடி:—அடி! அகங்கொழுத்தவளே! உனக்கிப்பொழுதும் நற் புத்திவரவில்லையா? ஓர் உலகாதிபனாகிய என்னை நீ அவமதித்ததற்கு உன்னை சித்ரவதை செய்தாலுமெ ன்ன; ஹே கமலா! என்னை யாரென்று நினைத்தாய்? இன்னமுமுன்னை என்ன செய்கின்றேனென்பதைப் பார்; அடே காவலர்காள்! என்ன ஒருவரையுங்கா ணோம்; அடே காவலர்காள்! (அவர்கள் நித்திரை செய்துகொண்டிருப்பதைப் பார்த்து) பேஷ், இவர் கள்தான் சூரர்கள், அதிக ஜாக்ரதையுள்ளவர்கள். ஏ தடியர்களா! நன்றாயிருக்கிறதுங்கள் காவலின் திற மை. (இருவரும் பரபரப்புடனெழுந்திருக்கிறார்கள்) அடே! இம்மாதிரி தூங்குவதற்கா உங்களுக்கு யான் சம்பளங் கொடுத்துவருகின்றேன்? (திரும்பிப்பார்த்து) என்னடாயிது, இச்சிறையின் கதவுகள் ஏன் திறக்கப் பட்டிருக்கிறது? (உடனே உட்சென்று திரும்பிவந்து)

ஆஹா, கெட்டது கெட்டது, என் எண்ணமுழுதுங் கெட்டுவிட்டது. எவ்விதத்திலோ தப்பிச்சென்றாள் கமலா; இனி எப்பொழுது என் கரத்திற் சிக்கப்போகின்றாள்? இல்லை, இல்லை, ஒருபொழுதுமில்லை. அடா பாவிகளா! உண்டகத்திற்குமிரண்டகஞ்செய்துவிட்டீர்களே! இனி உங்கள் தலைதப்ப வேண்டுமானால் உண்மையைக்கூறுங்கள். யார் வந்தார்களிங்கு? எவ்விதம் தப்பிச்சென்றாள் கமலா? என்னடா திருட்டுவிழி விழிக்கின்றீர்கள், உண்மையைக்கூறுகின்றீர்களா இல்லையா?

பேத்:—மௌராசா! இந்த பாவிப்பய வயத்துநறைய முளிங்கிட்டு வண்ணாந்தபோல உளுந்துகடந்தாங்க. நாந்தாங்க மூணுநாளா முளி முளினு கண்ணெ முளிச்சிக்கிட்டே இர்ந்தேங்க. என்னமோ இர்ந்திருந்தாப்போல மயக்கம் வந்து பொத்துனு உளுந்துட்டேங்க. அப்றம் அந்தம்மா எப்படி போனாங்க?

குடி:—அடே! என்னையா நீ கேட்கின்றாய்? ஆனால் அவள் சென்றவிதம் உனக்குத்தெரியாதோ? இருக்கட்டும். அடே பெரியான்! உனக்கும் ஒன்றுந்தெரியாதோ?

பெரி:—எனக்குத் தெரிஞ்சிருக்கும்ங்க, சேனாதிய்யா ஊட்லே சர்றியான சாப்பாடுங்க எனக்கு. அதுனாலெ ஒண்ணும் புரிலீங்க.

குடி:—யார், யார், சேனாதிபதியின் வீட்டிலா? கோபபத்மன் வீட்டிலா?

பெரி:—ஆமங்க.

குடி:—அவன் வீட்டில் என்ன விசேஷம்?

பெரி:—சர்றியான சாப்பாடுங்க.

குடி:—விசேஷமென்னடா அவன் வீட்டிலுன்சாப்பாட்டிற்கு?

பெரி:—விசேசனுதா சொன்றாருங்க.

குடி:—இன்னவிசேஷமென்று சொல்லவில்லைப் போலிருக்கிறது உங்களிடத்தில்; அஃதிருக்கட்டும்யார்வந்து கூப்பிட்டார்களுங்களைச் சாப்பாட்டிற்கென்று?

பேரி:—அவுங்களே நேர்லே வந்தாங்க.

குடி:—நீங்கள் இருவருமா சேர்ந்து போனீர்கள்?

பேரி:—நா பாத்துக்றே நீங்க போய்ட்டுவாங்கடான்னாரு, அப்றந்தா நாங்க ரண்டுபேருஞ் சேந்துபோனங்க.

குடி:—உங்களையனுப்பிவிட்டு அவன்மட்டிலிங்கிருந்தானோ? பிறகு நீங்கள் வந்தவுடன் பார்த்தீர்களா அவனை?

பேரி:—அதுதா நெனப்பில்லேங்க.

குடி:—எண்டா, நீயேனும் பார்த்தனையோ அவனை?

பேத்:—மயக்கமா வந்து உளுந்துட்டேங்க.

குடி:—பொறுங்கள், உங்களுக்கு தக்கதண்டனை செய்கின்றேன். சண்டாளர்களா.

இருவ:—மௌராசா! நாங்க புள்ளகுட்டிகாரங்க, கெடுத்துடாதீங்க, நீங்கதா காப்பாத்தணு

(காலில் விழுகிறார்கள்)

குடி:—அடே! அவ்விருவர்களையும் எப்படியாவது பிடித்துக்கொண்டு என்முன் விடாதவரையில் உங்களிருவர் தலையுமிரவல்தான்; போங்கள்.

குடி:—(தனிமொழி) காத்திருந்தவன் பெண்ணை நேற்றுவந்தவன் கொண்டுபோன கதையாக முடிந்ததே; என்ன ஆச்சர்யம்! என்னை வெறுத்த கமலா கோரபத்மனை மட்டில் எவ்வாறு நேசித்தாள்? இவளுடைய நேசத்தைப்பெறுவதற்கெண்ணியோ முன்னமவனும் சாந்துலனிடம் நட்பு பாராட்டிக்கொண்டான்? ஓ! ப்ரதாபனையன்றி மற்றெவனையும் மணப்பதில்லை என்ற கமலா இக்கோரபத்மனை மட்டில் எவ்விதம் நேசிக்கப்போனா

ளுள்? அது ஒருநாளுமில்லை. அடே கோபபத்மா! எனக்கிரண்டகம் நினைத்துச்செய்தாய் நீ. உனக்கும் என்கதியேயன்றி வேறில்லை. ஐயோ! கமலாவின் காதலைப்பெற நினைத்து யானென்னென்ன தவறுகளை யெல்லாஞ் செய்துவிட்டேன், என் மைந்தனும் சாங் துலனும் திரும்ப வந்துவிட்டால் யானென்ன மறு மொழி கூறுவதவர்களுக்கு? உலைவாயை மூடலாம் ஊர் வாயை மூட யாவராலாகும்? ப்ரதாபன் இறந்தா னென்ற பொய்வதந்தி அவன் செவிக்கெட்டினால் என்னை என்னவென்று நினைப்பான்; ஐயோ! இதுவும் என்காலபேதமோ? (போகிறார்)

காக்ஷி முடிவு.

அங்கம் 2. களம் 1.

இடம்—மலையின் அடிவாரம்.

காலம்—மாலை.

பாத்திரங்கள்—மஹேசர் நிஷ்டையிலிருக்க சாங்துலர் வருகிறார்.

சாங்:—(தனிமொழி) நானன் என் அரசனுக்குரைத்து வந்தபடி. இன்றோடு நாட்கள் ஏழுமாகிவிட்டனவே; நாளை ஒரு பொழுதுக்குள் நாகரத்னத்துடன் நானெவ்விதஞ்செல் லக்கூடும்? ஈசனே! இதுவரை யானலைந்த அலைச்சல் தாமறியாததோ! (ரிஷியை நோக்கி) ஆஹா! அதோ ஒரு மஹான் நிஷ்டையிலிருக்கின்றார். அன்னவரா லன்றி மற்றெவராலு மென்காரியம் பலிதமாகப்போவ தில்லை; முதலில் அப்பெரியோரை தெரிசிக்கின்றேன் (சமீபித்து) என்ன செய்வேன்? அவரோ கண்ணை விழிக்கின்றாரில்லை, என் காரியத்தையுஞ் சீக்கிரம் முடி த்துக்கொண்டு நான் செல்லவேண்டும். அன்னவரின்

நிஷ்டையை கலைப்போமா? அபசாரம், அபசாரம், அவ்விதஞ் செய்வதாகாது. (மஹேசர் விழித்துப்பார்க்கிறார்) ஸ்வாமி! நமஸ்கரிக்கின்றேன்.

மஹே:—ஆசீர்வாதம்; யாரப்பா நீ?

சாங்:—குந்தளநாட்டமைச்சன்.

மஹே:—அப்படியா, இங்குற்ற காரணம் யாது?

சாங்:—ஒரு பொருளை உத்தேசித்து வந்தேன். அப்பொருள் இன்றுவரை என் கரத்திற்கிட்டவில்லை. நாளை ஒரு பொழுதுக்குள் அப்பொருளோடு யான் என்நாட்டிற்கு செல்லவேண்டும். இதற்கு தாங்கள்தான் அனுக்ரஹிக்கவேண்டும்.

மஹே:—ஆனலப்பொருள் என்னிடத்திலிருக்கின்றதோ?

சாங்:—அவ்விடத்து மனதினால் நினைத்தமாத்திரத்தில் எப்பொருள்தான் கிடைக்காதது?

மஹே:—அப்பா! நீ நாடிவந்த பொருள் நாகரத்னமன்றோ?

சாங்:—சகலமும் அவ்விடத்து திருவுளமறிந்ததுதானே, என்னைவேறு சந்தேகங்கேட்கவேண்டுமோ?

மஹே:—அப்பா! நீ மஹாபுத்திமான், ஆயினும் உன் அரசனது உட்கருத்தை நீ அறியவில்லை, அறிவதற்கு உனக்கவன் மீதுள்ள நன்னம்பிக்கையே இடையூராக நின்றது. அப்பா! உன் அரசன் உன் குடும்பத்திற்கே த்ரோகி. முன்னம் உன் சகோதரனுக்குக் கொடுமை செய்ய நினைத்தானாயினும் நல்லவேளையாக அவன் தப்பிச் சென்றான். இப்பொழுதுன்னை அனுப்பிய காரணம் யாதெனில் நீ இறக்கவேண்டுமென்றுதான். இம்மட்டிலா, உன்னரும் புதல்வியையுங் கெடுக்கத்துணிந்தான்

சாங்:—ஆ, ஆ, என்ன, என்னருங்கண்மணியையுமா கெடுத்துவிட்டான்? ஐயோ, ஈதென்ன காலவேற்றுமை......

மஹே:—அப்பா, பொறு; ஒன்றும் மிஞ்சிவிடவில்லை; உன் ஹ்ருதய சுத்தமே உங்கள் யாபேரையும் காப்பாற்றும், கவலைவேண்டாம். கெடுமதி கண்ணுக்குத் தோற்றுததுபோல், அன்னவனுக்கு அழிவுகாலம் சமீபித்துவிட்டபடியால் இவ்விதமும் செய்யலானான். அப்பா! உலகப்பற்றை ஒழித்திருக்கவேண்டிய இந்த கட்டை ஒருபொழுதும் வாய்திறவாது. உன் சகோதரன்மீது உனக்குமொரு சமயம் சந்தேகம் ஜனித்தது, அதை நீக்கும் பொருட்டும், உன்னரசன் விளக்கைச்சுற்றிய வண்டாகிவிட்டான், இப்பவோ இன்னம் சற்று நேரத்திலோ ஒழியப்போகின்றானதினாலுமே கூறிவிட்டது. இனி நீ ஒரு க்ஷணப்பொழுதுமிங்குத தாமதிக்கவேண்டியதில்லை. இந்தக்கட்டையும் நிஷ்டைக்குச் செல்லப்போகின்றது.

சாங்:—ஸ்வாமி! என்னருஞ் செல்வியின்கதி எவ்வாறாயிற்றோ? ஒன்றும் புரியவில்லையே, இதற்குத் தாங்கள் தான் தேருதலுரைக்கவேண்டும்.

மஹே:—அப்பா! மற்ற விபரங்களை இக்கட்டையானது ஒன்றுமே கூறாது. முடிவில் எல்லாம் நன்மையாகவே முடியும். நீ செல்லலாம்.

சாங்:—நல்லது, நான் விடைபெற்றுக்கொள்கிறேன்.

(போகிறார்)

காக்ஷி முடிவு.

அங்கம் 2. களம் 2.

இடம்—குந்தள நாட்டிற்குச்செல்லும் ஓர் பாதை.

காலம்—முன் இரவு.

பாத்திரங்கள்—சாந்துலரைச் சரஸா சந்திக்கின்றாள்.

சர:—கும்பிடப்போனதெய்வம் குறுக்கிட்டாப்போல் தங்களைக்காணப்பெற்றேன். ஐயா! அக்குடிலன் புரிந்த கொள்ளையை யானென்னென்று கூறுவது?

சாங்:—சரளா! யான் தரிசித்த ஒரு மஹானால் சகலவிஷயங்களையுமறிந்தேன்; ஆயினும் அங்கு நடந்தவைகளை உன் நாவால் கூறு.

சர:—தாங்கள் சென்றவுடன் இளவரசரும் வந்து கமலாவிடம் விடைபெற்றுச்சென்றார். மறுநாள் நானுங்கமலாவும் நமது சிங்காரத்தோட்டத்திற்குச் சென்றிருந்தோம்; அச்சமயத்தில் கோரபத்மன் வந்து கமலாவிடம் தகாதவார்த்தைகளைக் கூறிக்கொண்டிருக்கும் பொழுது குடிலமன்னன் வருவதை யறிந்த கோரபத்மன் ஓடிவிட்டான். ஐயோ! அக்கிழவனுக்கு வந்த கேடுகாலமென்னவோ? தன்னை மணக்கவேண்டுமென்று கமலாவை வற்புறுத்த அவள் மறுத்ததுகண்டு உடனே காராக்ரஹத்திலடைத்துவிட்டான்; பின்னுமென்ன செய்கின்றானோ? நாம் சீக்கிரஞ்செல்வோம் வாருங்கள். (பெரியான் வருகிறான்)

சாங்:—அடே! பெரியான்! நீ எங்கிருந்து வருகின்றாய்?

பெரி:—எங்களே கொல்லப்பாத்தா, தானே தொளேஞ்சா.

சாங்:—அடே! என்னடா பிதற்றுகின்றாய்?

பெரி:—தேவமில்லீங்களா, உடுமோ சும்மா?

சாங்:—என்னடா விசேஷம்?

பெரி.—கெடுத்துடுங்க. சாமியே கெடுத்துடுத்து. அதுக்கு யாரென்ன பண்ணுவா? அவத்துறலே அளிஞ்சானுந் துரியோன ராசன்.

சாங்:—பெரியான்! உன் வார்த்தையில் எனக்கொன்றும் அர்த்தமாகவில்லையே! நீ எங்கிருந்து வருகின்றாய்?

பெரி:—நம்ம ராக்ஷியத்திருந்துதாங்க.

சாங்:—என் கண்மணி கமலாவின் கதி எவ்வாறாயிற்று? உனக்கேதேனுந்தெரியுமோ?

பேரி:—அவுங்களு சேனதிப்பாவுதா செறச்சாலேர்ந்து ஓடிப்பூட்டாங்களெ. அதுக்காவத்தா எந்தலயு பெத்தாந் தலையு வாங்கிடுவேன்னுங்க மவுராசா. இப்ப அவுங்களயே தொரத்தியாச்சி.

சாங்:—என்ன, என்ன, யாரைத்துரத்தியாய்விட்டது?

பேரி:—நம்ம கள ராசாவெத்தாங்க.

சாங்:—துரத்தியது யார்?

பேரி:—கடகதூம ராசாவா அவரு எம்மாஞ் சுப்பாயுவ வந்தானுவ, அடேப்பா! நெனச்சாலே எனக்குப்பயமாருக்குதுங்க.

சாங்:—(தனிமொழி) ஆஹா! குடிலமன்னனே! என்னால் சகல நன்மையையுமடைந்து எனக்கே தீங்கு நினைத்தால் உன்னை தெய்வமுந் தண்டியாதுவிடுமா? உன்விநாச காலத்திற்கன்றோ உன் புத்தியும் இவ்வாறு விபரீதமானது. ராஜநீதி யாவுமுணர்ந்த நீ அடுத்தவரைக் கெடுக்குமித்திய தொழிலை எங்குக்கற்றனையோ? அப்பப்பா! இதுகாறு முன்வஞ்சக நெஞ்சை யானறியாமற் போனேனே; சண்டாளா! நீ என்னை ஒழிக்க நினைத்தனுப்பியதற்கும் என் மனம் வருந்தவில்லை. என்னருங் கிளியைக் கூண்டிலடைத்து கோரபதமனுகிய அத்துஷ்டப்பூனைக்குப் பலிகொடுத்தனையே. இனி யான் எவ்வழியிற் காணப்பெறுவேன் என் கமலாவை? ஈசனே! இந்த துக்கத்தை முழுதுமனுபவிக்கவோ இன்னமுமென் ஜீவனிருக்கின்றது? ஐயோ! இப்பொழுதே என்னுயிர் நீங்கலாகாதா?

சா:—ஐயா! தாமிவ்வாறு வருந்தி என்னுகப் போகின்றது? மேல் நடக்கவேண்டியதை யோஜியுங்கள்.

சாங்:—பெரியான்! இவ்விஷய முழுதும் இளவரசரறிவாரோ?

பேரி:—அவுரெத்தா சிங்க முளிங்கி இன்னிக்கி ஏளுநாளாவுதுங்களே.

சர:—ஐயா! நான் கமலாவைவிட்டுப் பிரிந்ததினத்திலேயே இவ்வதந்தி ஊரெங்கும்பரவிவிட்டது. ஆனால் எனக்கு மட்டில் நம்பிக்கையில்லை; அக்குடிலன் நம்கமலாவின் எண்ணத்தை மாற்றுவதற்கே இவ்விதங்கூறியிருப்பான்.

சாங்:—சிம்மமா இளவரசரை விழுங்கும்? இளவரசரின் வல்லமையை அறியாதவர்களன்றோ இதை உண்மையென நம்புவார்கள். ஏககாலத்தில் எத்தனை சிம்மங்களெதிர்க்கினும் முன்வைத்த காலை பின் வைக்காமல் நாசம் செய்துவிடுவாரே. நல்லது நம் இளவரசரையேனுங் கண்டு விஷயத்தை அறிவிப்போம் வாருங்கள்.

காக்ஷி முடிவு.

அங்கம் 3. களம் 1.

இடம்—காடு

காலம்—காலை.

பாத்திரம்—ப்ரதாபர் வருகிறார்.

ப்ர:—(தனிமொழி) என்ன ஆச்சர்யம்! சிம்மங்கள் கூட்டங் கூட்டமாகத்திரிந்துகொண்டிருக்கும் இக்காட்டில் ஒரு சிம்மத்தையுங்காணாத விந்தைதானென்ன! இன்றைப்பொழுதிற்குள் என்காரியத்தை முடித்துக்கொண்டு நான் எவ்விதஞ்செல்லப்போகிறேனென் நாட்டிற்கு? என் காதலியிடம் கூறிவந்த தவணை தினமின்றுடன் முடிவடைந்துவிடுமே. இதற்கு யான் என் செய்வேன்? இப்பொழுதே திரும்பிச் சென்றுவிடலாமா? சென்றால் செயலற்றவனென்றல்லவோ யாவரும் நிந்திப்பார்கள். இந்நிந்தையைப்பெற்று பின்னுமுயிர் வாழவேண்டுமோ? ஈசனே! இந்த தர்ம சங்கடத்திற்கென்ன செய்வேன்? இதற்குத்தானோ என் மனமும் கமலாவின்மீது நாடியது? கமலாவின் ஆசையை யானி

ன்றுமுதல் ஒழித்துவிடவேண்டும். இல்லாவிடில் எனக்கு அப்பெண் பித்தேறி பைத்தியமே பிடித்துவிடும். ஹா! கண்ணே! ஊசியை காந்தம் பற்றுவதுபோல் என் மனதைப்பற்றிக்கொண்டாயே நீ; இனிமேலா எனக்குன் பயித்தியம் பிடிக்கப்போகின்றது? கமலா! உன்னுருவமே என்னகத்தில் உருக்கொண்டிருக்க உன்னை யான் எவ்வாறு மறக்கமுடியும்? அப்பொழுதே என் ப்ராணனும் போய்விடாதா? காதலி! என் மனக்கவலை இவ்வளவிற்குங் காரணம் உனதெழிலன்றோ? அவ்வெழிலை உனக்களித்தது அந்த பிரும்ம தேவனின் குற்றமேயன்றி உனமீதொன்றுமில்லை.

(பெத்தான வருகின்றான்.)

பெத்:—மௌராசா! நீங்கதா காப்பாத்தணுங்க.

(பாதத்தில் விழுகிறான்)

ப்ர:—யார், யார், அடே, நீ பெத்தானன்றோ; உனக்கென்னடா துன்பம் நேர்ந்தது? நீ இவ்வளவு தூரம்வந்த காரணமென்ன?

பெத்:—எசமாங்களே! வந்துடுத்து எங்கதலக்கி ஆபத்து.

ப்ர:—அடே, ஏன் பயப்படுகின்றாய்? தைர்யமாய்க்கூறு. உன் தலைக்கு வந்த ஆபத்தென்ன?

பெத்:—மந்திய்யா மவளே பெரிய மௌராசா செறச்சாலலே கொண்ணாந்து வச்சிருந்தாங்க, நானு பெரியானுதா காவக்காத்தங்க. அப்ப சேனாதிய்யா வந்து ஒங்களுக்காவ எங்க ஊட்ளே நல்ல சாப்பாடு செஞ்சுவச்சிருக்கு, போயி தின்னூட்டு ஒட்டியாங்கடான்னாரு; நாங்க போய்ட்டாரத்துக்குள்ளே, செறச்சால பூட்ட ஒடச்சுட்டு மந்திய்யா மவுளையு கூட்டிக்கிட்டு சேனாதிய்யா ஓடிப்பூட்டாரு. அவுங்க ரண்டுபேரயு புடிச்சாந்தாத்தா உங்கதலதப்பும் இல்லாட்டி கொன்னுப்போடுவேனு பெரிய மவுராசா எங்களுக்கு ஆக்கினை செய்

துட்டாங்க; என் பொஞ்சாதி புள்ளெங்கள்ளாளுண்டே இர்க்குதுங்களே. நா என்னுபண்ணுவே.

ப்ர:—ஏண்டா! மந்திரியின் மகனை எதற்காகச் சிறையில் வைத்தார் பெரிய மகாராஜா?

பேத்:—அதுங்களா, தன்னெ கல்லாணம் பண்ணிக்கமாட்டேனுங்களா, அதுக்காவ.

ப்ர:—அப்படியா; சேனாதிபதியுங்கமலாவும் என்றையதினம் ஓடிப்போனார்கள்?

பேத்:—நேத்து இரவுதாங்க மவுராசா! ஒரு சந்தேவமல்ல.

ப்ர:—என்னடா சந்தேகம்?

பேத்:—ஒங்களெ சிங்கமுளிங்கிச்சாமல்ல, அப்றம் எப்பபொளச்சீங்க?

ப்ர:—இதை யாரடா கூறினார்கள் உன்னிடம்.

பேத்:—பெரிய மவுராசாதா சொல்லி ஊரு ரண்டுபட்டுக்கடக்குதுங்களே. இது என்னு புதுமெங்களோ?

ப்ர:—(தனிமொழி) நான் கனவு காண்கிறேனா என்ன! என் தந்தையுமா இவ்வளவுஞ் செய்திருப்பார்? ஆஹா! இதுவும் என் வேளைப்பொல்லாப்போ? இல்லாதவரை என்னிடம் அளவுகடந்து அன்புபாராட்டிய என் பிதாவும் தன் நாவால் நானிறந்தேனெனக் கூறுவாரா? அவர் அவ்விதங்கூறக் காரணம் யாதாயிருக்கலாம்? என்னையுமீறி நான் ஏதேனுந் தவறு செய்திருப்பேனோ? இல்லை, இல்லை, கமலாவின்மீதுள்ள அன்னவருடைய காதலே இவ்வளவிற்குங் காரணம். அப்பப்பா! இக்காதல் மிகவுங்கொடிது. ஆயினும் கமலாவைமட்டில் நம்பக்கூடாது. வஞ்சக நெஞ்சையுடையவள், பொய்யன்புகாட்டும் புலையாள், நன்றிகெட்ட நாரி, கண்டோருடன் திரியும் வேசி; நான் அவளிடம் விடைபெற்று

வரும்பொழுது எவ்வளவு அன்புடன் பேசினுள், தேன்போல் மொழிந்த அன்னவள் வார்த்தையால் என் தந்தையின்மீதுந் தவறெண்ணங்கொண்டேனே, அன்னவளின் சாகஸமும் வேஷமும் இப்பொழுதன்றோ புலப்படுகிறது. அத்துன்மார்க்கியிடமும் என் மனம் நாட்டமுறலாமா? என் மனக்குரங்கே இதற்குக்காரணம். இக்குரங்கை இனிச்சும்மாவிடலாகாது. பத்திரமாய்ப் பிடித்துக்கட்டவேண்டும். பெத்தான்! மந்திரி சாந்துலர் வந்துவிட்டாரோ அங்கு?

பெத்:—அவுரு சமாசாரம் கேணீமேல உளுந்த கல்லாட்ட இக்குதுங்க, அவுரு இன்னுவரவேல்லீங்க.

ப்ர:—நீ இப்பொழுது என்னடா செய்யவேண்டுமென்கிறுய்?

பெத்:—புள்ளெகுட்டிங்கள்ளா ஊட்லே கடந்து அளுவுதுங்க, எசமாங்க நீங்கதா எப்படியாவது என் குத்தத்தெ மன்னிக்கச்செய்யணுங்க,

ப்ர:—அடே! நான் என் தந்தைக்கு ஆகாதவனுகிவிட்டேன், ஆகையால் இனி யான் அந்நாட்டிற்குச் செல்லக்கூடாது. வேறுனக்கென்னுல் என்னசெய்யக்கூடும்?

பெத்:—ஐயோ, அப்றம் நான் என்னசெய்வேங்க? பெரிய மவுராசா என் தலயவாங்கிடுவாங்களே.

ப்ர:—அதற்கென்னுல் என்ன செய்யக்கூடும்?

பெத்:—இல்லாட்டி இன்னேணு செய்யுங்க, என் தலபோனுப் போவுது.

ப்ர:—என்னசெய்ய வேண்டுமென்கிறுய்?

பெத்:—என் பெஞ்சாதி புள்ளங்களே நீங்களே வச்சிக்குட்டுக் காப்பாத்துங்க, நாஞ்செத்தாச் சாவுறே.

ப்ர:—உன்னைக் கொல்வேன் என்றவனே உன் பெண்ஜாதி பிள்ளைகளை ஆதரிப்பான், உனக்கு அந்தகவலைவேண்

டாம். நீ அங்குசென்றுலொழிய அரசனுன்னைக்கொல்லப்போவதில்லை. நீ இனி அந்நாடிற்கே செல்ல வேண்டாம். வேறெங்காகிலும் போய் பிழை.

பேத்:—அப்படிச்செய்தாக்கெ பொஞ்சாதி புள்ளேங்க கடந்து தவிக்குங்களே என்னுபண்ணுவே.

ப்ர:—யாவருக்கும் படியளக்கும் ஈசன் அவர்களை மட்டில் மறந்தாவிடுவான்? நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். உன்வரையில் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள் போ.

பேத்:—நா வேறெ எங்கே போறதுங்க, ஒங்ககூடவே தா இர்க்கணு.

ப்ர:—என்னுடனிருந்தால் உன் சாப்பாட்டிற் கென்னவழி? வேறெங்காகிலுஞ் சென்றுபிழை.

பேத்:—மவுராசா நீங்களே கஸ்டப்படறப்போ எனக்கென்னுங்க வந்துது சொவம்?

ப்ர:—பெத்தான், நீ என்கூடவே இருப்பதாகவிருந்தால், சில விஷயங்களை நானுனக்குக்கூறுவேன், அதை நீ ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

பேத:—அதுக்கென்ன ஆச்சேபனே, அப்படியே கேக்றேங்க.

ப்ர:—என்னைப்போலவே நீயும் ஆடையணியவேண்டும். எனக்குச்சிஷ்யன் மாதிரி நடக்கவேண்டும். தப்பித்தவறி மகாராஜா என்றழைத்துவிடக்கூடாது. நீ ஒரு ஊமையைப்போலவே நடிக்கவேண்டும். வாபோகலாம்

(போகிறார்கள்)

காக்ஷி முடிவு.

அங்கம் 3. களம் 2.

இடம்—காட்டின் ஒரு பார்சம்.

காலம்—சூர்யாஸ்தமனம்.

பாத்திரங்கள்—விமலன், பானுமதி, மந்தமதி மூவரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

விம:—பானுமதி! ஒரே தம்மில் எவ்வளவு தண்டால் செய் வாய் நீ?

பானு:—சிரமமில்லாமற் செய்தால் பத்து செய்வேன், சிரமப் பட்டுச் செய்தால் இருபது செய்வேன்,

மந்த:—பூ! இவ்வளவுதானே உன்னால் முடியும்?

விம:—மந்தமதி! நீ அதிகம் செய்வாய்போல் தெரிகிறதே?

மந்த:—அதற்கென்ன சந்தேகம். ஒருவரால் எண்ணவுங்கூடுமோ?

விம:—அப்படியா! நீ செய்து இதுவரையில் நான் பார்த்த தில்லை, இப்பொழுது செய் பார்க்கலாம்.

மந்த:—ஆனால் இதோ செய்கிறேன், ஏன் சும்மா நிற்கிறாய்? எண்ணு.

விம:—நீ செய்தாலல்லவோ நான் எண்ணுவதற்கு? செய் எண்ணுகின்றேன்.

மந்த:—இவ்வளவரை ஆயிரம் பதினாயிரம் எண்ணியிருக்கலாமே! உனக்கு எண்ணத்தெரியவில்லை.

விம:—நீ செய்யும்பொழுதுதான் எண்ணவேண்டும், சும்மா நின்றுகொண்டிருக்கும் பொழுதே எண்ணு என்றால் எதற்காக எண்ணுவேன்?

மந்த:—உனக்கு எண்ணத்தெரியுமா என்ற சந்தேகமெனக்கு, அதனால்தான் நான் இன்னமுஞ் செய்யவில்லை.

பானு:—விமலா! அவனே வெறும் பேச்சுவாயன்; உருப்படியாக ஒரு தண்டால், ஒரு அந்தர், ஒரு பல்டி ஒன்றுமே செய்யத்தெரியாதவன், அவனிடமேன் வீண் வார்த்தை? அவனே நம் தொழிலுக்கே லாயக்கில்லாதவன்.

மந்த:—நான் அதிகம் செய்துவிடுவேனென்றபொறாமையினாலல்லவா பானுமதி இவ்விதம் பேசுகிறான்; விமலா! இவன் சொல்லை நீ ஒருபொழுதும் நம்பாதே. ஒரு கழியை

பூமியில் ஊன்றினால் ஒரு காதவழி பறந்து காண்பிப்பேன் தெரியுமா.

விம:—பானுமதியின் எண்ணந்தான் எனக்குந்தெரியுமே, நீ செய் பார்க்கலாம்.

மந்த:—நான் செய்யட்டுமா, அல்லது எனக்கு தாதா ஒருவரிருக்கின்றார், அவரை செய்யச்சொல்லட்டுமா?

பானு:—பார்த்துக்கொண்டாயா விமலா? இவனை நம்முடன் சேர்த்துக்கொள்வதே தவறு. ஏதாவதொரு சமயத்தில் நம்மையும் ஆபத்துக்குள்ளாக்கிவிடுவான்.

விம:—மந்தமதி! ஏனக்கு தண்டால் செய்யத்தெரியாதென்று ஒரேவார்த்தையிற் சொல்லிமுடித்து விடுகிறதுதானே; இதற்கேன் ஊரை வளைத்துப் பேசுகின்றாய்?

மந்த:—தெரிந்திருக்கும்பொழுது எதற்காகத்தெரியாதென்கவேண்டும்? சமயம் சரியாகவிருந்தால் நானே செய்துவிடமாட்டேனா?

பானு:—விமலா! நாமவனிடம் பேசி வீண்பொழுது போக்கிக் கொண்டிருந்தால் மற்றக்காரியங்கள் எவ்வாருவது?

விம:—ஆம், பானு, நானுமிவ்வளவு நேரம் கவனியாதிருந்து விட்டேன். மந்தமதி! போதும் உன் விளையாட்டு.

மந்த:—அதற்காகத்தான் நான் முன்பே கூறினேன் சமயம் சரியாயில்லையென்று பிறகு ஆகவேண்டியதற்கு என்ன யோஜனை செய்திருக்கின்றீர்கள்? சொல்லுங்கள் சீக்கிரம்.

விம:—பானு! அந்த வியாபாரி மிகுந்த திரவியத்தோடு வருகிறானென்றனையே, அவனுக்குத் துணையாக இன்னமெவ்வளவு பேர்கள் வருகின்றார்கள்?

பானு:—அதை நினைக்கத்தானே எனக்குங்கொஞ்சம் அச்சமாகவிருக்கிறது. பொருக்கி எடுத்த முண்டன்களாக பத்து தடியன்கள் வருகின்றான்கள்.

மந்த:—பூ, இவ்வளவுதானு உன் தைர்யம். பயல் ஒண்டி இருக்கும்பொழுது எவ்வளவு பெயர்கள்தான் வந்தாலென்ன, கண்மூடித்திரப்பதற்குள் அவ்வளவு பேர்களையும் பஞ்சுபஞ்சாய்ப்பறக்கவிடமாட்டேனு? என் சாமார்த்தியம் உனக்குக்கூடத் தெரியாதா விமலா?

விம:—ஆம், ஆம், நீ ஒண்டியே போதும்;

பானுః—முதல் பலிக்கல்லவா?

மந்த:—விமலா! அவனென்னை பரிகாசஞ்செய்கிறான் பார்! என் சாமார்த்தியத்தை பானு இன்னமுமறியவில்லை. சமீபத்தில் காண்பிக்கின்றேன்.

விம:—அடேடே! அதோ கவனித்தீர்களா? ஒரு ஸ்திரீயும் புமானுமாக வருகிறார்கள்.

பானு:—ஆம் விமலா! நல்ல ஆடை ஆபரணங்களணிந்து வருகின்றார்கள், சரியான வேட்டைதான் நமக்கின்று.

மந்த:—அடே! உங்களிருவருக்கும் பணமொன்றே குறி, நீங்கள் அதைப் பறித்துக்கொண்டு அந்தப்பெண்ணை மட்டில் என்வசம் விட்டுவிடுங்கள்.

விமః—அடே, அவ்விருவரும் நெருங்கி வந்துவிட்டார்கள். நாம் ஒரு இடத்தில் மறைந்திருப்போம் சீக்கிரம் வாருங்கள்.

(இவர்கள் மறைந்துகொள்ளவும், கோரபத்மன், கமலா இருவரும் வருகிறார்கள்.)

கமః—(தனிமொழி) ஐயோ! எனக்குதவி புரிவாரொருவருமில்லையா? இச்சண்டாளனுடைய இம்சையை என்னால் பொறுக்கக்கூடவில்லையே, இவன் எண்ணத்தை யான் முன்பே அறிந்திருந்தால் எனக்கெதுவரினும் சஹித்துக்கொண்டு அச்சிறையிலேயே இருந்திருக்கமாட்டேனு? ஹா, ப்ராணநாதா, நீர் என்னிடங்

கூறிச்சென்ற எட்டு தினங்கள் முடிந்தும் இன்னமுமா நீர் உம் நாட்டையடையாதிருப்பீர்? எனக்கு நேர்ந்த கதியை இந்நாள் வரையிலா நீரறியவில்லை; அல்லது அறிந்தும் அலக்ஷியத்துடன் என்னை கைவிடத்துணிந் தீரோ? ப்ராணநாதா! இச்சரீரத்தை உமக்கே அர்ப் பணமாக்க நிச்சயித்தவளல்லவோ யான்? நீரே என் னை மறந்திடில் பின் யாவரை உத்தேசித்து என் ஜீவ னிருக்கின்றது? யான் இத்துன்மார்க்கனிடம் ஆகப்ப ட்டுக்கொண்டு ஒவ்வொரு நிமிஷத்தையும், ஒவ்வொரு யுகமாகக்கழிக்கின்றேனே? என் தலைவிதியே இப்படி த்தானோ.

கோர:—கமலா! என்னைவிட ரூபத்திலும் பராக்ரமத்திலும் சிறந்தவனோ ப்ரதாபன்? அப்படிக்கிருந்தால் உனக் கேன் இக்கதியெல்லாம் நேருகின்றது? இவைகளை ச்சற்று ஊன்றி யோஜித்தால் உனக்கே நன்றாகவிளங் கும். இனியாகிலும் காலத்தைப்போக்காமல் என் எண்ணத்தைப் பூர்த்தி செய்.

கம:—கோரபத்மா! நீ ப்ரதாபரினும் மேன்பட்டவனாகவே யிருப்பாய் யான் அதற்கொன்றும் ஆக்ஷேபணை கூற வில்லை; என் மனமவர்பால் நாடிவிட்டபடியால் இனி பிறரொருவரை இச்சிப்பது என் கற்புக்கழகன்று அதற்காகவே யான் கூறுகின்றேன், என்னை வீணில் தொந்தரை செய்யாதே.

கோர:—கமலா! உன் மனதறிந்து ஓர் உன்னதப்பதவியிலிருந் தவன் யான், உனக்குநேர்ந்த துன்பத்தை என்னாற் சகிக்கமுடியாமலன்றோ யானுன்னை மீட்டுவந்தேன்; இனி எனக்கு என் பழய ஸ்தானமேனுங்கிடைக்கப் போகின்றதோ? அதுவுமில்லை; யானுனக்குச் செய்த நன்றியை மறந்து வார்த்தைபாடுவது ஞாயமோ?

கம:—செய்யாமற் செய்த உதவிக்கு
வையகமும் வானகமு மாற்றல் அரிது
என்றார் திருவள்ளுவ நாயனார்.

கேவலம் ஓர் பெண்ணாகிய எனக்கு நீ செய்த உபகாரத்தால் உனக்குப்புகழே யொழிய இகழில்லை. என்னிடம் நீ பிரதி உபகாரத்தை எதிர் பார்த்துச் செய்ததாகவிருந்தால் நீ எனக்குச்செய்தது உபகாரமல்ல. உன் பேராசையாலென்றேர்படுகிறது. ஆயினும் நீ என்னை செய்நன்றி மறந்தவளென்றெண்ணாதே. எப்பொழுதேனுமொரு காலத்தில் என்னால் நீயும் உபகரிக்கப்படுவாய். உன் உபகாரத்தை யானொருபொழுது மறவேன்.

கோர:—இந்த உபசார வார்த்தையைக்கூற எங்குக்கற்றாயோ. கமலா! பசித்தசமயத்திலுண்பதா புசித்தபின் உண்பதா? இச்சமயமுன்னைப்பிரிந்து நானுமுயிருடனிருந்தால் பின்னொருகாலத்தில் எனக்குப் பிரதியுபகாரஞ் செய்வதாகக் கூறுகின்றாய் நீ; அபூர்வமான வொருகனியை பக்குவந்தவறி யருந்தினால் அக்கனி ருசிக்குமா?

கம:—கோரபத்மா! நான் எவ்வளவுகூறியும் இன்னம் உன் சித்தம் சரியாகவில்லையே.
கொலை அஞ்சார், பொய்நாணார், மானமும் ஓம்பார்
களவொன்றோ ஏனையவுஞ் செய்வார் பழியொடு
பாவம் இஃதென்னார் பிறிதுமற்றென் செய்யார்
காமங் கதுவப்பட்டார்.
என்ற நீதிநெறியை நீ அறியவில்லையோ? இப்பொழுது உனக்குத்தோன்றிய எண்ணம் உனது நன்மைக்கல்ல, வேண்டாம். என்னை ஆபத்தினின்றும் மீட்டதற்காகவே யானுனக்கு இவவளவு நேரமாக நன்மதியைக்கூறுகின்றேன்.

கோர:—கமலா! எட்டுச்சுரூக்காய் எதற்காகும்? என்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்தாலன்றி உன் வார்த்தைகள் ஒன்றும் என செவிக் கெட்டப்போவதில்லை.

(ஓர்புறமாக மந்தமதி)

மந்த:—(தனிமொழி) நானென்ன கனவு காண்கின்றேனோ? இல்லை இல்லை; ஆனால் என் கண் முன் தோன்றுவனவெல்லாம் உண்மையோ? ஆஹா! இதுவுமிப்பொய்யுலகின் தன்மையன்றிவேறில்லை. (உற்றுநோக்கி) ஓ! என் அண்ணனின் அருந்தவத்துதித்த கமலாவன்றோ! ப்ரதாபன் ஒழிந்தனன்போலும்; என் அண்ணனின் கதியும் அதோகதியாயிருக்கவேண்டும். இல்லாதவரை இத்துஷ்ட கோரபத்மன் கரத்திடமெவ்வாறு சிக்குவாள் கமலா? ஐயோ! யான்முன்னமே அக்குடிலமன்னனால் கொல்லப்பட்டிருக்கக்கூடாதா? இக்கோலங்களைக் காண்பதற்கோ இது காறுமென்னுயிரைக் காப்பாற்றிவந்தேன்? யான் இத்திருடர்களைபிடிக்கவந்ததும் போதும், இப்பொழுது என் கண்கள் அனுபவித்த சுகமும் போதும்; என் கரத்தில் வளர்த்த கண்மணியை, ஒருவன் இம்சிக்கும் பொழுது என்மனமெவ்விதம் பொறுத்திருக்கும்? இப்பொழுதே அச்சண்டாளனை காக்கை கழுகுகளுக்கிரையாக்குகின்றேன்; ஹா! மனமே பொறு; ஒன்றும் மிஞ்சிவிடவில்லை. இப்பொழுதவசரத்துடன் இக்காரியத்தைச் செய்வாயாகில் மற்றவை யெல்லாங்கெட்டுவிடும். பின்னுங் கவனிக்கலாம்.

கம:—கோரபத்மா! உனக்கு மனமிருந்தால் என்னை என் ப்ராணநாதரிடங்கொண்டுபோய் விடு, இல்லாவிட்டால் என்னைத் தனியே விட்டுவிடு, எவ்விதத்திலேனும் யான் என் ப்ராணநாதரைக்கண்டுகொள்கின்றேன். நீ எனக்குச் செய்யும் கடைசி உபகாரமிதுவே.

கோர:—உன்னிஷ்டம்போல் விடவோ யானுனக்காக இவ்வளவு பாடுபட்டேன்? கமலா! இக்கோரபத்மனின் சுபாவத்தை இன்னமும் நீ அறியாததால் இவ்விதமுங்கூறத் துணிந்தாய், உன் மனதை வருத்தக்கூடாதென்றே யானிதுகாறுமுன்னிடம் நயமாகவார்த்தையாடினேன். இனி ஒருபொழுதும் தாக்ஷண்யம் பாரேன்; யாது கூறுகின்றனை இப்பொழுது ?

கம:—கோரபத்மா! உன் ஆண்மையையும் வீரத்துவத்தையும் இப்பேதையிடங்காண்பிப்பது ஞாயமன்று.

கோர:—நீ மிக்க ஞாயங்கற்றவள்தான் எனக்குத்தெரியும், இப்பொழுதே நீ என் வழிப்பட்டாலாசசுது, இல்லாவிடில் யானுன்னை பலாத்காரமுஞ்செய்வேன்.

கம:—பாம்பின் வாய்ப்பட்ட தவளையாகியவென்னை நீ எதுவுஞ்செய்யலாம்; ஞாயநெறி தவறி நடப்போரை தெய்வமும் தண்டிக்காதுவிடாது.

கோர:—அடி, நன்றிகெட்டவளே! என்னையா தெய்வம் தண்டிக்கும்? அப்போழுது பார்த்துக்கொள்கின்றேன்.

(பலாத்கரித்த எத்தனிக்கிறான்)

கம:—அடா! பாபி! யான் கதியற்றிருக்கிறேனென்று என்னை இக்கோலம் புரிகின்றாய். இஃதுனக்கடாது. என் பாபமுன்னைவிடாது. வீணில் அழியாதே, மஹாஉத்தமியாகிய என்போன்ற ஒரு ஸ்திரீயின் கண்ணீர் உன் வம்சத்தையேவேரறுக்கும். அடா! என் வார்த்தையைக்கேள்.

கோர:—உன் வார்த்தையை நானுகேட்கவேண்டும்? அதற்கு காலமுமிதுதானோ? அறிகின்றேனதையும்.

(கமலாவின் கரத்தைப்பற்றவும், விமலன், பானுமதி, மந்தமதி மூவரும் மூன்று பக்கத்திலிருந்து "அடே சண்டாளா! இதோ.வந்துவிட்டோம்" என்று துப்பாக்

கியை கோரபத்மன் முகத்திற்கு நேராகப்பிடித்துகிட்டிச்சென்று அவனை அசையவொட்டாமற்கட்டி உருட்டிவிட்டு கமலாவை அழைத்துக்கொண்டுசெல்லுகிறார்கள்.)

(ப்ரதாபரும்பெத்தானும் சந்யாசிவேடந்தரித்து வருகிறார்கள்.)

ப்ர:—[கோரபத்மனை பார்த்து] (தனிமொழி) என்ன ஆச்சர்யம்! கோரபத்மன் இவ்விதங்கட்டுண்டு கிடப்பதின் காரணம் யாது? அந்தவேசியால் வந்த கேடோ இவனுக்கும்? இவனிலும் ரூபவான் எவனைக்கண்டோ அவனுடன் சென்றனள் போலும்; இல்லாவிடில் தன் னுயிர்க்கொழுனன் இந்த கதியிலிருக்க தானும்பிரிந்து செல்ல மனந்துணிவாளா? என் தந்தையின் எண்ணம் எவ்வாறோ எனக்குத்தெரியாது. அன்னவரின் எண்ணமே எனக்கனுகூலமாக முடிந்தது; இல்லாவிடில் யான் அத்துன்மார்க்கியின் வஞ்சனையை அறியாது மணந்தேயிருப்பேன். ஈசனே! என் மாட்டுனக்குள்ள கருணை தானென்ன, முதலில் துன்பம்போற்காட்டி இன்பம் செய்தவுன்னை என்றும் மறவேன்.

கோர:—ஐயா! தங்களைப்பார்த்தால் ஒரு மஹான்போற்காண்கின்றது. சற்றெனக்குதவிபுரியவேண்டும், நிரம்பவும் கஷ்டப்படுகிறேன்.

ப்ர:—உனக்குயாரப்பா இத்தீங்கைச் செய்தவர்?

கோர:—ஐயா! நானும் என் பத்நியுமாக இப்பாதைவழியே வந்தோம். யாரோ சில திருடர்கள் சேர்ந்து என்னைக்கட்டிப் போட்டுவிட்டு என் பத்நியையும் தூக்கிச் சென்றனர்கள்.

ப்ர:—நீ யார்? உன் தேசமெது? நீ இப்பாதையாக வந்த காரணம்?

கோர:—நான் குந்தளதேசத்துச் சைன்யாதிபதி என் பெயர் கோரபத்மனென்பார்கள். சில காரணத்தால் யானு

மென் பத்நியும் வேற்றூருக்குச் செல்லும்படியாக நேர்ந்தது.

ப்ர:—அதன் காரணத்தை கூறக்கூடுமோ?

கோர:—என் பத்நியை அந்நாட்டரசன், தன்னை மணக்க மறுத்தகுற்றத்திற்காகச் சிறையில்வைத்தான். ஒருநாளிரவில் அச்சண்டாளனறியாமல் என் பத்நியை யான் மீட்டுவந்துவிட்டேன்:

ப்ர:—உன் பத்நியின் பெயரென்ன?

கோர:—கமலா என்பார்கள். அப்பெண்ணும் சாமான்யமுள்ள ஒருவனது பெண்ணல்ல, அந்நாட்டமைச்சனின் ஏக புதல்வி.

ப்ர:—கோரபத்மா! மணமாகிய பெண்ணை அவ்வரசன் இச்சித்த காரணமென்ன? நீ சொல்வது எனக்குப்புதுமையாகவிருக்கின்றதே.

கோர:—ஐயா! எனக்குமப்பெண்ணுக்கும் வெளிப்படையாக மணம் நடக்காத காரணத்தைத்தவிர வேறில்லை.

ப்ர:—ஆனல் உனக்குமப்பெண்ணுக்கும் பரஸ்பர அன்யோன்யம் நீடித்திருந்ததுபோலும்.

கோர:—ஆம்.

ப்ர:—திருடர்கள் கரத்திடஞ்சேர்ந்த உன் பத்நியை இனி நீ எவ்வாறு மீட்கப்போகின்றாய்?

கோர:—என்னால் மீட்கமுடியும், தாங்களென்னை அவிழ்த்துவிட்டால்.

ப்ர:—அடே! ஊமை! நீயுமொருசிஷ்யனாக என்னிடஞ்சேர்ந்தாயே, அம்மனிதன்கட்டுகளை அவிழ்த்துவா சீக்கிரம். (கட்டுகளை அவிழ்த்துவிடவும்.)

கோர:—ஐயா! தாங்களெனக்குச்செய்த உதவியை யானொருபொழுது மறவேன், என் பத்நியை யான் மீட்கவே

ண்டிய தவசியமாயிருப்பதால் எனக்கு விடையளிக்க வேண்டும்.

ப்ர:—நல்லது! உன்மனம்போல் போய்வா, எனக்குங்கொஞ்சம் வேலையாயிருக்கிறது நானும் போகிறேன்.

(இருவரும் வெவ்வேறு புறமாகப் போகின்றார்கள்.)

காக்ஷி முடிவு.

அங்கம் 4. களம் 1.

இடம்—ஓர் பாழ் மண்டபம்.

காலம்—இரவு.

பாத்திரம்—குடிலமன்னன் வருகிறார்.

குடி:—(தனிமொழி) கெடுவான் கேடு நினைப்பான் என்பது எனக்கே ப்ரத்தியக்ஷமானது; முன்னம் யான் செய்த வ்ருதம், தவம், நோன்பு இவைகளாலெனக்குக் கிடைத்த பாலனன்றோ ப்ரதாபன்; மிக்கன்புடன் என் கரந் தொட்டு வளர்க்கப்பட்டவனுச்சுதே, என் உயிருக்குயிராகிய என் மைந்தனுக்கு யானே தீமை செய்துவிட்டேனே! அப்பாபமல்லவா என்னை இக்கதிக்காளாக்கியதிப்பொழுது.

தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கேல்லாம் இனிது.

என்றார் தெய்வப்புலவரும்; அப்பாடலின் உட்கருத்தை அறிந்தபிறகும் என்னுயிரை வைத்துக்கொள்ளவேண்டுமோ? அப்பா! ப்ரதாபா! யான் உனொருவனுக்குச் செய்த தீமை இவ்வுலகையே சூழ்ந்துகொண்டது; மிகுந்த அபசாரம் செய்த என்னைச்சுமப்பதற்கு இனி பூமாதேவியும் மனமொப்பாள். இப்பொழுதே யான் தற்கொலை புரிந்துகொள்வதுதான் நலம்; ஈசனே! என்னறியாமையாற் செய்த பிழையைப் பொறுத்து என்னை உன் பாதம் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

(கட்கத்தை ஓங்கி வெட்டிக்கொள்ளுஞ் சமயத்தில் வேஷதாரிசளாகிய ப்ரதாபரும் பெத்தானும் ஓடிவந்து குடிலமன்னன் கரத்தைப்பிடித்துத் தடுத்துவிடுகிறார்கள்.)

ப்ர:—உம்மைப் பார்த்தால் ஓர் ராஜவம்சத்திலுதித்தவராகக்காண்கின்றதே, உமது மனம் வெறுத்து இக்காரியத்திற்குடன்பட்டகாரணம் யாது?

குடி:—துறவியாகியவுமக்கேனித்தொல்லை? அவரவர் விதியை அவரவரனுபவிக்கிறார்களென்று நீர் சும்மாப் போகலாகாதா?

ப்ர:—(தனிமொழி) இருள் மூட்டத்தால் முதலில் இவரை யான் இன்னாரென்றறியாவிடினும் இப்பொழுதறிந்தேனின்னவரின் தொனியால்; இவரே என் பிதா என்பதில் கொஞ்சமுஞ் சந்தேகமில்லை. ஆம்! இவரேன் தற்கொலை புரிந்துகொள்ளத் துணிந்தார்? கமலாவைப் பற்றிய கோரிக்கை தனக்கீடேறாததினாலா? அஃதொன்றே காரணமாகவிருந்தால் இவ்வளவு தூலை கடந்தேதற்காக வரவேண்டும்? இதில் ஏதோ விசேஷமிருக்கின்றது; மெள்ள அறியலாம். ஐயா! நீர் கூறியபடி யான் துறவிதான். அதற்கொன்றும் ஆக்ஷேபணையில்லை மஹாமண்டலேச்வரராகிய நீர் உமது நாட்டைவிட்டு செங்கோல் மறந்து சுற்றத்தாரையும் பிரிந்து இந்த நல்லிருளில் நீர் தற்கொலை புரிந்துகொள்வதைக் கண்டால் யாவருக்குத்தான் மனமொப்பும்? அன்றியும் என் போன்றவர்கள் இச்செய்கையை ஒருபொழுதும் பார்க்கசகியார்கள்.

குடி:—ஐயா! நான் மஹாபாதகன், பரம சண்டாளன், புத்திரத்ரோகி இனியானிருந்தென்ன, பூமிக்குப்பாரமல்லவோ?

ப்ர:—நீர் இவ்வளவையுமா செய்திருக்கின்றீர்?

குடி:—ஐயோ! அதை ஏன் கேட்கின்றீர்? என் அறியாத்தன் மையால் இன்னமெவ்வளவோ அக்கிரமங்களையுஞ் செய்திருக்கின்றேன்.

ப்ர:—ஆனால் நீர் எல்லா தோஷத்தினின்றும் விடுபட்டவரா யிற்றே இனி.

குடி:—நான் எப்படி விடுபட்டவனாவேன்?

ப்ர:—எப்பொழுது உமது குற்றமுமக்கே தோன்றும் பகுத் தறிவு வந்ததனவோ, அப்பொழுதே உமது பாபமும் மை விட்டுவிலகியது. இனி நீர் உமது ராஜ்பத்திற்குச் சென்று சத்ய நெறிதவறாது செங்கோல் செலுத்தும்; போய்வாரும்.

குடி:—இனி எனக்கேது ராஜ்பம்—யான் செங்கோல் செலுத் துவதற்கு? யாவும் ஒழிந்தது.

ப்ர:—ஏனிவ்விதங்கூறுகின்றீர்? உமது ராஜ்யத்திற்கு நீர் செல்ல உமக்கென்ன தடை?

குடி:—வேற்றரசன் கைக்கொண்டபிறகு எனக்கேது ராஜ் யம்?

ப்ர:—வேற்றரசனா, அவன் யாரவன்? முன்னம் உமக்குமவ னுக்கும் ஏதேனும் பகைமையுண்டோ?

குடி:—என் நாட்டுவளப்பத்தில் பொறாமைகொண்ட கடகது மன், முன்னமனேகமுறை போருக்குவந்து புறங்காட் டிச் சென்றான். இப்பொழுது சமயம்பார்த்து கைக் கொண்டான்.

ப்ர:—ஏன், உமது படையின் வலுவு இப்பொழுது குறை ந்துவிட்டனவோ?

குடி:—ஐயா! அதை ஏன் கேட்கின்றீர்? காளமேகமென்றால் சப்தமேகங்களும் கிடுகிடுக்கும்; அவன் ஒரு அமைச் சனெனக்கு. சில துர்ப்போதனைக்காரர்களால் அவனி டம் பகைமைகொண்டேன். வீரமே உருவெடுத்த

தையொப்ப என் மைந்தன் ப்ரதாபனுக்கும், ப்ரஹஸ்பதி எனமதிக்கும் என் ப்ரதமமந்திரிக்கும் த்ரோகஞ்செய்தேன். என் உப்பைத்தின்று எனக்கே இரண்டகஞ்செய்த கோரபத்மனென்னும் சைன்யாதிபதியும் போய்விட்டான். என் பலம் பலவழிகளிலுங்குறைவுபட்டக்காரணத்தால் என் ராஜ்யம் பறிபோனது.

ப்ர:—(தனிமொழி) ஓஹோ! காரியம் இவ்வாறாய் முடிந்ததே, இதற்கு நானென்ன செய்கிறது? இப்பொழுது யானென்னை வெளிப்படுத்திக்கொள்ளலாமா? கூடாது, கூடாது; என் தந்தை பின்னும் வருந்துவர். ஆயின், நானிப்பொழுது செய்யவேண்டியதென்ன? கடகனுமனிடம் போருக்குச்செல்வோமா? அப்படிச்செய்வதற்கு என்னிடத்திற் சிறிதளவும் சைன்யமில்லையே. ஏகாங்கியாய்ச்செல்வதுங்கூடாது: ஈசனே! கமலா என்னும் ஓர் சஞ்சலப்பைசாசத்தை படையாமலிருந்திருக்கக்கூடாதா? அப்பைசாசத்தால் விளைந்தகேடல்லவோ இவ்வளவும்; ஏ ராஜன்! நீர்கூறுமுன்னமே உம் சரித்திரமுழுதும் என் ஞானதருஷ்டியாலறிந்தேன். உமக்கு பட்டமகிஷி சில காலத்திற்குமுன்பு விஷத்தினலிறக்கப்பட்டாளன்றோ?

குடி:—ஆம், உண்மைதான்.

ப்ர:—உமதுப்ரதம மந்திரியின் மகளுக்கு நீர் ஓருலிகிதம் வரைந்ததுண்டா?

குடி: —ஆம்.

ப்ர:—அவள் உம் கருத்திற்கிசையவில்லையே?

குடி:—இல்லை, இல்லை;

ப்ர:—அப்பெண்ணாசையால் வந்த கேடல்லவோ உமக்கிவ்வளவும்?

குடி:—ஆம்.

ப்ர:—இன்னமுமக்கேதேனும் சந்தேகமிருந்தாற்கேளும்.

குடி:—ஸ்வாமி! தங்களின் மஹிமையை யான் முன்பே அறியாததற்கென்னை மன்னிக்கவேண்டும். முக்காலங்களையுமுணர்ந்த தங்களிடத்தில் எனக்கினிச்சந்தேகமேது.

ப்ர:—நான் பின்னுஞ்சில விஷயங்களைக்கூறுகின்றேன், அதன்படி நடந்தால் உமக்கு சகல நன்மையுமுண்டாக்கும்.

குடி:—அவ்விடத்து இஷ்டம்போல் நடக்க காத்துக்கொண்டிருக்கிறேன்.

ப்ர:—நீர் வீணாக தற்கொலைபுரிந்துகொள்ளவேண்டாம். உமக்கு நண்பனொருவன் சிங்களத்திலிருக்கின்றான்; நீர் அவனது க்ரஹத்தில் சிலகாலம் தங்கியிருப்பீராகில் உமது மைந்தனை உம்மாலிழக்கப்பட்ட சகலத்தையுமீட்டு உம்மையும் அழைத்தேகவருவான். அப்பொழுது நீர் மிகுந்த சந்தோஷத்தை அடைவீரென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. அப்படிச் செய்வதற்குமக்கென்ன தடை?

குடி:—ஸ்வாமி! ஈச்வரன் அடியார்க்கெளியவரென்றால் தம்போன்ற ஞானிகளின் பெருமையைச்சொல்லவும் கூடுமோ? மஹானாகிய தம்வாக்காலேற்பட்டது ஒருபொழுதும் பொய்யாகாது. நான் தாங்கள் கூறிய வண்ணமே நடக்கின்றேன்.

ப்ர:—இது நிச்சயந்தானே?

குடி:—தவறமாட்டேன், சத்யம்.

ப்ர:—நல்லது எனக்கு கொஞ்சம் ஜோலியிருக்கின்றது, நான் சென்றுவருகிறேன்.

குடி:—அப்படியே.

ப்ர:—எனக்கு இவனொரு ஊமைச்சிஷ்யன்; ஆயினும் மிகுந்த புத்திமான், நான் சொல்வதை கவனமாய்க் கேட்டு நடப்பதில் தீரன், அடே! சிஷ்யா! நீ கவலையுறாதே, என் தபோ மஹிமையால் உன்னையும் கூடியசீக்கிரத்தில் பேசவைக்கின்றேன்; வா நாம் போகலாம்.

(போகிறார்கள்)

காக்ஷி முடிவு.

அங்கம் 4. களம் 2.

இடம்—விமலனின் ரகஸ்யவீடு.

காலம்—சந்திரோதயம்.

பாத்திரம்—கமலா ஓர் மஞ்சத்திற் சயனித்துக்கொண்டிருக்கும்பொழுது கனவு காண்கிறாள்.

ப்ராணநாதா! நான் தங்களுக்கொரு விதத்திலுமபசாரஞ் செய்தவளல்லவே, ஏன் என்மீது வீண்பழி சுமத்துகின்றீர்? நாதா! எனக்குத்தங்களினுஞ் சிறந்ததென இப்புவியி லொன்றிருக்கின்றதோ? இல்லை, இல்லை, என் வார்த்தையை நம்புங்கள். ஐயோ! ஈதென்ன இவ்விதங்கூறுகின்றீர்? நானோ கோரபத்மனின் காதலைப்பெற விரும்பினேன்; ப்ராணநாதா! என் செய்கையை யான் பிறரிடமறைக்கினும், நம் யாவரையும் படைத்து சர்வத்திற்கும் சாக்ஷியாயுள்ளவனிடமு மறைத்துவிடக்கூடுமோ? அவனறியக்கூறுகின்றேன், தங்களையன்றி மற்றெவரையும் என் மனத்திலும் நினைத்தவளல்ல; இன்னமுஞ் சந்தேகமா உமக்கு? ப்ராணநாதா! என் முகத்தைப்பாருங்கள், பார்க்கமாட்டீரா? ஐயோ! போகின்றீரே, என்னைத்தனிவிட்டுச் செல்வதுமக்கு தர்மமா? தங்களையே கதியென்றடைந்தவளல்லவோ யான், ப்ராணநாதா! ஐயோ! போய்விட்டாரே; சரஸா! சீக்கிரஞ்சென்று அவரை அழைத்து

வாடி (திடுக்கிட்டெழுந்து) என்ன ஆச்சர்யம்! நானிருக்குமிடமென்ன, என் நிலைமை என்ன, என் ப்ராணநாதரெப்பொழுது வந்தாரிங்கு, அவருமா என்மீதிலிவ்வாறு சந்தேகங்கொள்வார்? என் தன்மையை அறியாதவரோ அவர்? ஐயோ! இப்படியுமொரு கனவா; இக்கனவு எனது நன்மைக்கோ அல்லது இனி எனக்கு நேரப்போகுந்தீமைக்கோ, ஒன்றுந்தெரியவில்லையே. ஈசனே! கோரபத்மன் ஒருவனாலடைந்த துன்பம் போதாதாவெனக்கு, இத்திருடர்கள் கரத்திடம் வேறு என்னைச் சேர்ப்பிக்கவேண்டும்; ஐயோ! அவர்களென்னை படாதபாடும் படுத்துவார்கள்போற்றோன்றுகின்றதே, இப்படியுமா என் தலையிலெழுதினீர்? (மந்தமதி வருகிறான்) ஐயோ! இதோ வந்துவிட்டானே சண்டாளன்; ஈசனே! நீதான் காப்பாற்றவேண்டும்.

மந்த:—கமலா! ஏன் பயப்படுகின்றாய்? உன்னை யான் காப்பாற்றக்கூடியவன், அஞ்சாதே; இச்சமயம் யானென்னை வெளிப்படுத்திக் கொள்ளக்கூடாத நிலைமையிலிருக்கின்றேன்.

கம:—ஐயா! நான் குடிலமன்னனால் சிறைப்பட்டிருக்கும்பொழுது, கோரபத்மனும் என்னைக்காப்பாற்றுவதாகக்கூறித்தானழைத்து வந்தான். பின் அவனாலேயே யான் துன்பமடைந்தேன்.

மந்த:—அவனைப் போன்றென்னை எண்ணாதே, யானுன்னை காப்பற்றக்கடமைப் பட்டவன்; ஓ! அதோ வந்துவிட்டார்களவர்கள், ஒன்றும் பேசாதே.

(விமலனும் பானுமதியும் வருகிறார்கள்.)

விம:—மந்தமதி! நீ என்ன கூறியமொழிக்கு விரோதமாக நடந்தாய்? இப்பெண்ணின் சயனக்ரஹத்திற்கு நீ தனித்துவந்த காரணமென்ன?

மந்த:—அதனுலா நீ என்மீது சந்தேகங்கொள்கின்ருய்? பேஷ்!

பானுஃ—விமலா! இவனுடைய விஷயத்தை நானுனக்கெவ்வளவோமுறை கூறியும் நீ சற்றுங்கவனிக்கின்ருயில்லை. இவன் ஏதோ ஒரு காரியத்தை முன்னிட்டே நம்மைச்சேர்ந்திருக்கின்ருன். இவனை ஒருபொழுதும் நம்பத்தகாது.

மந்த:—பேஷ், நிரம்பவும் பேஷ், பானு என்ருல் சந்திரனையோ, சூர்யனையோ சொல்வார்கள், அவர்களைப்போல நம்முடைய பானுவின் புத்தியும் பிரகாசிக்கின்றது. விமலா! அவன் புத்தியைப்போல உன் புத்தியையும் ஆக்கிக்கொள் மிகவும் நலம்.

விம:—பானு கூறுவதை யான் கவனிக்கவில்லை; நீ இவ்விடம் என்ன காரணம்பற்றி தனித்து வந்தாய்? அதைச் சொல்.

மந்தஃ—விமலா! யானிப்பெண்ணிடம் யாதொரு விதமான தவறெண்ணமுங் கொண்டுவரவில்லை.

விம:—பின் எதற்காக வந்தாய்?

மந்தஃ—நம் குலதெய்வ சாக்ஷியாய்க் கூறுகின்றேன், நானிப்பெண்ணிடம் யாதொரு விதமான தவறெண்ணமுங் கொண்டு வரவில்லை. இன்னமுமா சந்தேகமுனக்கு? இப்பெண் என் தாய்க்குச் சமானம், போதுமா?

விம:—மந்தமதி! நீ கூறுவதில் எனக்கொன்றும் சந்தேகமில்லை; பானு உன் விஷயத்தில் தப்பபிப்பிராயங்கொண்டதனுல் நானுன்னை இவ்வளவாக வற்புறுத்திக்கேட்டேன் இதனுல் உனக்கொன்றும் ஆயாசம்வேண்டாம்.

மந்த:—என்ன விமலா! எனக்கெங்கிருந்துவரும் ஆயாசம்? மடியில் கனமிருந்தால் வழியில் பயம்; குற்றமுள்ள நெஞ்சு குருகுருக்கும்; எனக்கென்ன வந்தது.

விம:—ஆம், இப்பெண்ணை யார் மணந்துகொள்வது?

பானு:—மந்தமதிதான் ஒரு வழியாகக்கூறிவிட்டான்; இனிமேல் நீயாகிலும் நானாகிலும் மணந்துகொள்ளவேண்டுவதுதான்.

மந்த:—அனுவச்யமாய் நீங்கள் என்மீது சந்தேகப்பட்டதால் நானவ்விதங்கூறினேன்; ஆயினும் இனியான் இப்பெண்ணை மணக்கப்போவதில்லை.

விம:—பானு! இன்னமொன்றுசெய்வதுதான் நலம். அதாவது நம்மிருவரில் இப்பெண்ணுக்கு யார்மீது இஷ்டமோ அவனை மணந்துகொள்ளட்டும்.

மந்த:—அப்படியல்ல; ஒருவருக்கு மணமாகி மற்றிருவருக்கு மணமாகாதிருப்பது ஞாயமன்று. இன்னமிரண்டு பெண்களைக்கொண்டுவந்த பிறகே மூவருஞ் சேர்ந்து மணஞ்செய்துகொள்ளலாம்.

பானு:—இன்னமிரண்டு பெண்கள் எவ்விதங்கிடைக்கப்போகின்றன? அப்படியே கிடைக்கினும், ஒருவளைப்போலவே மற்றிருவளும் சமஅழகை ஒத்திருப்பாளா? அதெல்லாங்கூடாத யோஜனை.

மந்த:—இந்தக்கவலை யேனுனக்கு? இப்பெண்ணைப்போலவே மற்றிரு பெண்ணையும் நான் கொண்டுவருகின்றேன். இதுவொரு பெரிய காரியமா?

விம:—எது இவ்வளவு நிச்சயமாகக்கூறுகின்றனை மந்தமதி?

மந்த:—இதுவரை ஒருவருக்கும் மணவாசையிராததனால் நானுங்கவனிக்கவில்லை. இப்பொழுதுசொல்; உனக்கெந்த ராஜகுமாரத்தி வேண்டும், இக்ஷணமே கொண்டுவருகின்றேன். என் சமர்த்தை பானு இதுவரை அறியாததால் என்னை எளனமும் செய்கிறான், அதனையுங் கூடிய சீக்கிரத்தில் காண்பிக்கின்றேன்.

விம:—பானு! மந்தமதி அவ்விதமே செய்வான். அவன் நம்மிலும் பக்காத்திருடன். அவனைச்சாமான்யமாய் நினையாதே.

பானு:—குருடன்வேண்டுவது கண்; நமக்குவேண்டுவது பெண். மந்தமதி! நீ கூறியவண்ணமே நாளைக்குள் உன்னால் இரண்டு பெண்களைக்கொண்டுவரக்கூடுமோ?

மந்த:—இதற்குவேறு நாள் குறிப்பிட்டாயா? இக்ஷணமே என்னால் கொண்டுவரக்கூடும். அதற்காக இப்பொழுதே என்னை அனுப்பிவிடாதே, கொஞ்சம் நித்திரைசெய்து களையாற்றிக்கொண்டு உடனே போய் கொண்டுவருகிறேன்.

விம:—பானு! மந்தமதி! வாருங்கள் நாமெல்லோரும் கொஞ்சம் நித்திரைசெய்துவிட்டு பிறகு வருவோம். அதற்குள் கமலாவுங்கொஞ்சம் களையாறட்டும்.

(எல்லோரும் போகிறார்கள், கமலாவும் ஒரு புறமாய்ப் போகிறாள். சற்றுநேரத்திற்கெல்லாம் பானு தன கரத்திலொரு லிகிதத்துடன் விமலனை அழைத்துவருகின்றான்.)

பானு:—அப்பொழுதே யான கூறியதைக் கேட்டனையா? இதோ பார்.

(அந்த லிகிதத்தைக் காண்பிக்கின்றான்.)

விம:—(படிக்கிறான்) எனதுயிர் நண்பராகிய காளமேகருக்கு; நீண்டகாலமாய் நம் நாட்டிற்கிடர்செய்யும் காட்டுத் திருடனாகிய விமலனை உன்னையன்றி அடக்குவாரெவருமிலர். இக்காரியத்தை நீ முடிப்பையேல் என் ராஜ்யத்திற் பாதியளிப்பதுந்தவிர உன்னை எப்பொழுதும் மறவேனிது சத்யம்.

இப்படிக்கு,

வத்ஸ ராஜன்.

ஓஹோ! இவனா என்னை அடக்குபவன்? இந்த காட்டுக்கு ராஜாவாகிய என்னை ஒருவன் என் ராஜ்யத்திலேயே அடக்குவதென்றால் பிறகென்னவிருக்கிறது? பானு! என்ன யோஜிக்கின்றாய்? கொண்டுவா துப்பாக்கியை, அப்பாதகனை இப்பொழுதே சுட்டுவீழ்த்துகின்றேன்.

(பானுமதி உட்புறம்போய் திரும்பிவருகிறான்.)

பானு:—விமலா! வந்துவிட்டது மோசம்.

விம:—என்ன! என்ன!!

பானு:—நமது துப்பாக்கி, கத்தி, கட்டாரி, ஈட்டி ஒன்றையுமே காணவில்லை.

விம:—பானு! பரிகசிக்கின்றாயா என்ன?

பானு:—உண்மையாக ஒன்றையுமே காணோம்.

விம:—அச்சண்டாளன் எடுத்துச்சென்றனன் போலும்.

பானு:—விமலா! நமது சகல ஆயுதமும் அவன் கரத்திற் சிக்கிக்கொண்டது; இனி நாம் தப்பும் வழியைச் சீக்கிரம் பார்க்கவேண்டும். இங்கிருந்தால் நாம் மிகுந்த ஆபத்திற்குள்ளாவோம்.

விம:—ஆம், நாமிவ்விடத்தை விட்டுச் செல்வதுதான் நலம்; சீக்கிரஞ்சென்று அப்பெண்ணை ஒரு கோணியிற் கட்டிவா.

பானு:—அதுவும் நல்ல யோஜனை, இதோ வந்துவிட்டேன்.

(கமலாவை ஒரு கோணியிற் கட்டிக்கொண்டு இருவரும் போகிறார்கள். உடனே மந்தமதி துப்பாக்கி முதலான ஆயுதங்களை தரித்த சில வீரர்களை அழைத்து வருகிறான்.)

மந்த:—ஓஹோ ஹோ! கெட்டுவிட்டது காரியம், ஓடிப்போய் விட்டார்கள்; என் அண்ணனின் செல்விக்கமலாவையுமபகரித்துச் சென்றார்கள். வீரர்களே! (கீழ்நோக்கி) அடிச்சுவடு இரண்டே காணப்படுவதால் கமலாவை அவர்கள் தூக்கிச் சென்றிருக்கவேண்டும். அவ்விருவரும் அதிகதூரஞ் சென்றிருக்கமாட்டார்கள். ஓடிவாருங்கள் சீக்கிரம். (போகிறார்கள்.)

காக்ஷி முடிவு.

அங்கம் 5. களம் 1.

இடம்—கடற்கரையோரம்.

காலம்—முன் இரவு.

பாத்திரங்கள்—விமலனும் பானுமதியும், கமலாவை அடைத்த கோணிப்பையுடன் வருகிறார்கள். மரக்கலம் தயாராக நிற்கின்றது.

விம:—பானு! உன் வார்த்தையை யான் அப்பொழுதே கேட்காமற் போனதினால் வந்த கேடல்லவா இவ்வளவும்; என் மரக்கலத்திற்கு இந்நாள்வரை வேலையில்லாமலிருந்து இச்சமயம் வேலை வந்துவிட்டதே. இதை நினைக்கத்தான் என் மனம் வருந்துகிறது. இதற்குமுன் என்னைப் பிடிக்கவந்த வீராதிவீரர்களையும் படுகொலை புரிந்த விமலனல்லவோ யான்? இந்த காளமேகன் என்னை அடுத்துக்கெடுத்தனனே! பானு! உண்மையாகக் கூறுகின்றேன்! நீ இல்லாவிடில் கண்டிப்பாய் நானிவனிடம் ஏமாறுபவனே. இந்தச்சமயத்தில் உதவி புரிந்த வுனக்கு நானென்ன கைம்மாறு செய்வேன்.

பானு:—விமலா! நாமிச்சமயம் இங்கு வார்த்தையாடிக்கொண்டிருப்பது சரியல்ல, நமது கூட்டத்தார் வசிக்கும் பிஜி த்தீவுக்குச்சென்று விடுவதுதான் நலம்.

விம:—ஆஹா! கட்டுக்கடங்காச்சிம்மமாகிய இந்தகாட்டரசன் கலங்காத தீரன், கள்ளர்க்கெஜமான், எனக்குமா இக்கதி நேர்ந்தது? கவரிமான் தன் ஒரு உரோமத்திற்கு பங்கம் நேர்ந்தால் தன்னுயிரையே இழக்குமாம். அதுபோல் அக்காளமேகன் என்னைக்காட்டினின்றுந் துரத்தினாலென்ன, என்னுயிரையே எமபுரத்திற்கனுப்பினாலென்ன? இரண்டுமொன்றுதான். ஐயோ! இச்சமயம் என் கரத்தில் ஒரு ஆயுதமேனு மிருந்திருக்கக்

கூடாதா? இக்ஷணமே அவ்வளவு பேரையும் நமனுக்குப்பலியிடுவேனே.

பாநு:—விமலா! கடந்ததை நினைந்தேன் கலங்கித் தவிக்கின்றாய்? மேலாக வேண்டியதை கவனியாவிடில் பின்னும் விபரீதமாய் முடியும்.

விம:—பாநு! நமது மரக்கலம் அதோ தயாராக நிற்கின்றது. இனி நமக்கு யாதொருவித பயமுமில்லை; இதுகாறும் இக்காட்டை அரசாண்டு இச்சமயமிழந்து நம் ஜனன பூமிக்குச் செல்வதொன்றே என் மனதை வருத்துகின்றது.

பாநு:—விமலா! நிராயுதபாணிகளாகிய நம்மை பெருத்த ஆள் பலங்கொண்டு துரத்திவருகின்றான் காளமேகன். இப்பொழுதே நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். சீக்கிரம் புறப்படு!

விம:—பாநு! கோணியிலடைக்கப்பட்ட கமலாவின்கதி யாதாயிற்றென்று நாம் கவனிக்கவேண்டாமா?

பாநு:—பேஷ்! அதற்குத்தானே இது சமயம்? இதோ உருட்டிவருகின்றேன் இக்கோணியைக் கடல்நீரில்.

விம:—பொறு, பொறு, பாநு! ஏனிவ்விதங் கூறுகின்றனை?

பாநு:—நமக்கு நேர்ந்த இவ்வளவிற்கும் இப்பெண் காரணமன்றோ?

விம:—நம்மறிவு சபலமடைந்தால் இப்பெண் என் செய்வாள்? நமக்கிரண்டகம் செய்த அக்காளமேகனை விட்டு கேவலமிப்பெண்ணிடமா நம் வல்லமையைக் காண்பிப்பது? வேண்டாம்.

பாநு:—ஓ! நீ இரக்கம் பாராட்டுகின்றாய்; ஈவிரக்கம் பச்சாத்தாபமென்பதை ஒழித்த நமக்கு இது அழகல்ல.

விம:—பானு! இப்பெண் உயிர்தரித்திருக்கின்றனளா அல்லது மரித்தனளா என்பதே எனக்குச் சந்தேகமாகவிருக்கிறது. அதையேனும் ஒருமுறை அவிழ்த்துப்பார்க்கலாம்.

பானு:—பிறகுன்னிஷ்டம் விமலா! அதோ பார்! முன்னம் நம் மாற் கட்டியுருட்டப்பட்ட கோரபத்மன் வருகிறான்.

விம:—ஓ! இப்பொழுது நாமென்ன செய்கிறது. அவன் நம்மிலும் பலிஷ்டனாச்சுதே, நமது கரத்திலோராயுதமுமில்லை. சீக்கிரம் மரக்கலத்திலேறிச் சென்றுவிடுவதுதான் நலம்.

பானு:—ஆம், அதுவே சரி, தூக்கு கோணிப்பையை.

(இருவருமாக கோணிப்பையை மரக்கலத்திலேற்றிக்கொண்டு புறப்படவும் கோரபத்மன் ஓடிவருகிறான்.)

கோர:—ஆஹா! ஹா! அச்சண்டாளர்கள் புறப்பட்டுச்சென்றனர்களே. அன்னவர்களின் ஆயுதங்கள் பறிபோனதையறிந்து அவர்களை பழிக்குப்பழி வாங்கி கமலாவையுமடைய எவ்வளவோ ஆவல்கொண்டு ஓடோடியும் வந்தேனே, வந்தும் வீணாகிவிட்டதே! இனி என்ன செய்வேன்; இக்கடலில் நீந்திச்சென்றாகிலும் அவர்களைப்பிடித்து வதைசெய்யட்டுமோ? ஓஹோ! அது ஒருபொழுது முடியாதகாரியம். கமலா! உன்னால் யான் பலவழிகளிலும் கெட்டேன். உன் கதியும் எனக்கு மேலாகிவிட்டது. அப்பொழுதே என் மனதுக்கிணங்கியிருந்தால் உனக்குந் துன்பமில்லை எனக்குந் துன்பமில்லை தெய்வசங்கல்பத்திற்கு யாரென்ன செய்வார். விமலன் கமலாவை பிஜித்தீவுக்குத்தான் கொண்டு செல்லுகிறான். எவ்விதத்திலாவது அங்குச்சென்று கமலாவை கைக்கொண்டுவிடுகிறேன் (போகிறான்)

(காளமேகர் அனேகவீரர்களுடன் ஓடிவருகிறார்)

காளः—ஓ! சென்றுவிட்டார்கள்; வீரர்களே! அதோபோகிறது அன்னவர்களுடைய மரக்கலம். சீக்கிரத்தில் நமது பீரங்கிகளால் அக்கலத்தைச்சுட்டுவீழ்த்துங்கள்,

ஒருவீரன்:—ஐயா! அக்கலத்தில் உமது மகளுமிருப்பாளே, அதற்கென்னயோஜனை?

காளः—ஹா ஈசனே! இந்தச்சங்கடத்திற்கென்ன செய்வேன். ஆம்! அப்பாதகன் கொண்டுச்செல்லினும் அவன்செய்கைக்கொருபொழுதும் கமலா இணங்கமாட்டாள். அங்குச்சென்றும் உயிர்துறக்கப்போகின்றாள். இறக்கவேண்டிய அவள் இனி எங்கு இறந்தாலென்ன. சீக்கிரம் அக்கலத்தைச் சுட்டு வீழ்த்துங்கள்.

(வீரர்கள் பீரங்கிகளால் அம்மரக்கலத்தை உடைத்துவிடுகின்றார்கள்)

காள:—ஒழிந்தான் பாதகன். வாருங்கள் நாம் செல்வோம். (போகிறார்கள்.)

(காக்ஷி முடிவு.)

அங்கம் 5. களம் 2.

இடம் — செம்படவர்கள் குடிசைகளுக்குச் சமீபத்திலோர் சோலை

காலம் — மாலை

பாத்திரம் — காளமேகர் வருகிறார்.

காள:—(தனிமொழி) கமலா! உன் விதியே இவ்விதமிருக்கினும், உன்னை அன்புடன்வளர்த்தயானு உனக்குக்காலனாகவேண்டும்? அக்கொடிய விமலனுடன் நீயுமிறப்பதற்கோ ஜன்மமெடுத்தாய்? ஐயோ! கமலா! உனக்கு நேர்ந்த கதியை நினைக்க என் மனம் பதைக்கின்றதே. இம்மாதிரியெல்லாம் நேரப்போவதை அறிந்தோ உன் தாய் உன்னை இளவயதில் விட்டுமடிந்தனள். இருந்

தால் அவள் மனம்படும்பாட்டை கூறவும் வேண்டு மோ? கண்மணி! நம்பரம்பரை இருந்த நேர்மைஎன்ன இச்சமயம் நம் மெல்லோருக்கும் நேர்ந்த தாழ்மை என்ன! மதனியார் அற்பாயுளானுள், அண்ணன் கதியும் அதோகதியானது, அன்னவர்க்குப் பிறந்த நீயும் கடலுக்கிரையானுய், யானொருவனும் தாமரை இலைத்தண்ணீராய் உயிர் வாழ்கின்றேன்.

(வேஷதாரிகளாகிய ப்ரதாபரும் பெத்தானும் வருகிறார்கள்.)

ப்ர:—என்ன ஆச்சர்யம்! என்போன்ற துர்ப்பாக்கியர்கள் எவருமிராரென்றெண்ணியிருந்தேன்! என்னிலும் மேலான ஒருவனிங்கிருக்கின்றான்போலும். ஆம்! அதை ஏன் நான் கவனிக்கவேண்டும். உலகத்தை பலவிதமாய் ஆட்டி வைக்கின்றானொருவன். அவனுக்கிதுவொரு விளையாட்டாம். (உற்றுநோக்கி) என்ன! அதோ நிற்கின்றவர் காளமேகரன்றோ? அவரிங்கு வரக்காரணமென்ன? இன்னேரம் வருந்திக்கொண்டிருந்தவரும் அவரேயோ? ஆம்! அவராகத்தானிருக்க வேண்டும். இங்குவேறொருவரையுங் காணவில்லை. ஆம்! அன்னவர் துயருக்குக்காரணம் யாதாயிருக்கலாம்? தன் சகோதரன் மகளுக்கும் சகோதரனுக்கும் நேர்ந்த கதியை அறிந்திருப்பாரோ? யார் வந்து கூறப்போகின்றார்களிவர் இருப்பிடமறிந்து? எவ்விதமிருக்கினும் நானே சென்று விஷயத்தை அறிகின்றேன். ஒருசமயம் என்னைக் கண்டுகொள்வாரோ? என் வேஷமதற்கிடங்கொடாது. பார்க்கிறேன்

(காளமேகரின் சமீபத்திற் செல்கின்றார்)

காள:—ஸ்வாமி! நமஸ்கரிக்கின்றேன். என் இந்த நிலைமையில் எனக்கு பெரியோரின் தரிசனங்கிடைத்தது விசேஷந்தான்.

ப்ர:—சிஷ்யா! கிஷ்ணாஜலத்தை எடுத்துவா!

(பெத்தான் புலித்தோலொன்றைப் பூமியிலிடுகிறான்.)

ப்ர:—சிஷ்யா! சந்தியா காலம் சமீபித்துவிட்டது, அனுஷ்டானத்திற்காக வேண்டியதெல்லாம் சீக்கிரம் தயாராகட்டும்.

(ப்ரதாபர் புலித்தோலாசனத்திலமர்ந்துகொண்டு அனுஷ்டானம் செய்கிறார்.)

காள:—ஸ்வாமி! எனது தௌர்பாக்கியத்தால் யான் சகலத்தையுமிழந்தேன். இப்புவியில் இனி எனக்கொன்றிலும் இச்சையென்பதில்லை. தாங்கள்தான் எனக்கு மோக்ஷசாதன மார்க்கத்தை உபதேசிக்கவேண்டும்.

ப்ர:—அவ்விதமே ஆகட்டும்; முதலில் உனது பூர்வ வ்ருத்தாந்தத்தை என்னிடம் கூறவேண்டும்.

காள:—நான் குந்தள நாட்டின் மன்னனுக்கு இரண்டாவது மந்திரியாகவிருக்கும் அந்நாளில், அம்மன்னனது பட்டமகிஷிவிஷம் காரணமாக இறந்தமையால் அவ்விஷத்தையானே இட்டனனெனச்சிலருரைக்க, அம்மன்னனுமதனை உண்மையென நம்பி என்னைக்கொல்ல யத்தனித்தனன், அதை அறிந்த யான் உடனே அந்நாட்டினின்றும் துறந்து எனது பால்யநண்பனான வத்ஸராஜனுடைய ஆதரணையிற் காலங்கழித்துவந்தேன். சமீபகாலத்தில் விமலனென்னுமோர் காட்டுத்திருடன் அந்நாட்டிற்கிடர்செய்தமையால் அவனை ஒழிக்கவேண்டி மந்தமதியென்னும் பெயரைக்கொண்டு அத்திருடனுக்கு நானுமொரு நண்பன்போல நடித்துவந்தேன். ஒருநாள் நாங்கள் காட்டில் திரிந்துகொண்டிருக்கும்பொழுது, குந்தள நாட்டுச் சைன்யாதிபதியாகிய கோரபத்மனென்பவன் எனதண்ணனின் மகள் கமலாவைக் கவர்ந்து வந்து பலாத்காரஞ் செய்ய எத்தனித்தான்......

ப்ர:—என்ன! என்ன! கோரபத்மன் தனக்குடன்பட்டு வந்த பெண்ணை எதற்காக பலாத்காரஞ்செய்யவேண்டும்?

காளஃ—அவனுக்குடன்பட்டு வரவில்லை; குந்தளமன்னன் தன்னை மணக்க மறுத்தகுற்றத்திற்காக அப்பெண்ணைச் சிறையிலிட்டான். ஓரிரவு அம்மன்னனறியாமல் கோரபத்மன் இப்பெண்ணிடம்சென்று "உன்கற்பைக்கெடுப்பதில்லை, உன்மனதிற்கு மாறாக நடப்பதில்லை" என்று உறுதிகூறி அழைத்துவந்து எங்கள் முன்.........

ப்ரஃ—இவ்வளவும் உன் அண்ணன் மகளுரைக்கத்தானே உனக்குத்தெரியவரும். நீ ஒன்றையும் நேரில் அறிந்ததில்லையே.

காளஃ—ஸ்வாமி! இன்னொரு விஷயம் கவனிக்கத்தக்கது. அப்பெண் காதல்கொண்ட புருஷனோ அந்நாட்டிளவரசன், ரூபத்தில் மன்மதன், புத்தியில் ப்ரஹஸ்பதி, சௌரியத்தில் ஸ்ரீராமன், அவன் பெயரோ ப்ரதாபன், இப்போப்பட்ட நவ மன்மதனிடங் காதல்கொண்டவள் கோரபத்மனை விரும்ப ஒருவிதத்திலும் காரணமில்லை, அன்றியும் அப்பெண்ணை தாங்களறியீர்கள், ஒரு அக்ஷரமளவும் பொய்யுரைக்காள்.

ப்ரஃ—பிறகு நடந்ததென்ன?

காளஃ—அந்த கொரபத்மனின் தகாதசெய்கைகளைக்கண்டவுடன் அன்னவன் கைகால்களைக்கட்டி அக்காட்டிலேயேவிட்டுவிட்டு நாங்கள் அப்பெண்ணை எங்களிடத்திற்கழைத்துச்சென்றோம். ஒருநாளிரவு அத்திருடர்கள் என்னை இன்னானென்றறிந்தவுடன் எனக்குத்தெரியாமல் கமலாவையும் தூக்கிக்கொண்டு.........

ப்ர:—ஆ, ஆ, உனதண்ணனின் மகளையுமா தூக்கிச்சென்ளுர்கள்? பிறகு எக்கதியானுள் அப்பெண்?

காளஃ—நான் சில வீரர்களுடன் அவர்களைத்தொடர்ந்துசெல்ல, எனக்குமுன் அவர்கள் மரக்கலமேறி பிரயாணமானுர்கள்.........

ப்ர:—ஓஹோ! பிறகு?

காள:—உடனே நாங்கள் எங்களுடைய பீரங்கிகளால் அம்மரக்கலத்தை தகர்த்துவிட அக்கலமுடைந்து அதிலிருந்த யாவரும் நீரிலமிழ்ந்தார்கள்.

ப்ர:—(தனிமொழி) மண்ணே! இம்மண்வாழ்வை மறந்து மறைந்துசென்றாய்; காலம்வருமுன்னே காலனின்வசரமென்னே; அயன் விதித்ததிதுவோ—ஆ! என் விதிக்காரென்செய்வார்; அழுதுபுரண்டாவதென் ஆற்றலழிந்தபின்? பழியைச்சுமந்தேதன், பாவியாகினேன்.

(மூர்ச்சையாகிறார்.)

காள:—(தனிமொழி) என்ன ஆச்சர்யம்! நம் கமலாவின் கதியைக்கேட்ட இம்மஹான் மூர்ச்சை அடைந்த காரணந்தெரியவில்லையே! ஒரு சமயம் இவரே என் அண்ணனாகவிருக்கலாமோ? அப்படியுந்தோன்றவில்லையே! நம் இளவரசனே? இல்லை, இல்லை; எண்சாணுடலும் மூப்படைந்திருக்கும் இவரைப்பார்த்தால் மும்மலத்தையுமடக்கிய முனிவர்போன்றல்லவோ காண்கிறார். இன்னவர் சோகத்திற்குக் காரணம் யாதாயிருக்கலாம்? அதோ நிற்கும் இவருடைய சிஷ்யனையேனுங்கேட்டறிவோமா? ஆம்! அவனைக்கேட்டால் உண்மை விளங்கும். எனப்பா! உன் ஸ்வாமியார் மூர்ச்சையான காரணம்யாது? ஏ உன்னைத்தான்; ஓஹோ! இவன் செவிடன்போலும்; (உரக்க) ஏ! உன் ஸ்வாமியார் மூர்ச்சையான காரணமென்ன? அடாடா! இவனென்ன ஊமைபோற் காண்கின்றனனே! இந்தச்சிஷ்யன் ஸ்வாமியாருக்கெங்குக்கிடைத்தான்?

(கோரபத்மன் வருகின்றான்)

கோர:—(தனிமொழி) நாமோ இச்சமயம் செம்படர்களிருக்குமிடத்திற்குச் சமீபத்தில் வந்துவிட்டோம். அன்னோர்களில் யாவரேனும் பிஜித்தீவுக்குச் சென்று வந்திருப்பார்கள். அவர்களைக்கேட்டால் நம் கமலாவின் உண

மை தெரியும். பிறகு அவர்களின் உதவியைக்கொண்டே நாமுமங்குச் சென்றுவிடலாம். இதுதான் தக்க யோஜனை. ஓ! அதோ நின்றுகொண்டிருப்பவர் காளமேகரன்றோ? அவரிங்கெப்பொழுது வந்தார்? எதற்காக வந்திருப்பார்? அங்கு பூமியில் படுத்துறங்கும் சந்நியாசி யார்? ஓஹோ! இப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது. முன்னம திருடர்களால் கட்டுண்டு கிடந்த என்னை அவிழ்த்துவிட்டவரல்லவோ? ஒருசமயமவர் நித்திரை தெளிந்தெழுந்தாலும் நாமவரை கவனியாததுபோலிருந்துவிடவேண்டும், அவர் தானாக நம்மை அறிந்துகொண்டு பேசவந்தாலும் அதற்கும் நாம் இடங்கொடுக்கக்கூடாது. முதலில் காளமேகரிடம் செல்வோம் (காளமேகரின் சமீபமாய்வந்து) ஐயா! தங்களைக்கண்டு நீண்டகாலமானதன்றோ? சௌக்கியமாயிருக்கின்றீரா?

காள:—(தனிமொழி) இன்னவன் செய்கை முழுதும் யானறிந்திருப்பதை இவனறிந்தால், பின்னுமென்னை நெருங்கிவரவுந் துணிவானோ? இச்சமயம் நானதை வெளியிட்டென்னாகப்போகின்றது? ஒன்றுமறியாதவன் போலவே நானும் வார்த்தையாடுகின்றேன். கோரபத்மா! எது நீ இவ்வளவு தூரம் வந்தது?

கோர:—ஐயா! உமது தமயன மகளுக்கு நேர்ந்த கதியை நீர் அறியமாட்டீரலலவா?

காள:—நம் இளவரசர் மீது காதல்கொண்ட அவளுக்கென்ன கதி நேர்ந்திருக்கப்போகின்றது?

கோர:—அக்காதலுக்கோர் பங்கமும் நேராதிருக்க நான்பட்டபாடு கடவுள்தான் அறிவார். யாவும் கடைசியாக வியர்த்தமானது.

காள:—ஏன்?

கோர:—திருடர்களாலபகரிக்கப்பட்டு பிஜித்தீவுக்கு கொண்டு செல்லப்பட்டாள்.

காள:—ஓஹோ ஹோ! அப்படியா முடிந்தது விஷயம்.

10

கோர:—நீங்கள் ஒரு காரியம் செய்யவேண்டுமிப்போது.

காள:—என்ன?

கோர:—அந்த தீவுக்குச்செல்ல எனக்கொரு மரக்கலம் வேண்டும். அதைத் தயாரித்துக் கொடுப்பீராகில் எவ்விதத்திலும் நான் நம் கமலாவை கொண்டேவருவேன்.

(ஒருபுறமாக சுகா என்னும் செம்படப்பெண் கமலாவை அழைத்துவருகிருள்.)

கம:—சுகா! என்னடியம்மா என்னை இன்று இவ்வளவு தூரத்திலழைத்து வந்துவிட்டாய்?

சுகா:—ஐயே! எம்மாந்தூரம் வந்திட்டம்? கிட்டத்தானிருக்கு நம்மூடு.

கம:—நாம திரும்ப வீட்டிற்குச் செல்லுமுன் சூர்யாஸ்தமனமாகிவிடுமே, எனக்கு பயமாகவிருக்கிறது, நாம் சீக்கிரம் வீட்டிற்குச் செல்வோம்வா.

சுகா:—ஆயா! நீங்கரொம்ப பயந்தவங்க; கோணியோடே கடல்லே மொதந்து வந்தவங்களல்ல, தெரியுமெனக்கு, போவலாமிருங்க.

(ஒருபுறத்தில் காளமேகர்)

காள:—(தனிமொழி) ஹா! என்ன இது, என் கண்மணியின் தோணியை ஒத்திருக்கும் இப்பெண்மணி யார்? தொனிக்கொத்த உருவமுமமைந்திருக்கிறது. ஒரு சமயம் நம் கமலாவாகவே இருப்பாளோ? எமபுரஞ்சென்ற கமலா இங்கெவ்விதம் வரப்போகின்ருள். என் மனப்பேயல்லவா கண்டோரையெல்லாம் கமலாயென நம்பச்செய்கின்றது. இனி என் கண்மணியின் ஞாபகத்தை ஒழிக்கவேண்டும். இல்லாவிடில் என்னை மிகுந்த சந்தேகத்திற்குள்ளாக்கிவிடும்.

கோர:—(தனிமொழி) கமலாவைப் போலிருக்கும் இப்பெண்மணியார்? செம்படப் பெண்களிலுமிம்மாதிரி ஒருவளிருக்கின்ருளோ? அப்படித்தானிருக்கவேண்டும்; கமலாவுக்குள்ள தேகக்காந்தியையும் இவளிடங்காணும்; ஆயினும் இப்பெண்ணும் கமலாவைப்போல

வேயிருங்கின்றாள். இவளையே நான் மணந்துகொண்டாலென்ன? ஆம்! இவ்விதமே செய்து விடுவதுதான் நலம்.

(ப்ரதாபர் மூர்ச்சை தெளிந்தெழுந்து)

ப்ர:—(தனிமொழி) உலகமாந்தர்கள் தான் கோரியதை அடைந்தபின்னும் திருப்தியடைவதில்லை, மென்மேலும் ஆவலைப்பெருக்கிக்கொண்டே காலத்தைக்கழிக்கின்றார்கள்; தினந்தவறாது அனேகரிறப்பதைக் கண்டும் தான் மட்டில் சிரஞ்சீவியாக நினைத்து பலப்பல கார்யங்களில் ப்ரவர்த்திக்கின்றார்கள். அனேக கஷ்டங்களிலிருந்து விடுபட்ட ஒருவன் மீண்டுமிப்பொய்யுலவாழ்வைப் பெரிதாக மதிக்கின்றான். இவ்வளவுக்குங் காரணம் மாயை என்றவொரு தோன்றாப்பொருளல்லவா? இம்மாயையை வெல்ல, மாயனதுக்ருபை யிருந்தாலன்றி வேறுபாயமில்லை. ஒரு பெண்ணிடம் முதலில் விருப்பைத்தந்து பிறகு வெறுப்புண்டாக்கி பின்னும் விருப்புறுவது என்ன மடைமை! இதுவும் மாயையன்றோ? இனி இதன் வாய்ப்படலாகாது

என்செயலின்றி யாவுநின்செயலென்
றெண்ணுவே னெவ்வொரு காலம்,
புன்செயல் மாயை மயக்கினெ னென் செயலாப்
பொருந்துவேனஃதொரு காலம,
பின்செயல் யாது நினைவின்றிக்கிடப்பேன்
பித்தனே னன்னிலைபெற நின்
றன் செயலாக முடித்திடல் வேண்டுஞ்
சச்சிதானந்த சற்குருவே!

என்றார் தாயுமானார்; ஈசனே! உம்மையே துதிசெய்கின்றேன்! உமது வீக்ஷண்யமன்றி என் அந்தகாரம் பிரகாசமடையாது. இனியாகிலுமெய்யறிவைப் புகட்டி என் அஞ்யான இருளைப்போக்கும். (கமலாவைப்பார்த்து) ஆஹா! என்ன இது! மாயையின் சொரூப

மோ? இல்லை, இல்லை; என் காதலியல்லவோ? இவளெவ்விதம் உயிர் மீண்டாள்? ஈசனே! உமது கருணைமாரியே என் ஹ்ருதயத்திற் பொழிந்தனைபோலும்.

கம:—சுகா! இச்சோலையின் சிங்காரத்தையும், மாலைத்தென்றலையும், மணத்தோடுகூடிய மந்தமாருதத்தையும், அனுபவிக்க ஒருவாறெனக்கு ஆவலிருக்கினும் பொழுதுபோய்விடுமே என்ற கவலையல்லவா குறுக்கிடுகின்றது; பொழுதுபோய்விட்டால் நமக்கு யாரடி துணை?

(ப்ரதாபர் கமலாவின் ஸமீபத்தில் வந்து.)

ப்ர:—பெண்ணே! நாங்கள் எல்லோரும் மனுஷாள்தான், தவிரவும், நானொருவனிருக்கும்பொழுது உனக்கென்ன பயம்?

கம:—(தனிமொழி) இதுவும் என்விதியோ? மன்னனொருவனுயிற்று, வீரனொருவனுயிற்று, கள்ளனொருவனுயிற்று இம்மூவரிடத்திலும் யான்பட்ட கஷ்டம் போதாமல் இன்னம் இக்கிழச்சந்நியாசியிடம் வேறு கஷ்டப்படவேண்டும்? ப்ராணநாதா! இன்னமுமென்னை கவனித்திரில்லையே; ஐயோ! யானக்கடலிலேயே இறந்திருக்கக்கூடாதா? சிறுபலகைத் துண்டென்னை ஏனோ கரைசேர்த்தது? ஐயோ! அசேதனமான மரத்துண்டுக்கென்மீதிருக்கும் பாசமளவும் உமக்கில்லையே. சுகா! வா நாம் சீக்கிரம் வீட்டிற்குச் செல்வோம்.

ப்ர:—பெண்ணே! உன் வீடெங்கிருக்கின்றது?

கம:—அதை யேன் தாங்கள் கேட்கின்றீர்? சுகா! வா நாம் போகலாம். (செல்லமுயலுகிருள்)

ப்ர:—பெண்ணே! பெண்ணே! நில்; உனக்கென்மீதிற்கோபமா? ஏனிப்படி அவசரப்படுகின்ருய்?

கம:—உங்கள்மீதிலெனக்கென்ன கோபம்? பொழுதுபோனதால் நான் வீட்டிற்குச் செல்லவேண்டுமென்றேன்.

ப்ர:—உன்வீடு இருக்குமிடத்தை என்னிடங்கூறக்கூடாதா?

கம:—அதோவ தெரிகின்றது பாருங்கள் செம்படவர்கள் வீடு! அங்குத்தானிருக்கின்றது எனது வீடும்.

ப்ர:—ஆயின் நீ செம்படப்பெண்ணோ?

கம:—இவையெல்லாம் நீங்களெதற்காக கேட்கின்றீர்கள்?

ப்ர:—கேட்டதினாலென்ன கூறக்கூடாதா?

கம:—ஐயா சாமியாரே! உங்களுக்கு வந்தனம் செய்கின்றேன். எனக்கு நேரமாகிவிட்டது நான் போய்வருகிறேன். (செல்லமுயல),

ப்ர:—பெண்ணே! பெண்ணே! ஏனுனக்கிவ்வளவு அவசரம்? என்னைச்சாமியார் என்று நீயே அழைத்திருக்க, பின்னுமுனக்கென்மீதுள்ள சந்தேகமென்னோ? பெண்ணே கோபித்துக்கொள்ளாமல் என் வார்த்தைக்கு பதிலுரைக்கவேண்டும். உன்னைப்பார்த்தால் செம்படப்பெண்ணாகத் தோன்றவில்லையே எனக்கு!

கம:—ஐயா? நான் யாராயிருந்தால் உங்களுக்கென்ன? அநாவச்யமான கேள்வையை ஏன் கேட்கின்றீர்கள்?

ப்ர:—இல்லை, இல்லை, அவசியமாகத்தான் கேட்கின்றேன், நீ யாரென்று நான் அறிந்துகொள்ளக்கூடாதா?

கம:—அறிந்தாகவேண்டியதைக் கூறுங்கள் முன்பு, பிறகு சொல்கின்றேன்.

(ஒருபுறத்தில் காளமேகரும் கோரபத்மனும்)

கோர:—காளமேகமே! இந்தச்சாமியார் யாவர்? உமக்குத்தெரியுமோ?

காள:—அவரைப்பற்றிய விபரம் உன்னிலுமெனக்கதிகமாயொன்றுந் தெரியாது. யானும் அவரைக் கண்டதிதுவே முதல் தடவை.

கோர:—அப்பெண்ணையேனு மறிவீரோ?

காள:—அப்பெண் விஷயத்திலெனக்கு நிச்சயமும் சந்தேகமும் கலந்தேயிருக்கின்றது. உனக்குத்தோன்றுவதென்ன?

கோர:—நம் கமலாவைப் போலவேயிருக்கின்றாள்; ஆயினும் கமலாவல்ல.

காள:—ஏனவ்விதம் கூறுகின்றனை?

கோர:—கமலாவைப்பற்றிய முழுவிபரமும் எனக்குத்தெரிந்திருப்பதால் அவ்விதங் கூறினேன்; காளமேகரே! இந்தகிழச்சாமியார் அப்பெண்ணிடம் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்? கவனித்தீரோ?

காள:—பொறு கோரபத்மா? முற்றுங்கவனிப்போம்!

(மற்றொரு புறத்தில் ப்ரதாபரும் கமலாவும்)

ப்ர:—(தனிமொழி) கமலாவோ இன்னமும் என்னை அறிந்தாளில்லை, ஆயின் காளமேகரும் கோரபத்மனும் அறிந்தார்களோ? அதுவுமில்லை; கமலாவைக்கண்டவுடன் எனக்குண்டான சந்தோஷத்திற் கோரளவில்லை; என் வேஷத்தைச் சற்றுபொறுத்து வெளியிடுவோமென்றாலும் அதற்கும் மனம் வரவில்லை; பெண்ணே! உனக்கு மணமாகிவிட்டதோ?

கம:—ஐயா! தாங்களோ சந்நியாசி; தங்களுக்கேனிக்கவலையெல்லாம்?

ப்ர:—மணமாகிவிட்டதோ என்றால் இதிலென்ன தவறு? என் ஆச்ரமத்துக்கேதேனும்பங்கம் விளைந்துவிடுமோ என்ற கவலையோ உனக்கு? அக்கவலைவேண்டாம் பெண்ணே! மணமாகிவிட்டதோ இல்லையோ?

கம:—அதை யான் கூறமாட்டேன், தங்கள் காரியத்தைப் பாருங்கள்.

ப்ர:—வேறொன்றுமில்லை! எனக்கொரு பத்நி உன்னைப்போலவே இருந்தாள், அதனாற்கேட்டேன்.

கம:—என்னைப்போன்றுமிருக்கலாம், என்னிற் சிறந்துமிருக்கலாம்; அதினாலென்ன?

ப்ர:—அவள்தானோ என்பதான சந்தேகமெனக்கு.

கம:—ஐயா! தாங்களோ சந்நியாசி, யானொரு பருவநங்கை

தாங்களென்னிடம் இவ்விதமாக வார்த்தை யாடுவது முறையன்று.

ப்ர:—பெண்ணே நீ என்மீது கொஞ்சமும் தவறெண்ணங் கொள்ளவேண்டாம். எனது பத்நியாகிய அந்தப்பெண் என்மீதளவற்ற வாஞ்சை நிறைந்தவள்

கம:—பார்த்தாவின் மீதுபத்நிக்கு வாஞ்சையில்லாதிருக்குமா? இஃதென்ன புதுமை!

ப்ர:—உனக்கில்லையே!

கம:—ஐயா! தங்களுடைய பரிகாசத்திற்கு யாரொருவள் தானோ?

ப்ர:—மற்ற யாவரிடத்தில் செய்யக்கூடும்?

கம:—தோற்றப்பொருத்தத்திற்குரிய குணப்பொருத்தத்தைக்காணோமே, தாங்களென்ன போலிச்சந்நியாசியோ?

ப்ர:—அவ்விதமே இருந்தால் நீ என்ன செய்வாய்?

கம:—சுகா! வா நாம்போகலாம்! அவருக்கு வேறு வேலையில்லைப்போலிருக்கிறது.

ப்ர:—கோபித்துக் கொள்ளகூடாது—ஒரே ஒரு வார்த்தை கண்......பெண்ணே!

கம:—என்ன, என்ன, இன்னொருதடவை கூறுங்கள், 'கண்ணேயா'?

ப்ர:—தவறுதலாகக் கூறிவிட்டேன் கண்ணே! கோபித்துக் கொள்ளகூடாது.

கம:—பார்த்தனையா சுகா! மீண்டும் கண்ணே என்றழைப்பதை,

ப்ர:—பெண்ணே! உன்னிடம் யான் பரிகாசம் செய்வேனு? செய்யலாமா? என்னமோ உன்னைக் கண்டதுமுதல் என் பத்நியின் ஞாபகமென்னை விட்டகலாதிருப்பதால் இப்படியெல்லாமுன்னைச் சந்தேகிக்கச் செய்கின்றது.

கம:—ஐயா! எனக்கு விடையளியுங்கள். நான் சீக்கிரம் வீட்டிற்குச் செலலவேண்டும், தங்களுக்கு கோடி வந்தனம்.

ப்ர:—இன்னமதிகஞ்செய்தாலும் தகும்; நானுனக்காசீர்வாதம் செய்யவேண்டுமல்லவா?

கம:—விசேஷந்தான்.

ப்ர:—நீ கோரியப்ரதாபனைச் சீக்கிரமடைந்து சௌக்கியமாயிருப்பாய்.

கம:—(தனிமொழி) ஈசனே! இதுவும் உன் திருவிளையாடலோ! இந்தச்சந்நியாசி என்னகத்தின் உண்மையை எவ்வாறறிந்தனர்? முக்காலங்களையுமுணர்ந்த முனிவராகத்தானிருக்கவேண்டும். ஐயோ! சற்றுமுன்பு நானிவரிடம் தகாத எண்ணத்தைக்கொண்டேனே, அதனையுமறியாமலாயிருப்பாரிவர்? ஐயா! 'பேதைமை என்பது மாதர்க்கணிகலம்' என் பேதைமைச்சுபாவத்தால் யான் தங்களை அறிந்துகொள்ளாமற் போனேன் அதற்கென்னை மன்னிக்கவேண்டும்.

ப்ர:—குற்றஞ்செய்தோர்க்கு எப்பவுந்தண்டனை உண்டு; ஆகையாலுனக்கு தக்க தண்டனை விதியாமலிரேன்.

கம:—விதிவலிது, அதையாவரால் வெல்லக்கூடும்? பிறகு அவ்விடத்துச்சித்தம்; அடியாளுக்கென்ன தண்டனை விதிக்கப்போகின்றீரோ.

ப்ர:—இதோ விதிக்கின்றேன் பார்.

(கமலாவின் கன்னத்தில் முத்தமிடப்போக கமலா தூரத்திற்சென்று.)

கம:—ஐயா! மஹானாகிய உமக்கிது தகுமா? தர்மமா? நீருமிந்த அக்ரமமுஞ் செய்யலாமா

ப்ர:—என்போன்றவர்கள் உன்போன்றவர்களை எதையுஞ் செய்யலாம். அதினால் தோஷமில்லை. தர்ம சாஸ்திரங்களும் அவ்விதமே கூறுகின்றன.

கம:—அன்னிய மாதரை விரும்பலாமென்று?

ப்ர:—உரியவளை விரும்பலாமென்றே.

கம.—ஆனால் தங்களுக்கு யான் உரியவளோ?

ப்ர:—நான் அப்படித்தான் எண்ணியிருக்கின்றேன்:

கம:—(தனிமொழி) வேஷம் பெரிதாயும் செய்கை சிறிதாயுமிருக்கும் இவரை என்னாலறியக் கூடவில்லையே! இக்கிணி சாஸ்திரங் கற்றவராகவிருப்பாரோ? மற்றவர்கள் செய்ததாவது ஒரோ பலவந்தமாகவிருந்தது. இவ

ரோ தாக்ஷண்ய பலவந்தம் செய்கின்றாரே! இவரை நம்பவுமுடியவில்லை நம்பாதிருக்கவு முடியவில்லை; இந்த ச்சங்கடத்திற்கு நானென்ன செய்வேன்? ப்ராண நாகா! உம்மையடையும் பாக்கியம் எனக்கில்லாதவரை இவ்வளவு ஆபத்தினின்றும் நான் மீளப்போவதில்லை; என்று என் கவலையெல்லாமொழிவேனோ? என்று ம்மை அடையப்பெறுவேனோ? என்று உம் நாவால் 'காதலி' என்றழைக்கப்படுவேனோ? ஆஹா! என்ன இது! என் இடது புருவம் துடிக்கின்றதே! ஏதோ என்னையுமீறி என் சரீரம் புளகாங்கிதமடைகின்றதே. ப்ராணநாகா! உம்மை நினைத்தமாத்திரத்தா லிப்படி யெல்லாமேற்படுகின்றதோ? அவ்விதமாகத்தானிருக்க வேண்டும். இல்லாதவரை அனேக காதங்களுக்கப் பாலிருக்கின்ற என் இந்த இருப்பிடத்தை எவ்விதமறி யப்போகின்றீர்?

ப்ர:—பெண்ணே! மஹாராஜாகிய என்னை மணந்துகொண்டால் உன் மனக்கவலை யெல்லாம் நீங்குமல்லவா?

கம:—ஓஹோ! இனி நானிங்கிருப்பது தவறு; சுகா! வா நாம் போகலாம்.

ப்ர:—காதலி என்னைவிட்டெங்கு போகப்போகின்றாய்?

(கமலாவின் கரத்தைப்பற்றவும் ப்ரதாபரின் கரத்துள்ளகனையாழியை கமலா கண்டு 'ஹா! ப்ராணநாதா' என்று ப்ரதாபரின் தோளிற்சாய்ந்துவிடவும், இக்காக்ஷியைக்கண்ட கோரபத்மன் பயந்தோட எத்தனிக்க 'ப்ரதாபர்' அத்துஷ்டனை விடாதே என்கவும் காளமேகரால் பிடித்துக்கொள்ளப்படுகிறான்.)

காக்ஷி முடிவு.

அங்கம் 6. களம் 1.

இடம்—குந்தள தேசத்திற்கருகாமையிலோர் திறப்பு வெளி.

காலம்—நடுப்பகல்.

பாத்திரம்—சரஸா வருகிறாள்.

சர:—(தனிமொழி) கமலா! உன்னை நினைந்து நினைந்து என் மனமும் நொந்துவிட்டது, உன்னைத்தேடியலைந்து என்

பாதங்களும் புண்ணாகிவிட்டதே! அந்தச் சண்டாளனுன்னை எங்கொளித்திருக்கின்றானோ? அவனாலென்னென்ன துன்பங்களெல்லா மனுபவிக்கின்றனையோ! உன் விஷயத்தை இளவரசரறிந்தால் எப்பாடுபடுவார்? ஐயோ! அவரையுங் காணக்கூடவில்லையே!

(விட்டல் தாஸன், கரத்தில் இரண்டு கட்டைகளைத் தட்டித் தாளம்போட்டு பாடிக்கொண்டு வருகிறான்.)

விட்ட:—ஹரிகோவிந்தா—கோவிந்தா; ஹரிகோபாலா—கோவிந்தா; ஹரே முகுந்தா—கோவிந்தா; ஹரி நாராயணா—கோவிந்தா; நாராயணா நாராயணா நாராயணா ஸ்ரீமன்...

(வசனம்) போனவன் போனான் இருந்தவனிருந்தான் யாருக்கென்ன, என்றால் யாவரேனும் பதிற்சொல்வார்களோ? சுப்பனைக் கூப்பிட்டேன் குப்பனும் வரவில்லை யாருக்கென்ன, என்றால் யாவரேனுந் திரும்பிப்பார்க்கிறார்களோ? வேண்டாத பெண்ணை வெருட்டியடித்தால் யாருக்கென்ன. (சரஸாவைப் பார்த்து) அடாடாடா! இந்தா பெண்ணே! நான் பாடஞ்செயதுகொண்டிருந்ததெல்லாங் கேட்டிருந்தாயோ நீ? (சிரித்துக்கொள்கிறான்.)

சர:—ஐயா! உங்கள் பாடமொன்றும் என் செவிக்கெட்டவில்லை.

விட்ட:—எட்டாமலெப்படியிருக்கும். எட்டித்தானிருக்கும்.

சர:—அதற்கென்ன செய்யவேண்டுமென்கின்றீர்?

விட்ட:—எட்டியதைக் கொடுத்துவிடவேண்டும்.

(சப்தமிட்டுச் சிரிக்கிறான்)

சர:—என்னிடம் பரிகாசமா செய்கின்றீர்? போம் நீர் வந்த வழியே!

விட்ட:—போகச்சொன்னால் போவேனோ? பொழுதுபோயினும் விடுவேனோ?

சர:—என்னையா விடமாட்டீர்?

விட்ட:—உன்னைமட்டிலா, இந்த இடத்தையும் விடமாட்டேன்.

சர:—உம்மைப் பார்த்தால் நல்ல மனுஷனாகக் காணப்படுகி றீரே! உமக்கேனிந்த துர்ப்புத்தி? பேசாமற் போய்ச்சேரும்.

விட்ட:—பெண்ணே! என்னை யாரென்று நினைத்தாய்? கம்பர் பாடலைக்கவிழ்த்துப்பாடுவேன், ஔவைப்பாடலை அலங்கோலமாய்ப்பாடுவேன், திருக்குறளை நெடுங்குறளாக்குவேன்; நாலடியாரை எட்டடியாக்குவேன்; என் பெயரைச்சொல்கின்றேன் கேள்! சதுர்வேத பண்டிதப்புலவவிட்டல்தாஸன் தெரிந்ததா. (சிரிக்கிறான்)

சரஸா:—ஐயா! உம்மை நான் குறைத்துக்கூறவில்லை, நீர்மஹா மேதாவிதான் போய்வாரும்.

விட்ட:—நானென்ன பைத்தியங்குளி என்று நினைத்தனையோ?

சர:—இல்லை, இல்லை, உம்மையார் அவ்விதம் நினைப்பார்கள்? பேச்சுவார்த்தைகள் ஒரு மாதிரியாகவிருந்தாலும் எழுதி உம்முடைய நெத்தியில் ஒட்டிக்கொண்டு வரவில்லையல்லவா?

விட்ட:—அவ்விதமே எழுதி ஒட்டிக்கொண்டுவந்தால்?

சர:—உமமை யார் தடைசொல்லக்கூடும்?

விட்ட:—அப்பொழுதென்னை கல்யாணம் செய்துகொள்வாயோ என்று கேட்டேன்.

சர:—உம்மையல்லவா? அவசியம் செய்துகொள்ளத்தான் வேண்டும்.

விட்ட:—(அருகிற்சென்று) நான் எவ்வளவு அழகாயிருக்கின்றேன் பார்த்தனையா? ஸ்ரீமந்நாராயணா (தாளம்போட்டுக்கொண்டு பாடுகிறான்.)

சர:—போதும், போதும், உமதுபாட்டு, வாயை மூடும்.

விட்ட:—நான் நன்றாகவே பாடுகிறேனே, ஏன் போதுமென்கிறாய்?

சர:—ஐயா! எனக்கு தலைவேதனை சாஸ்தியாகவிருக்கிறது, நீர் போய்வாரும்.

விட்ட:—போனால் கல்யாணம் எப்பொழுது செய்துகொள்ளுகிறது?

சர:—நாளைக்குச் செய்துகொள்ளலாம் போய் வாரும்.

விட்ட:—இவ்விடத்திலேயே இருக்கின்றாயா—போய்விடுவா யோ?

சர:—இல்லே, இல்லே, இவ்விடத்திலேயே இருக்கின்றேன்.

விட்ட:—ஆனால் சரி; ஒரு முத்தம் கொடு.

சர:—கல்யாணமாவதற்குள் அப்படி ஒன்றும் செய்துகொள் ளக்கூடாது, நாளைக்கி பார்த்துக்கொள்ளலாம், போய் வாரும்.

விட்ட:—ஸ்ரீமந்நாராயணா நாராயணா (கட்டையை பலமாய்த் தட்டுகிறான்.)

சர:—ஐயா, ஐயா, என்வார்த்தையைக்கேளும்! பொறும் சற்று:

விட்ட:—முத்தம் கொடு (சமீபத்திற் போகிறான்.)

சர:—அதோ என் மாமாவருகின்றார், பேசாமற்போய் நாளை க்கி வா நம் தெரிந்ததா?

விட்ட:—எங்கே வருகிறார்? காணேமே! ஸ்ரீமந்நாராயணா நாராயணா.

சர:—ஆனாலும்மிஷ்டம் போறபாடும்; நானும்மை கல்யாண ஞ்செய்துகொள்ளவே மாட்டேன்.

விட்ட:—அப்படியானால் நாளைக்கு வரலாமா? கல்யாணம்செய்து கொள்ளுகிறாயல்லவா?

சர:—ஆகட்டும், போய்வாரும்,

விட்ட:—இன்றைக்கு தாலியைமட்டிற் கட்டிச்செல்லுகிறேன், நாளைக்கு கல்யாணமாகட்டுமே!

சர:—அப்படிச்செய்யலாகாது; தாலியோடு நாளைக்கு வந்து சேரும்.

விட்ட:—தாலிகூட கையிலேயே இருக்கிறது, வேணுமானால் காண்பிக்கின்றேன்.

(கருகமணி சரமொன்றை காண்பிக்கிறான்)

சர:—போதும், இவ்வளவு போதும்; நாளைக்கு வந்துசேரும்; போம். ஏன் இன்னமும் நின்றுகொண்டிருக்கிறீர்?

(ஒருபுறமாக ப்ரதாபரும் கமலாவும் வருகிறார்கள்)

ப்ர:—கண்ணே! முன்னம் நீ கூறிய வார்த்தையைத் தட்டிச் சென்ற தன பலனை அனுபவித்தாய் விட்டது. இனி ஒருபொழுதும் உன் வார்த்தையைத் தட்டேன். என் னை மன்னிப்பாய்.

கம:—ப்ராணநாதா! என் ஊழ்வினைப்பயனே அவ்விதமாயிருக்க தாங்களா என்னை மன்னிப்புக் கேட்பது? இதனினுமேலான தண்டனை எனக்கு வேறென்னவேண்டும்?

ப்ர:—சிறைகாக்குங் காப்பேவன் செய்யும், மகளிர்
நிறைகாக்குங்காப்பே தலை.
என்றார் தெய்வப்புலவரும். கண்ணே! உன் கற்பு நிலைமையும், மனவுறுதியையும் முற்றுமறிந்த யானே உனமீது சந்தேகங்கொண்டது என் பெருந்தவறல்லவா? அத்தவறுக்காகவே உன்னிடம் மன்னிப்புக்கேட்டேன்.

கம: —முன்னோர்களெல்லாம் மிகுந்த கஷ்டங்களைச் சஹித்து யோகம், தவம் இவைகளால் தன் கோரிக்கைகளை பூர்த்தி செய்துகொண்டிருக்கிறார்கள். நிழலின் அருமை வெயிலிற் சென்றாலொழிய தெரியாது. கஷ்டத்துடன் தேடிய சுகத்திற்குச் சமானமேதேனுமுண்டோ? ப்ராணநாதா! தாங்களை யான் நாதனாக அடைவதென்றால் என் ஜன்மாந்திர பாக்கிய விசேஷமே. யான் பட்ட கஷ்டமெல்லாம் தங்களையடையுந் தவமாய் முடிந்தது. இதிலென்ன தவறு?

(மற்றோர் புறமாக)

விட்ட:—இந்தா பெண்ணே! தாலியுந் தயாராகவிருக்கிறது, உன் கழுத்தில் நானே கட்டிவிடுகிறேன். இதில் உனக்கிருக்கும் ச்ரமமென்ன? கல்யாணம் வேணால் நாளைக்காகட்டும்.

சர:—இவ்வளவு அவசரப்பட்டால் ஒரு காரியமும் நடவாது. இஷ்டமிருந்தால் நாளை வாரும், இல்லாவிடில் உம்மை யான் மணக்கவேமாட்டேன்.

விட்ட:—ஐயையோ! அப்படிச் சொல்லாதே, நாளைக்கு வரட்டுமா?

கம:—ப்ராணநாதா! ப்ராணநாதா! இப்படி வாருங்கள் சீக்கிரம். அந்தா பார்த்தீர்களா?

ப்ர:—பேஷ்! சரஸாவுக்கு நல்ல கணவனாகத்தான் வாய்த்திருக்கிறான்.

(சரஸா, ஹா! கமலா! என்று விரைவுடன் ஓடிவந்து கமலாவைக் கட்டிக்கொள்கிருள்).

கம:—சரஸா! உங்களிருவர் வேடிக்கையும் நான் இன்னம் சற்றுப் பார்த்தானந்திப்பதற்குள் என்னைக் கண்டு கொண்டாயே.

சர:—கமலா! இந்நாள்வரை யான் பட்டபாடு அக்கடவுளே தானறியவேண்டும். மற்ற விபரங்களை யான் பின்பு அறிந்துகொள்ளுகின்றேன். நீயும் இளவரசரும் ஒன்றுசேர்ந்து பார்த்துவிட்டேன். என் ஆனந்தத்திற்குரிய சமயமிதுவேயன்ருே.

ப்ர:—நீங்களிருவரும் உங்கள் ஆனந்தத்தைப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். யானிங்குத் தனியாக நிற்கிறேன்.

விட்ட:—ஸ்ரீமந்நாருயணு நாருயணு (தாளம்போட்டு பாடுகிருன்) இந்தா பெண்ணே! நாளைக்கு என்னை கல்யாணம் பண்ணிக்கொள்கிறேனென்று இன்றைக்கு அந்தப் பெண்ணை கட்டிக்கொண்டு விட்டாயே!

கம:—சரஸா! இந்த பைத்தியக்காரனை எங்கு தேடிப்பிடித்தாய்?

சர:—ஐயோ! அதை என் கேட்கின்ருய் கமலா? எங்கிருந்தோ வந்து ஒரு நாழிகையாக இப்படியே உபத்திரவஞ்செய்கிருன். அவன் நிரம்ப அழகாயிருக்கின்ருனும், கானரஸத்தில் தேர்ந்தவனும், பெரியபுலவனும், கமலா! அவன் பெயரைக் கேட்டனையா? அவனையே கேள் கூறுவான்!

கம:—ஏனய்யா! உமது பெயரென்ன?

விட்ட:—சொல்லட்டுமா? சொல்லுகிறேன். ஸ்ரீமந்நாரு......

சர:—பாடினுலும்மை கல்யாணஞ் செய்துகொள்ளமாட்டேன். பெயரைச் சொல்லும் சீக்கிரம்.

விட்ட:—கல்யாணம் இன்றைக்கே பண்ணிக்கொள்ளவேண்டும். (சிரிக்கிருன்)

சர:—பத்தியெரிந்தாப் போலிருக்கிறது. உமது பெயரைச் சொல்லும் முதலில்.

விட்ட:—சதுர்வேதபண்டிதப்புலவ விட்டல்தாஸன், இந்தா பெண்ணே! என் பெயர் நன்றாயில்லை?

சர:—ஆஞ்சனேயரின் வாலைப்போல நன்றாயிருக்கின்றதே, யார் சொல்வார்கள் நன்றாயில்லையென்று.

ப்ர:—அடே! அப்பெண்களுன்னை பரிகசிக்கின்றார்கள் தெரியவில்லையா உனக்கு?

கம:—ஏனய்யா! மஹாபுத்திமானாகிய உம்மைப்பரிகாசஞ் செய்வோமா நாங்கள்?

விட்ட:—அந்தத்தான் கேட்டேன், என்னை ஒருவருமே பரிகாசஞ்செய்யமாட்டார்களே, நானென்ன பயித்தியங்குளியா என்னைப்பரிகாசஞ்செய்வதற்கு?

(நந்தகுமார் வருகிறான்.)

நந்த:—மஹாராஜா! நமது சைன்யங்களெல்லாம் கடகதூமனின் சைன்யத்தை எதிர்பார்த்துக் கொண்டேயிருக்கின்றது, கடும்போர் செய்ய.

ப்ர:—காளமேகரெங்கிருக்கின்றார்?

நந்த:—நமது சைன்யத்திற்குத்தலைவராய் போர்முகத்திலிருக்கின்றார், தாங்களே இவிடத்திலேயே இருக்கும்படியாகவுங்கூறியனுப்பினார்.

ப்ர:—அப்படியன்று, யானுமிதோ புறப்பட்டு விட்டேன்.

நந்த:—மஹாராஜா! தங்களுக்கு கொஞ்சமும் கவலைவேண்டாம். நமது போர்வீரர்கள் அதிக பராக்ரமசாலிகள், கேவலம் கடகதூமனை எதிர்க்க தாங்களேன் வரவேண்டும்?

கம:—ப்ராணநாதா! சிற்றப்பா இருக்கின்றார் பார்த்துக்கொள்வார், நீர் போர்முகஞ்செல்லவேண்டாம்.

ப்ர:—கமலா! கடகதூமனைச்சாமான்யமாய் எண்ணாதே; சைன்யபலம் பெற்று சாகஸமுமிக்ககற்றவன். நான் போர்முகத்திற்கேக வேண்டுவதுதான், நீ ஒன்றுந்தடைகூறாதே.

நந்த:—மஹாராஜா! தாங்கள் வந்தேதீரவேண்டுமென்ற அவசியமேற்பட்டால் அப்பொழுது யானேவந்து தெரிவி

ச்கின்றேன், தாங்களிப்பொழுது போர்முகம் வருவதில் காளமேகருக்கே மனமில்லை.

கம:—ப்ராணநாதா! நீங்கள் போர்முகத்திற் கேகினல் எங்களுக்குத் துணை பாரிங்கு? அன்றியும் உங்களை இவ்விடத்திலேயே இருக்கும்படி சிற்றப்பா கூறியனுப்பியிருக்கின்றார். நான் தடைகூறுவதாக எண்ணவேண்டாம். யோஜித்துப்பாருங்கள்.

ப்ர:—நந்தகுமார்! காளமேகருக்கும் நமது சைன்யங்களுக்கும் என்னல்கூறப்படும் ஒரே வார்த்தையை மட்டிற் கூறு; ஜயாபஜயம் ஒருவர்பங்கல்ல, "மானமே மானிடபூஷணம்" காளமேகரோடு உங்களை ஜயசீலர்களாய் காண எனக்குக்கடவுள் கருணைசெய்யட்டும் நீ போய் வா. (நந்தகுமார் போகிருன்.)

கம:—ப்ராணநாதா! என்னை தனியாகவிட்டுச் செல்லப்பார்த்தீரே!

ப்ர:—கமலா! நம்மரசைப்பறிகொடுத்து நாம் இக்காட்டிலலைந்து திரிவது சரியா? அன்றியும் நம்போன்ற மற்ற மன்னர்கள் நம்மை ஏளனஞ்செய்வார்களே! அதற்கிடம் வைக்கலாமா?

கம:—ப்ராணநாதா! வத்ஸராஜனல் சிற்றப்பாவுக்குக்கிடைத்திருக்கும் ஏராளசைன்யமும் ராஜபமுமிருக்க தாங்களேதற்காக போர்முகமேக வேண்டும்?

ப்ர:—கமலா! புகழுடம்பை பெறவிரும்பும் எவனும் அன்னியர் செல்வத்தைத்ருணமா பெண்ணுவான்; காரியம் பெரிதானல் பிறரின் சரீர ஒத்தாசையை விரும்புவது எவருக்கும் சகஜம், பின் சரீரத்தாலேயே அதற்கீடு செய்துகொள்ளலாம்.

(ஓர் வீரன் ஓடிவருகிருன்.)

வீர:—மஹாராஜா! மஹாராஜா!

ப்ர:—(கலவரத்துடன்) அடே! என்ன விசேஷம் சீக்கிரம் சொல்.

வீர:—ஹா! ஹா! மகாராஜா! நம்முடைய........

ப்ர:—என்னடா! சீக்கிரம்சொல் விஷயத்தை.

வீர:—நம்முடைய சைன்யமெல்லாம் சின்னாபின்னமாய்விட்டது. நந்தகுமார் செத்தான், காளமேகர் படுகாயத்துடன் ப்ராணாவஸ்தையிலிருக்கின்றார்.

ப்ர:—ஹா! ஹா! அப்படியுமாகிவிட்டதா; அடே! நீ சீக்கிரஞ் சென்று நமது படைகளுக்கு தைர்யங்கூறு. இதோ வந்துவிட்டேன் யான். (வீரன் ஓடுகிறான்).

கமலா! சீக்கிரமெனக்கு விடைகொடு! என்ன யோஜிக்கின்றாய்? இந்த சமயத்திலா நீ கண்ணீர் விடுவது? கண்ணே! கொஞ்சநேரத்தில் அவ்வளவுபேர்களையும் ஹதம்செய்து கடகதூமனையும் கைதுசெய்து வருகின்றேன். கலங்காதே கமலா! எனக்கு விடைகொடு சீக்கிரம்.

கம:—ப்ராணநாதா! இச்சமயத்தில் நான் தங்களுக்கெதைக்கூறுவேன்.

ப்ர:—கண்ணே! உன் கற்பின் மகிமையாலும் உன் மாங்கல்யப்பெருமையாலும் நான் ஜயம் பெறுவேன் என்பதிற்சிறிதும் சந்தேகமில்லை எனக்கு; உன் சந்தோஷ விடையே எனக்குத்துணைவ நம்பெரும்படை; சீக்கிரம்.

கம:—ப்ராணநாதா! ப்ராணநாதா!! (முத்தமிடுகிறாள்.)

ப்ர:—கமலா! நேரமாகிவிட்டது.

கம:—ப்ராணநாதா! ஜயத்துடன் வாருங்கள்.

ப்ர:—கண்ணே! கவலைவேண்டாம்; சரஸா! கமலா ஜாக்கிரதை. (போகிறார்.)

சர:—கமலா! உன் தந்தைக்கு ஒரு மஹானால் நல்ல சமாசாரங்கிடைத்திருக்கிறது; நமக்கு ஒன்றும்பயமில்லை, ஏன் கவலைப்படுகின்றாய்?

கம:—அம்மா! என் தந்தைக்குக்கிடைத்த நற்சமாசாரமென்ன?

சர:—முடிவில் யாவும் சுபமாகவே முடியுமென்றாராம்.

விட்ட:—இந்தாபெண்ணே! இனிமேலேனுமென்னை கலியாணஞ்செய்துகொள்வாயல்லவா? தாலியை எடுக்கலாமா?

சர:—ஐயோ! இந்த கஷ்டகாலமின்னமுமா இருந்துகொண்டிருக்கிறது; ஒழியக்காணோமே.

விட்ட:—இந்த பெண்ணே! தாலியைக் கட்டிவிடலாமா?

(சிரிக்கிறான்)

சர:—உம்மைத்தான் நாளைக்கு வாருமென்று சொன்னேனல்லவா? போம் நாளைக்கு வாரும்.

(ப்ரதாபரும் காளமேசரும் முன்னால்வர கமலா தன் கணவனை ஆவலுடன் தழுவிக்கொள்ளுகிறாள். பின்னால், கடகதூமனை அனேக வீரர்கள் விலங்கிட்டுக்கொண்டு வருகிறார்கள்)

ப்ர:—கடகதூமா! உன் மமதை அழிந்ததா? உன் பேராசையால் நீடித்திருந்த வாசத்தையும் விட்டுச்சிறை வாசத்திற்காளாகினாயே! நீ மஹா கொடியவன் உன் முகத்திலும் விழிக்கத்தகாது. வீரர்களே! இவனைக்கொண்டுசெல்லுங்கள் நமது காராக்ரஹத்திற்கு, நம்மெல்லோருக்கும் அதோபல்லக்குகள் தயாராயிருக்கின்றன; வாருங்கள போகலாம்.

காக்ஷி முடிவு.

அங்கம் 6. களம் 2.

இடம்—ப்ரதாபரின் கல்யாணமண்டபம்.

காலம்—காலே.

பாத்திரங்கள்— சில ப்ரபுக்கள் வருகிறார்கள்.

ஒருவர்:—அடாடாடா! பேஷ், ரொம்ப நன்றாயிருக்கிறது. இதுவரை நீங்கள் வந்த சமாசாரமே எனக்குத் தெரியவில்லையே. எப்பொழுதையா வந்தீர்?

மற்:—நேற்று மாலையில்தான் நம் ப்ரதாபமஹாராஜாவின் திருமணப் பத்திரிகை வந்தது. பார்த்தேன். உடனே போடடா வண்டியை என்றேன், போட்டான். கொஞ்சநேரத்திற்கு முன்புதான் இவ்விடத்திற்கு வந்து சேர்ந்தேன்.

ஒரு:—ஆமாம், ஆத்துக்கு வந்துவிட்டு வரக்கூடாதோ?

மற்:—அப்படித்தான் யோஜித்தேன். பிறகு இன்னம் இரண்டு தினங்கள்தானே இருக்கப்போகிறோமே, சாவகாசமாய் பார்த்துக்கொள்ளலாமென்று நேராக இப்படியே வந்து விட்டேன்.

ஒரு:—இன்னம் இரண்டு தினங்களா! நன்றாயிருக்கிறது; ஒரு மாதத்திற்கல்லவா இங்கே மஹாராஜா ப்ரோகிராம் போட்டிருக்கிறார்.

மற்:—என்ன! என்ன! ஒருமாதத்திற்கா! அப்படி என்ன நடக்கப்போகிறது?

ஒரு:—இவ்வளவுதானா. நீங்கள் ப்ரோகிராம் நோட்டீஸைப் பார்க்கவில்லைப்போலிருக்கிறது நாள்தவறாது சங்கீத கச்சேரிகளும் சின்னமேளங்களும் பெரியமேளங்களும் அசாத்தியமாய் போட்டிருக்கிறதே.

மற்:—எனக்கு இந்த சமாசாரம் முன்பே தெரிந்திருந்தால் ஊரில் கொஞ்சம் அரான்ஜுமெண்டு செய்துவிட்டு வந்திருப்பேன். இந்தவைபோகத்தை முழுதுமனுபவிக்க எனக்கு ப்ராப்தமில்லை. இன்றைக்கும், நாளைக்கும் யார் கச்சேரி நடக்கப்போகிறது?

ஒரு:—இன்றைக்கு 'பூலோகநாரதராம்' காரைக்குடி ப்ரதர்ஸாம், வீணைக்கச்சேரியாம்.

மற்:—அப்படியா! நாளைக்கு?

ஒரு:—பழனி ரெங்கப்பய்யர்வாளாம், ஹார்மோனியா கச்சேரியாம். பார்வைக்கு ஹார்மோனியாமாதிரியே இருக்கிறதாம். வாசிக்கும்பொழுது கேட்டால் ஒருவாத்தியத்தையும் அதற்கு நிகர்சொல்ல முடியவில்லையாம். அசாத்தியமாக வாசிக்கிறாராம்.

மற்:—அப்படியா! அவசியம் அதைகேட்கத்தான் வேண்டும். அடுத்த நாள் கச்சேரியாரோ?

ஒரு:—மஹாராஜபுரம் விச்வநாதையராம், சிறுபையனாகவிருந்தாலும் நிரம்ப நன்றாகப்பாடுகிறாராம்.

மற்:—அப்படியானால் அந்தக்கச்சேரியையும் கேட்டுத்தான் ஊருக்குப்போவேன். நீங்கள் சொல்லிக்கொண்டு வருவதைபார்த்தால் இன்னமெவ்வளவோ பெருங்கச்சேரிகள் நடக்கும்போல் தெரிகிறது. இருந்தாலும் நான் அதிக நாள் இங்கு தங்குவதற்குச் சாவகாசமில்லை. ஏனய்யா! குடிலமன்னன் சமாசாரமெவ்வாறானது?

ஒரு:—சிங்களத்திற்குப்போயிருந்தாராம். அங்கேயே இறந்து விட்டாராம். மாதம் மூன்ருகிவிட்டதே, இதுவரை தெரியாதா உங்களுக்கு?

மற்:—இறந்துவிட்டாரா, இந்த ராஜ்யத்தைப் பிடித்த நல்ல காலந்தான். முக்கியமான விஷயமொன்றையல்லவா மறந்தேன். கன்னிகாதானம் பண்ணிக்கொடுக்கவேண்டுமே, சாந்துலரைக்காணவில்லையே இன்னமும். அவர் சமாசாரமேதாவது தெரிந்ததோ?

ஒரு:—குக்ராமவாசியென்பது இப்பொழுதுதான் வெளிப்படையானது. உங்கள் கிராமத்திற்கே பத்திரிகைகள் வருவதில்லையோ அல்லது நீங்கள் பத்திரிகைகளையே படிக்கிறவழக்கமில்லையோ? சாந்துலர், காளமேகர், ப்ரதாபர், கோரபத்மன், கமலா, சரஸா இவர்களைப்பற்றிய கதையை எழுதுவதற்கென்றே அநேக பத்திரிகைகளும் நூதனமாய் ஏற்பட்டிருக்கிறதே. சாந்துலர் இவ்விடத்திற்கு வந்து ஒருமாதமாகிறது. கோரபத்மனுக்கும் கடகதூமனுக்கும சிறைவாசமாய் முடிந்த...

மற்:—இப்பொழுதுதான் நிரம்பவும் சந்தோஷம்.

(பெரியமேள முழ...

ஒரு:—ஐயா! மற்றவிஷயங்களெல்லாம் நாம் சாவகாசமாகப் பேசிக்கொள்வோம்.

(அநேக மன்னர்களும் பிரபுக்களும் ப்ரதாபரை மணக்கோலத்துடனழைத்து வந்து அவரவர்களுக்குரிய ஆசனங்களிலமர்ந்துகொள்ள அநேக ஸ்திரீகளுக்கிடையில் கமலா மணக்கோலத்துடன் வருகிருள். ப்ராதபருக்கும் கமலாவுக்கும் அதிவிமரிசையாய் மணம் நடந்து மகுடாபிஷேகமும் நடைபெறுவதோடு)

சுபம்! சுபம்!! சுபம்!!!

அகரமுதல் எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு (குறள்)